ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 4 விக்கிரம ௵ மாசி ௴ கதிர் 8

மார்ச்-1941

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	—	1
தாமஸ் எடிஸன்	—	17
அன்றாட உலகம்	—	18
சையாமைப்பற்றி	—	23
இந்தோ—சைனாவைப்பற்றி	—	24
நம்முடைய கிராமங்கள் எப்படி யிருந்தன?		25
சிலப்பதிகாரம்—புறஞ்சேரி புக்கது	மா. சர்மா, B. A. (HONS)	26

அம்மா! — "தேவகவி" 33
பத்மினி — "சங்கரகுமாரன்" 34
மதமும் தேசமும் — "நிர்வேத சைதன்யர்" 36
பீஷ்மன் (நாடகம்) — வெ. சா. 45
நாட்டிற்குப் புகழ் தந்த நாவலன் எஸ். குஞ்சிதபாதம், B.A.,L.T. 51
இரக்கங் கொள் — வ. பார்த்தசாரதி 53
பாபு ராஜேந்திர பிரசாத் — "ஒரு காங்கிரஸ்வாதி" 56

சந்தா நேயர்களுக்கு!

நமது சந்தா நேயர்களிற் சிலர், நான்கைந்து மாதங்களுக்குப் பிறகு, தங்களுக்குப் பத்திரிகை கிடைக்கவில்லையென்று எழுதுகிறார்கள். இது நமக்கு மிகவும் சிரமமாயிருக்கிறது. பிரதிமாதப் பத்திரிகையும் அந்த மாத முடிவுக்குள்ளோ அல்லது அடுத்த மாதம் முதல் வாரத்திற்குள்ளோ தங்களுக்குக் கிடைக்காவிட்டால் உடனே சந்தா நேயர்கள் நமக்குத் தெரிவித்தால், அதனை உடனே கவனிப்பதற்குச் சௌகரியமாயிருக்கும். அப்படிக்கின்றி, பல மாதங்கள் கழித்து நமக்குத் தெரிவித்தால் அவற்றை நாம் கவனிக்கமுடியாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மானேஜர்

ஜோதி

சுடர் 4 மார்ச்-1941 கதிர் 8

நாகரிகம்

சென்னை எழும்பூரில் 'மியூசியம்' என்று ஆங்கிலத்தில் அழைக்கப் படுகிற ஒரு பொருட் காட்சி சாலை இருக்கிறது. இதனைச் சாதாரண ஜனங்கள் "செத்த காலேஜ்" என்று அழைப்பார்கள். "செத்த காலேஜ்" என்று ஒன்று இருக்குமானால் "உயிர்க் காலேஜ்" என்பதும் ஒன்று உண்டோ என்று கேட்கலாம். ஆம், உண்டு. சென்னை மூர் மார்க்கெட்டிற்குப் பின்புறத்தில் "ஜூ" என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகிற மிருகக் காட்சி சாலை இருக்கிறது. இதனையே "உயிர்க் காலேஜ்" என்பார்கள். இந்த மிருகக் காட்சி சாலையில் ஒவ்வொரு பிராணியும் ஒவ்வொரு கூட்டிற்குள்ளோ அல்லது நாற்புற வேலிக்குள்ளோ வைக்கப்பட்டிருக்கும். இந்தக் கூட்டுக்கு அல்லது வேலிக்கு முன் பக்கத்தில் "இது இன்ன பிராணி, இன்ன வருஷத்தில் பிறந்தது, அல்லது இன்னாரால் பரிசாக அளிக்கப்பட்டது" என்பன போன்ற விவரங்களடங்கிய ஒரு பலகை தொங்கவிடப்பட்டிருக்கும். சில சமயங்களில், ஏன் அநேக சந்தர்ப்பங்களில், இந்த விவரங்களைப் படித்தபிறகுதான், நாம், இஃது இன்ன பிராணியென்று தெரிந்து கொள்ளவேண்டியிருக்கும். இதற்கு முன்னர், இவைகளில் பலவற்றை நாம் பார்த்திருப்போமாயினும், நாற்புற பந்தத்திற்குட்பட்டிருப்பதனாலோ, அல்லது விருப்பமான உணவு தேவையான அளவு இவைகளுக்குக் கிடைக்காததினாலோ இவைகளை எளிதில் அடையாளங் கண்டு பிடித்துக்கொள்ள முடிவதில்லை. இவற்றில் பெரும்பாலன, உருப்படிகளாகத்தான் இருக்கின்றன; உருவங்களாகக்கூட இல்லை. பந்தத்திற்குட்பட்ட யாவும், மனிதன்கூட, இப்படித்தான் இருக்கமுடியும் என்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டு போதும்.

இந்தச் 'செத்த காலேஜை'யும் 'உயிர்க் காலேஜை'யும் நமது மனத் திரையில் படமாக வரைந்துகொண்டு பொருந்துகிறதா வென்று பார்ப்பதற்காக, 'இந்திய நாகரிகம்' என்றும் 'மிக மிகப் புராதன நாகரிகம்'என்றும் மிகப் பெருமையோடு பேசிக்கொள்கிறார்களே அதனைச் 'செத்த காலேஜி'லும், இந்தியர்களை, முப்பத்தைந்து

கோடியிலிருந்து நாற்பது கோடி பேராகப் பெருகியிருக்கும் இந்தியர்களை 'உயிர்க் காலேஜி'லும் வைத்துப் பார்த்தோம். மிக லட்சணமாகப் பொருந்துகிறது. நாம் ஆச்சரியமடைந்தோம். ஆனால் இப்படிப் பொருத்தம் பார்ப்பது, சிலருக்கு அகௌரவமாகப் படலாமோ என்னவோ? இந்தப் பொருத்தமில்லாமற் படிக்குச் செய்துவிட வேண்டுமென்பதற்காகத்தான், பொருத்தமிருக்கிறதென்று சொல்லிக் காட்டுகிறோம். ஏனென்றால், அப்பொழுதுதான், பொருந்துவதற்குக் காரணமாயுள்ள கோளாறுகளையெல்லாம் நாம் அகற்ற முடியும். வீட்டிலே குப்பை கூளங்கள் குவிந்து கிடக்கின்றன வென்று சொல்லி குப்பை மேட்டோடு ஒப்பிட்டுக் காட்டுவது, அணுக்களாகச் சிதறிக்கிடக்கும் தூசுகளை அப்புறப்படுத்த வேண்டுமென்பதற்குத்தான்.

உண்மையிலேயே நாம் நண்பர்களைக் கேட்கிறோம், நம்முடைய நாகரிகத்தையும், நம்மையும்—அதாவது நம்முடைய தற்போதைய நிலைமையையும்—கண்டு நாம் பெருமைகொள்ளமுடியுமா வென்று. நமது புராதன நாகரிகத்தின் பெருமையை நாமோ அல்லது அந்நியர்களோ தெரிந்துகொள்ள வேண்டுமானால், அஜண்டா குகைக்கும், சித்தன்ன வாசல் (புதுக்கோட்டை) சித்திரத்திற்கும், பிருகதீசுவரர் (தஞ்சாவூர்) ஆலயத்திற்கும் இப்படியாக யாத்திரை போகவேண்டியிருக்கிறது. நம்மைப் பார்த்து, நமது தற்கால நிலைமையைப் பார்த்து, நாம் பெருமை வாய்ந்த ஒரு நாகரிகத்தின் சந்ததிகளென்று திருப்தியோடு மனச்சாட்சியின் மீது கைவைத்துச் சொல்லிக்கொள்ள முடியுமா? மற்றவர்கள், நமது புராதன நாகரிகத்திற்காக நம்மை, ஒரோ ஒரு சமயம் சிலாகிக்கிறார்களென்று சொன்னால் அதைக் கண்டு நாம் சிறிதுகூடச் சந்தோஷப் படமாட்டோம். நம்மைப் பெருமைப்படுத்திக் கொண்டே நம்மைச் சாண்டினால்தான், சாண்டப்படுவதாக நாம் உணர மாட்டோம் என்பதற்காகவே, இப்படி வாடிப்போன மலர்களால் நம்மை அலங்கரிக்கிறார்களென்றே நாம் கொள்கிறோம். உண்மையிலேயே, நாம் பெருமை வாய்ந்த ஒரு நாகரிகத்தின் பாரம்பரையை அப்படியே பின்பற்றி வந்திருப்போமானால், 1,575,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள நமது நாடு நம்முடைய ஆதிக்கத்திலேயே இராதா? நம்முடைய கலைஞானச் செல்வங்கள், அந்நிய நாட்டுப் பொருட்காட்சி சாலைகளில் அலங்காரப் பொருள்களாக வீற்றிருக்குமா? நம்முடைய சரித்திரத்தை அந்நியர்கள் எழுதுகிறார்கள்; நாம் அதனை மொழி பெயர்த்துப் படிக்கிறோம். நம்முடைய இலக்கணத்தை அந்நியர்கள் வரைந்து காட்டுகிறார்கள். நாம் அதனை உருப்போடுகிறோம். நமது தேசத்தைப் பற்றிய சரித்திரம் நமக்குத் தெரியாது. ஏன்? பூகோளங்கூடத் தெரியாது. நம்மிலே எத்தனை பேருக்கு, தன்னுடைய சொந்தக் கிராமத்தினுடைய சரித்திரம் தெரியும்? தன்னுடைய ஜில்லாவின் பூகோளம் தெரியும்? நம்முடைய ஆசார விவகாரங்களைப்பற்றி, நம்முடைய சொந்த பழக்க வழக்கங்களைப்பற்றி நாம் எவ்வளவு தூரம் தெரிந்து கொண்டிருக்கிறோம்? கிராமாந்தரங்களில் இராக் காலத்தில், மாட்டு வண்டிகள் சரக்குகளை ஏற்றிக்

கொண்டு வரிசையாகச் செல்லும். இந்த வண்டிகளிலே பூட்டப்படுகிற மாடுகளை, ரோதையிலே விட்டு விட்டால், அவை கண் மூடிக்கொண்டே, தாங்கள் நடந்து செல்கிறோமென்பது தெரியாமலே, பாரத்தை இழுத்துக் கொண்டு செல்லும். நாம்கூட, வாழ்க்கையாகிற பாரத்தை—ஆம்; நமது ஜனங்களிற் பெரும்பாலோருக்கு இன்றைய வாழ்க்கை ஒரு பெருஞ் சுமைதானே!—நம்மை யறியாமலே இழுத்துக்கொண்டு செல்கிறோம். நாம் சுதந்திர மில்லாதவர்களா யிருப்பதில் ஆச்சரியமில்லையே. எப்பொழுது நாம் சுதந்திர புருஷர்களா யில்லையோ, அப்பொழுதே நமக்கு நாகரிக அந்தஸ்து போய்விட்டது. அப்படியானால் நாம் எங்கே யிருக்க வேண்டியவர்கள்? நேயர்கள் பொருத்தம் பார்த்துக் கொள்ளவேண்டுகிறோம்.

இந்தியாவில் பார்க்க வேண்டிய விஷயங்கள் மூன்று என்றும், முதலாவது ஹிமாலயம், இரண்டாவது தாஜ்மகால், மூன்றாவது காந்தி யென்றும் யாரோ ஓர் அமெரிக்கன் கூறினானென்று, நமது நாகரிகத்தைப் பெருமைப் படுத்திப் பேசுகிற வகையிலே சிலர் பேசுகிறார்கள். இன்னுஞ் சிலர், உலகத்தின் எந்த மூலை முடுக்கிற்குச் சென்றாலும், இந்தியாவினுடைய பெயர் தெரியாமற் போனாலும் காந்தியடிகளுடைய பெயர் தெரிந்திருக்கிறதென்று சொல்கிறார்கள். இவையெல்லாம் காந்தியடிகளுக்குப் பெருமை தரக்கூடிய விஷயந்தான். இதற்காக நாம் அளவிலாத ஆனந்தம் அடைகிறோம். ஆனால் நாற்பதுகோடி மக்களுக்கு இது சிறுமையில்லையா? ஐயாயிரம் வருஷத்திற்கு மேற்பட்ட புகழ் நிரம்பிய வயதோடு கூடிய இந்தியாவை எழுபது வயதான காந்தியடிகளின் மூலம் உலகம் தெரிந்து கொண்டிருக்கிறதென்று சொன்னால், அது காந்தியடிகளுக்குப் புகழே தவிர, இந்தியாவுக்குப் புகழல்லவே; இகழ்ச்சி கூட அல்லவோ! அப்படியானால் இந்தியாவின் இந்த ஐயாயிர வருஷ வாழ்வும் குடத்திலிட்ட விளக்குப் போலல்லவோ ஆகி விட்டது? நாற்பது கோடி மக்களாகிய நமக்கு மனித அந்தஸ்து கிடையாதென்றல்லவோ ஏற்பட்டு விட்டது! ஹிமாலயத்திலேயோ, தாஜ்மகாலிலேயோ, காந்தியடிகளிலேயோ இந்தியா இல்லை. இந்தியாவிலேதான் ஹிமாலயமும், தாஜ்மகாலும் இருக்கின்றன; காந்தியடிகளும் இருக்கிறார். இதனை மட்டும் நாம் உணர்ந்து கொண்டு விட்டால், நாற்பது கோடி மக்களும், ஹிமாலயத்தைப் போன்ற உறுதியுடையவர்களாகவும், தாஜ்மகாலைப் போன்ற அழகுடையவர்களாகவும், காந்தியடிகளைப் போன்ற மகாத்மாக்களாகவும் ஆகிவிடுவோம். இது நிச்சயம்.

இந்தியாவின் புராதன நாகரிகப் பெருமையைப் பற்றி அந்நியர்கள் எவ்வளவு மேண்டுமானாலும் புகழ்ந்து பேசலாம். ஆனால் இப்பொழுது நம்மைப் பற்றி அவர்கள் என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்களென்பதற்குச் சில உதாரணங்களை மட்டும் இங்கு எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

பிரிட்டிஷ் ஆளுர் வர்க்கத்தினருடைய மனப்போக்கின் உண்மையான பிரதிநிதியாக லார்ட் கர்ஸனைத் தவிர

வேறு யாரும் இருக்க முடியாது. இந்தியாவில், கவர்னர்—ஜெனரல்களாக இருந்து நல்ல பெயரெடுத்துக் கொண்டு போனவர்கள் பலர். ஆனால் இவர்களில் 'யாரும், இந்தியாவின் புராதனப் பெருமையைக் காட்டக் கூடிய சின்னங்களைப் பத்திரப்படுத்தி வைப்பதிலே அதிக சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை. லார்ட் வில்லியம் பெண்டிங்க் என்ற ஒரு கவர்னர்-ஜெனரல், தாஜ்மகாலை சுமார் நாலரை லட்சம் ரூபாய்க்கு, யாராவது ஒரு வியாபாரிக்கு விற்றுவிடக் கூட யோசித்தானும். லார்ட் கர்ஸன் இப்படியெல்லாம் செய்யாமல், இந்தியாவின் புராதன நாகரிகத்தைப் பொருட் காட்சிப் பொருளாகப் பத்திரப்படுத்தி வைப்பதிலே அதிக அக்கறை எடுத்துக் கொண்டான். ஆனால் தற்கால இந்தியாவைப் பற்றி அவன் என்ன கருதினான் தெரியுமா? 'பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் ஐக்கியப் பட்டிருப்பதில் உண்டாகிற பெருமையைப் பாராட்டுஞ் சக்திகூட இந்தியர்களுக்கு இல்லையே' என்று ஆச்சரியப்பட்டான். இந்தியர்களுக்குத் தனித்துவ சக்தியே கிடையாதென்று 'பிரபு திருவுளங் கொண்டு விட்டார்!'

ஜெர்மனியின் 'இரும்பு சான்ஸலராக' இருந்த பிஸ்மார்க், தனது பாலிய தசையில் இந்தியாவில் உத்தியோகம் பார்க்க வேண்டுமென்று ஆசை கொண்டான். அவன் கூறுகிறான்:—"இங்கிலீஷ்காரர்களுடைய ஆதிக்கத்தின் கீழுள்ள இந்தியாவில் ஓர் உத்தியோகம் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டேன். பிறகு எனக்கு ஒரு நினைவு வந்தது. 'ஐயோ, இந்தியர்கள் எனக்கு என்ன கெடுதல் செய்து விட்டார்கள்?' என்று அந்த ஆசையை விட்டு விட்டேன்." இந்தியர்களுக்கு இரக்கங் காட்டுகிற முறையிலே, இந்தியர்களின் தற்கால ஸ்திதியை பிஸ்மார்க் எவ்வளவு அழகாகச் சுட்டிக் காட்டியிருக்கிறான்!

இந்தியாவில் ஆங்கிலக் கல்வி முறையை ஸ்தாபித்த மெக்காலே என்பவன், இந்தியர்களின் கலாசார விஷயங்களில் அதிக பரிச்சயமுடையவனென்று பெயரெடுத்தவன். அவன், ஆங்கிலக் கல்வியைப் பரப்ப வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்துகிறபோது "ஹிந்துக்களின் சரித்திரம் பொய்; வான சாஸ்திரம் பொய்; தத்துவ சாஸ்திரம் பொய்; மதமும் பொய். * * * மேற்கு ஐரோப்பிய பாஷைகள், ருஷ்யாவைச் சீர்திருத்தின. தார்த்தாரியர்களுக்கு (நாடோடிகளாகத் திரிகிற பெயர் வழிகளை நாம் இப்பொழுது 'தத்தாரிகள்' என்று அழைப்பது இந்தச் சொற்றொடரிலிருந்துதான்.) நன்மையைச் செய்த இந்தப் பாஷைகள், ஹிந்துக்களுக்கும் நன்மையைச் செய்யும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை."

நமது நிகழ்கால நிலையைப் பார்த்து, நமது சென்றகால நல்வாழ்வு எவ்வளவு திரணமாக மதிக்கப்படுகிறது பார்த்தீர்களா? சுதந்திரமில்லாதவர்களுடைய எண்ணத்திற்குக் கூட மதிப்பில்லையென்பது இதனால் தெரிகிறது. எனவே, முதலில் நம்மை நாமே தெரிந்துகொள்ள வேண்டும். "விளக்கை உன்மீது திருப்பிக் கொண்டு உன்னைப்பார்; உன்னை

மறைத்துக்கொண்டு, அதனை மற்றவர்கள் பக்கம் திருப்பாதே" என்பது வாசகமல்லவா?

நாகரிகம், நாகரிகம் என்று சொல்கிறார்களே, அஃது என்ன? அது தனிப்பட்டதொரு வஸ்துவுமில்லை; வியக்தியுமில்லை. ஆனால் அது நம்மினின்று பிரிந்து தனியாக நிற்பதுமில்லை. எந்த அளவுக்கு நம்முடைய வாழ்வும் தாழ்வும் இருக்கிறதோ அந்த அளவுக்கு நாகரிகத்தின் வாழ்வும் தாழ்வுமிருக்கிறது நமது அகவாழ்வும் புறவாழ்வும் ஒன்றுபட்டிருக்கிற நிலைதான் நாகரிக நிலை. மகா அலெக்ஸாந்தர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தபோது, இங்கிருந்து சில மகான்களை கிரீஸ் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு போக விரும்பினான். சிந்து நதிக்கரையில் ஒற்றையாடையுடன் கடுந்தவம் புரிந்துகொண்டிருந்த ஒரு மகானைப் பார்த்துத் தன்னோடு வருமாறு கூறினான். ஆனால் அந்தத் தவசி, தனது தற்போதைய இருப்பிடமே சௌக்கியமாயிருக்கிறதென்று சொல்லி வர மறுத்து விட்டான். அலெக்ஸாந்தர் கோபங்கொண்டான். 'என்னோடு வராவிட்டால் உன்னைக் கொன்றுபோடுவேன்' என்றான். அதைக்கேட்டு அந்தத் தவசி உரக்கச் சிரித்துவிட்டான். அலெக்ஸாந்தருக்கு இன்னும் அதிக கோபம் வந்துவிட்டது. 'ஏன் சிரிக்கிறாய்' என்று கேட்டான். முனிவன், 'உன்னைப்போல் பெரும்பொய் சொல்வாரை இதுவரை நான் பார்த்ததில்லை. என் தேகத்தை வேண்டுமானால் நீ துண்டு துண்டாக நறுக்கிப் போடலாம்; ஆனால் என் ஆத்மாவை நீ கொல்ல முடியாது. ஏனென்றால் அஃது அழியாதது' என்றான். இதில் மேற்படி தவசியை, அரை ஆடையுடன் இருக்கிற காரணத்தினால் அநாகரிகனென்று சொல்ல முடியுமா? அல்லது அலெக்ஸாந்தரைத் தான் நாகரிகன் என்று கூற முடியுமா? காட்டுமிராண்டி ஜாதியாரிற் சிலர் ஒருவரையொருவர் சந்திக்கிறபோது ஒருவர் மூக்கை மற்றொருவருடைய மூக்கோடு தேய்த்துக் கொள்கிறார்கள். இன்னுஞ் சிலர் உதட்டில் ஆபரணமணிந்து கொள்கிறார்கள். நாம் ஒருவரையொருவர் சந்திக்கிறபோது கைலாகு கொடுக்கிறோம். நம்மிலே சிலர் காதிலே ஆபரணமணிந்துகொள்கிறார்கள். இதனால் முன்னவர்களை அநாகரிகர்களென்றும், நாம் நாகரிகர்களென்றும் சொல்லமுடியுமா? ஆகாய விமானத்திலே பறந்து செல்கிறவன் அநாகரிகனாக இருக்கலாம்; கட்டை வண்டியிலேறிச் செல்கிறவன் நாகரிக புருஷனாயிருக்கலாம். ஒருவனுடைய புறவாழ்வைக் கொண்டு, அல்லது அவன் உபயோகிக்கிற புறசாதனங்களைக் கொண்டு மட்டும் அவனுடைய நாகரிக நிலையைக் கணித்துவிட முடியாது. அதேமாதிரி "என் அறிவு பெருகியிருக்கிறது; அல்லது இருதயம் விசாலமடைந்திருக்கிறதென்று" சொல்லிக்கொண்டு, புறசாதனங்களை அநுபவியாமலோ அல்லது பிறரை அநுபவிக்க விடாமலோ செய்து குகையிலே பதுங்கி வாழ்கிறானே அவனும் நாகரிக புருஷனில்லை. அகமும், புறமும் ஒத்து வாழ வேண்டும். அதுதான் நாகரிகம்.

நாகரிகம் என்பது சமுதாய ஒழுங்கு. சமுதாயமானது ஒழுங்காக மட்டும் இருந்தால் போதாது. அது

சதா சலித்துக்கொண்டேயிருக்க வேண்டும். அப்பொழுதுதான் அது சிருஷ்டித்துக்கொண்டேயிருக்க முடியும். ஒழுங்காகவும் ஓயாமலும் சுழன்றுகொண்டிருக்கிற யந்திரத்திலிருந்து எப்படி மின்சார சக்தி உற்பத்தியாகி பல வர்ண விளக்குகளாக நமக்குக் காட்சி கொடுக்கின்றதோ அதைப்போலவே சமுதாய யந்திரமானது அரைபட்டுக்கொண்டிருந்தால்தான், அதிலிருந்து ஜீவசக்தி உற்பத்தியாகும். அது, காவியங்களாகவும் ஓவியங்களாகவும், மனித வளர்ச்சிக்கான இன்னும் பல சாதனங்களாகவும்பரிணமிக்கும். இப்படிப்பட்ட சிருஷ்டிகள் பயனுள்ள சிருஷ்டிகளாயிருப்பதோடுகூட மீண்டும் அந்தச் சமுதாயத்தையே போயடைகின்றன. இதனால் அந்தச் சமுதாயம் உரம்பெற்றும் வளர்ச்சியடைந்துகொண்டும் போகிறது. ஒரு மேனாட்டு ஆசிரியன், நாகரிகத்தை ஒரு களஞ்சியத்திற்கு ஒப்பிடுகிறான். ஒரு சமுதாயத்தின் கலாசாரங்கள், ஞான இதிகாசங்கள், பழக்க வழக்கங்கள், அறநெறிகள் முதலியனவெல்லாம் சேர்ந்திருக்கிற ஒரு தொகுப்பே நாகரிகமென்றும், மேற்படி சமுதாயத்தைச் சேர்ந்த பிரதி மனிதனும் தனது அகபுற வளர்ச்சிக்கான ஆகாரத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடிய விதமாக இந்தத் தொகுப்பு அல்லது களஞ்சியம் இருக்க வேண்டுமென்றும் இவன் கூறுகிறான். ஒரு சமுதாயமானது தனி மனிதனுடைய வளர்ச்சிக்குத் துணை செய்கிறது. அந்த உபகாரத்தையடைந்ததற்காகப் பிரதி மனிதனும், தனது பூர்ண சக்தியையும் சமுதாய வளர்ச்சிக்கு உதவுகிறான். சமுதாயத்திற்கும் தனி மனிதனுக்குமுள்ள இந்தப் பரஸ்பர சம்பந்தம் எப்பொழுது குறைய ஆரம்பிக்கிறதோ அப்பொழுதே அந்தச் சமுதாயத்தினுடைய, அல்லது தேசத்தினுடைய நாகரிக தசையும் அஸ்தமிக்க ஆரம்பித்துவிடுகிறது.

ஒரு ஜாதி, நாகரிகமாயிருக்கிறதென்று சொன்னால் அதற்கு நான்கு லட்சணங்கள் இருக்க வேண்டும். (1) அரசியல் சுதந்திரம் (2) ஒழுங்கான பொருளாதார அமைப்பு (3) தரும நியாயத்தை அனுசரித்த பழக்க வழக்கங்கள் (4) தொடர்ந்து வளர்ந்து வந்துகொண்டிருக்கிற இலக்கியம், கலை முதலியன. இந்த நான்கு லட்சணங்களில் ஏதேனும் ஒரு லட்சணம் குறைவுபட்டால்கூட அந்த அளவுக்கு அந்த நாகரிகம் அவலட்சணமடைந்துபோகிறது. ஆனால் எந்த ஒரு நாகரிகமும் திடீரென்று அழிந்துபடுவதில்லை. கிருஷ்ணபட்சத்துச் சந்திரன்மாதிரி காலக் கிரமத்தில் தேய்ந்து மறைந்துபோகிறது இப்படி ஒரு நாகரிகம் இறந்துபடுமானால் அதற்குச் சில காரணங்கள் உண்டு. அவற்றை முறையே வரிசைப்படுத்திக் கூற விரும்புகிறோம்.

1. பௌதிக சக்திகளினால் ஏற்படுகிற ஆபத்து. அதாவது பூகம்பம், எரிமலைத் தோற்றம், திடீரென்று சீதோஷ்ண நிலை விபரீதமாக மாறிவிடுதல் முதலியவைகளினால் ஏற்படுகிற ஆபத்து.

2. தொத்து நோய்கள் ஏற்பட்டு, அது காரணமாகப் பெரிய ஜனச்சேதம் உண்டாதல்.

3. ஜனங்களுடைய ஜீவனத்திற்குத் தேவையான விவசாய நிலங்கள் இல்லாத காரணத்தால் விவசாயத் தொழில் நசித்துவிடுதல்; இதனால் அந்நியச் சாமான்களின் உபயோகமும் அவசியமும் அதிகமாதல்.

4. பொருளுற்பத்திக்குத் தேவையான மூலப் பொருள்களில்லாமலிருத்தல்; அல்லது இருக்கும் மூலப் பொருள்களை உபயோகியாமலிருத்தல்.

5. உள்நாட்டு வெளி நாட்டு வியாபாரப் பாதைகள் சீர்குலைந்து போவதன் காரணமாக வியாபாரம் சுருங்கிப் போதல்.

6. ஜனங்கள் கிராமங்களைப் புறக்கணித்துவிட்டு, நகரங்களில் அதிகமாகக் குடியேறுதல்.

7. பரம்பரையாக அனுஷ்டிக்கப்பட்டு வரும் ஆசார விவகாரங்களை துச்சமாகக் கருதி, அவற்றின் ஆழ்ந்த பொருளை அறியாமல் அவற்றைத் துறந்துவிடுதல்.

8. சிற்றின்ப சுகங்களில் அதிகமாக ஈடுபட்டுவிடுதல்.

9. உலகாயதக் கொள்கைகள், எல்லாம் துக்கம், எல்லாம் அநித்தியம் என்ற கொள்கைகள், சும்மாயிருப்பதே சுகம் என்பனபோன்ற கொள்கைகள் முதலியன ஜனங்களுடைய எண்ணத்தில் இடம் பெற்றுவிடுதல்.

10. சரியான தலைவர் இல்லாமை.

11. சமுதாயத்தினுடைய செல்வத்தில் பெரும் பகுதி ஒரு சிலரிடத்தில் நிலைத்துப் போய், அது காரணமாகத் தேசத்தில் பணமுடை, ஜாதிச் சண்டை, பரஸ்பர துவேஷம் முதலியன உண்டாதல்.

இத்தகைய காரணங்கள் ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்வது அந்த நாகரிகத்தைப் பின்பற்றுவோருடைய கடமை. இதனால்தான், நாகரிகமென்பது நித்தியமானதல்ல; அழியக்கூடாததல்லவென்பர் அறிஞர். நாகரிகத்தின் மீது அவ்வப்பொழுது படிந்துவிடும் மாசுக்களைத் துடைத்து, அதனைக் காப்பாற்றி வருவது ஒவ்வொரு தலைமுறையினருடைய கடமை. நாகரிகம் ஒரு விளக்கு மாதிரி, ஆனால் நந்தா விளக்கல்ல. விளக்கை, திரியைப் போட்டு, எண்ணெயை ஊற்றி ஏற்றிவிட்டு, அதன் அடியிலேயே நிம்மதியாகப் படுத்துறங்கி விடுவோமானால், அது எரிந்துகொண்டேயிராது; அணைந்து போகும். அதனை அவ்வப்பொழுது எண்ணெய் ஊற்றி, திரியைத் தூண்டிவிட்டுக் கவனித்துக்கொண்டிருக்க வேண்டும். இப்படித்தான் நாகரிகமும்.

பொதுவாக, நாகரிகமென்பது ஒரு ஜாதிக்கோ, அல்லது ஒரு தேசத்திற்கோ, அல்லது ஒரு காலத்திற்கோ மட்டும் உரிமையான பொருளன்று. மனிதர்களுடைய வளர்ச்சியில் எந்த நிலையை நாகரிகமென்று சொல்வதென்னும் விஷயத்தில் அறிஞர்களுக்குள் அபிப்பிராயபேதம் இருந்துவருகிறது. உதாரணமாகக் கல்வி என்னும்

சொல்லானது, கல் என்னும் அடியாகப் பிறந்ததென்றும், கல் என்றால் கல்லுதல், தோண்டுதல் என்பது அர்த்தமென்றும், கல்லுதலாவது, விவசாயத்தையே குறிக்கிறதென்றும், கல்விமான் என்று சொன்னால் விவசாயந் தெரிந்தவனென்பதுதான் பொருளென்றும் எனவே விவசாயந்தான் நாகரிகத்தின் முழுச் சின்னம் என்றும் ஒரு சாரார் கூறுவர். இங்ஙனம் கூறுவோர், பெரும்பாலும் கீழ் நாட்டாராகவே இருப்பதைக் காணலாம். "நகரம்" என்னும் சொல்லினடியாகப் பிறந்ததே நாகரிகமென்றும், நகரத்தில் வசிப்போர் அனைவரும் நாகரிகர்களென்றும் வேறொரு சாரார் கூறுவர். இங்ஙனம் கருதுவோர் பெரும்பாலும் மேனாட்டாராயிருப்பதைக் காணலாம். எனவே, அவரவர்களுடைய தேசத்தின் சீதோஷ்ண நிலை, இயற்கை வசதிகள், பொருளாதார சௌகரியங்கள் முதலியவற்றைப் பொறுத்து நாகரிகத்தைப்பற்றி அபிப்பிராயங் கொள்கிறார்களென்பது தெரிகிறது. ஆனால் இந்த அபிப்பிராய வேற்றுமைகளில் இப்பொழுது நாம் கவனஞ் செலுத்தாமல், இந்திய நாகரிக சோலையில் சிறிது உலவி வருவோம்.

ஒரு காலத்தில் இந்திய நாகரிகம் பூவும் காயும் நிறைந்த ஒரு பெருஞ் சோலையாக இருந்தது. இந்தச் சோலையின் நிழலில் அநேகர் விச்ராந்தியடைந்திருக்கிறார்கள். அநேக பட்சிகள் சோலையின் வளப்பத்தில் மோகங் கொண்டு பறந்து வந்து தங்களுக்கு வேண்டிய ஆகாராதிகளைத் தின்று விட்டுச் சென்றிருக்கின்றன. இந்தியர்களாகிய நாம், பலருக்கும் இந்தச் சோலை பயன் படுகிறதேயென்று மகிழ்ச்சியடைந்துபோய், சோலையின் நிழலிலே படுத்துத் தூங்க ஆரம்பித்துவிட்டோம், நம்மவர்களிலே யாராவது நம்மைத் தட்டி எழுப்பினால் அவர்களோடு சண்டை போட்டோம். விளைவு என்ன? நமது நாகரிகம் கூந்தலற்ற தலைமாதிரி ஆகிவிட்டது. நமது நாகரிகச் சோலையானது அந்நியர்களுடைய கூடார மைதானமாகி விட்டது.

மோஹென்ஜோ—தாரோ, ஹாரப்பா போன்ற இடங்கள் தோண்டியெடுக்கப்பட்ட பிறகு, இந்திய நாகரிகத்தின் புராதனம் இன்னும் அதிக ஆழமாகப் போயிருக்கிறதென்பதையும் அதன் பெருமை இன்னும் உயர்ந்துபோயிருக்கிறதென்பதையும் நாம் ஒப்புக்கொள்கிறோம். இந்தியாவின் புராதன இலக்கியங்கள், மேனாட்டுப் பாஷைகள் பலவற்றுள்ளும் இன்னும் அதிகமாக மொழி பெயர்க்கப்பட்டு வருகிறதென்பது நமக்குப் பெருமைதான். சென்ற நூற்றாண்டிலிருந்தே இந்தப் பெருமை நமக்கு ஏற்பட்டுவிட்டது. காளிதாசன் இயற்றிய சாகுந்தல நாடகத்தைக் கண்டு, கெதே (Goethe) என்ற ஜெர்மானியப் புலவன் அப்படியே சொக்கிப் போயிருக்கிறான். அவன் மெய் மறந்து பேசுகிறான்:—

இளமையின் மலரே!
முதுமையின் கனியே!
ஆத்மாவின் ஆனந்தமே!
அதன் விருந்தே!
மண்ணும் விண்ணும்
ஒன்றிய பெயர் படைத்தோய்!
நீதான் சாகுந்தலம்!
இந்த ஒருமொழியில் அனைத்தும்
அடங்கிவிட்டது!

ஷோப்பன்ஹார் (Schopenhaur) என்ற மற்றொரு ஜெர்மன் ஞானி உபநிஷதங்களைப்பற்றிப் பேசுகிறபோது, "உபநிஷதங்களைப் போல் நன்மையளிப்பதும் ஜீவசக்தியை ஊட்டுவதுமான நூல் உலகத்திலேயே வேறொன்றுமில்லை. என் வாழ்க்கையில் சாந்தியைக் கொடுத்தது அது; என் மரணத்தில் சாந்தி கொடுப்பதும் அது" என்று வியந்து பாராட்டியிருக்கிறான். நமது மகா காவியங்களாகிய ராமாயணம், மகா பாரதம் இவைகளுக்கு முன்னர், ஹோமர் யாத்த (Iliad) இலியாத்தும், வர்ஜில் பாடிய (Aeneid) ஏனீயத்தும், கெதே இயற்றிய (Faust) பவுஸ்டும் மின்மினிப் பூச்சிகள் மாதிரியென்று மேனாட்டுப் புலவர்கள் பணிவோடு அங்கீகரித்துக்கொண்டிருக்கிறார்கள். திருக்குறளின் அருமையறிந்து, அதனைச் சுமார் 160 வருஷங்களுக்கு முன்னரேயே, லத்தீன், ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம் முதலிய பல்வேறு பாஷைகளில் மொழி பெயர்த்திருக்கிறார்கள் நமது புராதன இலக்கிய உலகம் இவ்வளவு விசாலமாகவும் பிரகாசமாகவும் இருந்திருக்கிறது. ஆனால் இன்று கல்வியில் பிற்போக்காயுள்ள தேசம் இந்தியாதான்! நூற்றில் எட்டு பேருக்குக்கூட எழுத்து வாசனையில்லையென்று ஜன கணித அறிக்கை ஆதாரத்தோடு குறிப்பிடுகிறது!

இந்திய நாகரிகத்தின் சிறப்பியல்புகள் என்ன?

1. இந்திய நாகரிகம், மனிதனை மனிதனாக மதித்து வந்தது. யந்திரமாகக் கருதவில்லை. மிருகமாகவும் ஆக்கவில்லை.

2 பிரதி மனிதனும், குடும்பம், தேசம் என்ற குறுகிய எல்லையைக் கடந்து சென்று உலகத்தோடு ஒட்ட ஒழுகவேண்டுமென்ற எண்ணத்தை வற்புறுத்தியது.

3. எத்தகைய நாகரிகத்தையும் தன்னோடு ஐக்கியப்படுத்திக் கொண்டுபோகும் ஆற்றல் படைத்தது.

4. துறவு, சேவை என்பவைதான் மனித வாழ்க்கையின் லட்சியமென்பதை வற்புறுத்தியது.

இத்தகைய உயர்ந்த அம்சங்களைக் கொண்டிருந்ததனால்தான், இந்தியா, ஒரு காலத்தில் உலகத்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் ஞான விளக்கை ஏந்திச் சென்றது. தேசியாஸ், மெகஸ்தனீஸ் போன்ற கிரேக்கர்களும், பாஹியான், ஹியூன்த்ஸாங் போன்ற சீனர்களும் இந்தியாவுக்கு வந்து இந்திய நாகரிகத்தை அறிந்து கொண்டு போய், தங்கள் தங்கள் நாட்டிலே பரப்பினார்கள். இந்தியாவிலிருந்து சென்ற தர்மப் பிரசாரகர்கள், அந்நியநாட்டு அரசவை

களிலே கௌரவ ஸ்தானம் பெற்று விளங்கினார்கள்.

ஆனால் இவ்வளவு சிறப்பான நாகரிகம், நம்மைக் கை கொடுத்துக் காப்பாற்றவில்லை; நம்மைச் சுதந்திர புருஷர்களாகத் தலைநிமிர்ந்து நிற்கச் செய்யவில்லை. நாம் இன்று நேற்று அடிமைகளாகவில்லை; இரண்டாயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு மேலாகவே அடிமைகளாக இருக்கிறோமென்பதை அன்பர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறோம். தெய்வமானது நம்மைச் சாசுவதமான அடிமைத்தனத்திலேயே இருத்தி வைக்கத் தீர்மானித்துவிட்டதோ என்னவோ தெரியவில்லை. இப்படி இரண்டாயிரத்து முந்நூறு வருஷங்களுக்குமேல் நாம் அடிமைத்தனத்தில் இருப்பதால்தான் ஸர் ராதாகிருஷ்ணன் கூறுகிறமாதிரி, நமக்கு அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறவேண்டுமென்ற எண்ணங் கூடப் போய்விட்டது போலும்!

எந்த நாகரிகம், எந்தக் கலை ஞான பரம்பரை, அவை எவ்வளவு மகத்துவம் வாய்ந்ததாகவும் பூர்விகமுடையதாகவு மிருந்தபோதிலும், நம்மை ஆழமான அடிமைத்தனத்திலே ஆழ்த்திவிட்டிருக்குமானால், நித்திய தரித்திரத்திலே உழன்றுகொண்டிருக்கும்படி செய்துவிட்டிருக்குமானால், அந்த நாகரிகம் அல்லது கலைஞான பரம்பரை நமக்குத் தேவையில்லை. நம்மால் முடியுமானால், ஒன்று அவற்றைச் சீர்திருத்தி யமைக்கவேண்டும். இல்லாவிட்டால் அவற்றிற்கு முற்றுப் புள்ளி யிட்டுவிடவேண்டும்.

நமது நாகரிகம் நம்மை ஏன் இந்த ஸ்திதிக்குக் கொண்டுவந்துவிட்டது? இதனைச் சிறிது விஸ்தரித்து ஆராய்வதே நாம் இங்கு எடுத்துக்கொண்ட கடமை.

புத்தரின் அருள்வாழ்வு அஸ்தமித்தது; இந்தியாவின் அடிமை வாழ்வு உதயமாகிவிட்டது ஹிந்து மதத்தின் மீது படிந்திருந்த சில மாசுக்களைத் துடைக்க அவர் விரும்பினார். ஆனால் மாசுக்கள்தான் அதிகமாகப் படிந்துவிட்டன. புத்த மதம், எப்பொழுது அரச சபைகளில் ஏறியதோ அப்பொழுதே இந்தியாவின்மீது அந்நியர்கள் படையெடுக்கத் தொடங்கிவிட்டார்கள். கிரேக்கர்கள், ஸ்கிதியர்கள், பாரசீகர்கள், ஹூணர்கள், முஸ்லீம்கள் இப்படி ஒருவர் பின்னொருவராகப் படையெடுத்து வந்து இந்தியாவில் ஆதிக்கம் செலுத்திவிட்டுப் போனார்கள்

இந்தியாவிலேயே அரச வம்சத்தினர் பலர் ஒருவர்க்கொருவர் சண்டையிட்டுக் கொள்ளலானார்கள். சாக்கியர்கள் என்றும், கோலியர்களென்றும், வஜ்ஜியர்களென்றும், மாளவர் என்றும், மகதர் என்றும் பல் வேறு பிரிவினராகப் பிரிந்தே வாழலானார்கள். ஐம்பத்தாறு தேசங்கள் நம் நாட்டிலே இருந்தனவென்று சொல்லிக்கொள்வது நமக்கு எவ்விதத்திலும் பெருமையில்லை. நமது வேற்றுமைகளையே அது காண்பிக்கிறது. புத்தர் காலத்திற்குப் பிறகு, இந்தியா முழுவதும் ஒரு தனி மன்னனுடைய ஆட்சிக்குட்பட்டதே கிடையாது. அசோகனுடைய ஆதிக்கம், ஏறக்குறைய இந்தியா முழுவதிலும்—

தமிழ் நாட்டைத் தவிர்த்து—பாக்கியிருந்ததென்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆனால் அவனுடைய ஆதிக்கம் மத ஆதிக்கம்; அரசியல் ஆதிக்கமல்ல. கனிஷ்கன், சமுத்திரகுப்தன், ஹர்ஷன் போன்ற அரசர்கள் சிலர், இந்தியாவின் சார்வ பௌம சக்ரவர்த்திகளாயிருந்து ஆள வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். ஆசை கொண்டதோடு அவர்கள் நின்றுவிட்டார்கள். அந்நியர்கள் வந்து புகுந்ததில் ஆச்சரியமென்ன இருக்கிறது? அந்தக் காலத்திலிருந்தே—இரண்டாயிரத்து முந்நூறு வருஷங்களாகவே—நாம், அந்நியர்களுடைய மனதைத்தான் தயார்படுத்திக் கொண்டு வந்திருக்கிறோமே தவிர, நமது மக்களின் மனத்தைத் தயார்படுத்தவேயில்லை. "எந்த ஒரு ஜாதியானது தன்னைத்தான் ஆண்டுகொள்ளும் சக்தியை இழந்து விடுகிறதோ, அல்லது தனது இயற்கைச் சாதனங்களை விருத்தி செய்துகொள்ளாமல் ஒரு தேக்கத்திலேயே அழுந்திவிடுகிறதோ அந்த ஜாதி, வலிமை, பேராசை என்ற நோய்களினால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிற மற்றொரு ஜாதிக்கு இரையாகிவிடுகிறது" என்கிறான் ஓர் அறிஞன். இந்தியாவின் சென்ற ஆயிர வருஷ கால சரித்திரம், இந்த உண்மையை எவ்வளவு தெளிவாக எடுத்துக் காட்டுகிறது! ஜீலம் நதிக்கரைப் போராட்டத்தில்—அதாவது அலெக்ஸாந்தர் போரஸ் மன்னனை எந்த யுத்தத்தில் தோல்வியுறச் செய்தானோ அந்த யுத்தத்தில்—ஆத்மீக இந்தியா போய்விட்டது; குருக்ஷேத்திர யுத்தத்தில்—அதாவது 1192ம் வருஷம் முகம்மது கோரி பிருதிவிராஜனைத் தோற்கடித்த யுத்தத்தில்—அரசியல் இந்தியா போய்விட்டது; பிளாசி யுத்தத்தில்—அதாவது 1757ம் வருஷம் கிளைவ் நடத்திய யுத்தத்தில்—பொருளாதார இந்தியா போய்விட்டது. "பிளாசி யுத்தத்தில் இந்தியா இறந்து போய்விட்டது" என்று வில் டூரண்ட் (Will Durant) என்ற அமெரிக்க அறிஞன் கூறுகிறான்.

இப்படியெல்லாம் ஆகிப்போனதற்குக் காரணம், நாம், எது சக்கையோ அதைச் சாரமாகவும், எது சாரமோ அதனைச் சக்கையாகவும் கொண்டுவிட்டதுதான். இந்திய நாகரிகத்தின் நடு நாயகமாய் நிலவுவன துறவு, சேவை என்ற இரண்டும். இதனுடைய தாத்பரியம் என்னவென்றால், நம்மை மறந்து, மக்களுக்குச் சேவைசெய்ய வேண்டுமென்பது. ஆனால் நாம் புத்தர் காலத்திற்குப் பிறகு, துறவுக்கு ஒரு முக்கியத்துவம் ஏற்பட்டு விட்டபிறகு, மக்களைத் துறந்தோம்; நமக்குச் சேவை செய்துகொள்ளத் தொடங்கினோம். உலகமும் நம்மைத் துறந்துவிட்டது. உலகத்திற்காக நாம் அழுகிறோம். ஆனால் நமக்காக அழுவார் யாருமில்லை. அகத் துறவும் புறச் சேவையும் என்று முழக்கம் செய்தார்கள் வேத காலத்து ரிஷிகள். புறத் துறவும் அகச் சேவையும் என்று அர்த்தப் படுத்திக் கொண்டுவிட்டோம் புத்தர் காலத்துக்குப் பிறகு. காஷாயத்திற்கு ஒரு முக்கியத்துவம் ஏற்பட்டதெல்லாம் புத்தர்காலத்திற்குப் பிறகுதான்.

செல்வனைத் துறந்து உலகத்தினின்று ஓடிப் போய் விடுமாறு

நமது வேதங்களோ உபநிஷதங்களோ உபதேசிக்கவில்லை. உபநிஷதம் போன்ற நூல்களை நாம் ஆராய்ச்சி செய்து பார்த்தோமானால், மனிதனுடைய அன்றாடக் கடமைகள் எவ்வளவு ஸ்பஷ்டமாக வற்புறுத்தப் பட்டிருக்கின்றனவென்பது நன்கு புலப்படும். உதாரணமாகத் தைத்திரீயோபநிஷதத்தில், குரு, சிஷ்யனுக்குச் சொல்கிறார்:—"சத்தியம் பேசு; தர்ம வழியில் நட; அத்யயனம் செய்யாமலிராதே; குருவுக்குத் தட்சிணை கொடுத்து அவரிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்ட பிறகு பிரஜையுண்டாக்கும் நூலை அறுக்காதே; (அதாவது கல்யாணஞ் செய்துகொள்ளாமலிராதே.) சத்தியத்தினின்றும் நழுவாமலிரு; ஆத்மரட்சணத்தினின்றும் நழுவாமலிரு; ஐசுவரியத்தினின்றும் நழுவாமலிரு." பகவத் கீதை மூன்றாவது அத்தியாயத்தில் "துறவினாலேயே மனிதன் ஏற்றம் பெற்றுவிடமாட்டான்" என்றுதான், கிருஷ்ணன் அருச்சுனனுக்கு உபதேசிக்கிறான். புத்தர் காலத்திற்கு முந்திய நமது கிரந்தங்களில், இகலோக வாழ்க்கையும் பரலோக வாழ்க்கையும் ஒரே சமானமாக வற்புறுத்தப்பட்டிருக்கின்றன. இதனால்தான், அந்தக் காலத்தில் க்ஷத்திரியர்களும் ஞானிகளும் சமுதாயத்தில் சம அந்தஸ்து பெற்றிருந்தார்கள். காட்டுக்குப்போய்க் கடுந்தவம் புரிவது நாட்டின் நலனுக்காகத்தான் என்ற எண்ணம் அந்தக்காலத்தில் பரவியிருந்தது. ஞானியாகிய ஜனக மகாராஜன், ராஜ்யத்தை ஆண்டான்; அவன் சமகாலத்து ஞானியாகிய யாக்ஞவல்க்யர், ஹிந்து சட்டத்தை வகுத்துக் கொடுத்தார். தசரதன் தனது ராஜ்ய விவகாரங்களை வசிஷ்டருடைய ஆலோசனை கேட்டுத்தான் நடத்தினான். ஆக இல்லறமும் துறவறமும் ஒன்றையொன்று அணைத்துக் கொண்டு, தேசத்தைக் காப்பாற்றின. சமுதாயத்திற்கும் தனி மனிதர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது.

புத்தர் ஓர் அரசிளங் குமாரர்தான். ஆனால் அவருடைய உபதேசங்கள், ஜனங்களிடத்தில் ஒருவித அடிமை மனப்பான்மையையே புகுத்தி விட்டன. "தனி மனிதனுடைய சுதந்திரத்திற்கோ, அல்லது தேசிய சுதந்திரத்திற்கோ ஆசைப் படுவதும் போராடுவதும் வீண் என்றும், ஆசையற்ற, செயலற்ற ஒரு நிலைதான் உயர்ந்த நிலையென்றும் புத்த மதம் போதித்து விட்டது" என்று ஒரு புலவன் கூறுகிறான். புத்த மத போதனைகளின் பரிணாமமாக ஜனங்களிடத்தில் படிந்து வந்த கோழை மனப்பான்மையை அகற்றி, இந்தியாவின் தேசிய சுதந்திரத்திற்குப் போராட வேண்டுமென்ற எண்ணத்தைத் தூண்டிவிடுவதற்காகவே கீதை எழுதப்பட்டதென்று நாம் கொள்கிறோம். மகா பாரத காலத்தில் கண்ணபிரான் ஒரு சிறந்த ராஜ தந்திரியாகவும், தேசிய சுதந்திரத்தைக் காப்பாற்றி வைப்பதில் அதிக அக்கறை கொண்டவனாகவும் நடந்து வந்திருக்கிறான். கண்ணனைப் போல், அவனுக்குப் பிறகு வேறொரு க்ஷத்திரிய ராஜ தந்திரி, வீரன், மகாத்மா நமது நாட்டில் தோன்றவேயில்லை. அதனால்தான் நமது தேசம் சுதந்திரத்தை இழந்து விட்டது.

கண்ணபிரான் எவ்வாறு தேசிய சுதந்திரத்தையும் தர்மத்தையும் காப்

பாற்றுவதற்காகப் போராடினானோ அப்படியே அந்நியர்களுடைய படையெடுப்பினின்றும், புத்த மதத்தின் துறவுத் தத்துவங்களினின்றும் தேசத்தைக் காப்பாற்றப் போராடினான் சாணக்கியன். இவன் ஒரு பிராமணன். சந்திரகுப்தனுக்கு ஆசானாகவும் அமைச்சனாகவும் அமர்ந்து, பிரஜைகளுக்கு நன்மையைத் தரக்கூடிய ஓர் அரசு எவ்வாறு இருத்தல் வேண்டுமென்பதைப் பற்றி அரசியல் நூலொன்று எழுதி வைத்துப் போயிருக்கிறான். இவன் காலத்தில் இந்தியாவின் மீது கிரேக்கர்கள் படையெடுத்து வந்தார்கள். சந்திரகுப்தனைக்கொண்டு அவர்களை விரட்டியடிக்கச் செய்தான் இவன். தேச நன்மையிலே அசட்டை காட்டி வந்ததோடு, அட்டூழியங்கள் பலவும் புரிந்து வந்த நந்த வமிசத்தைக் கருவறுத்தான். இந்தக் காரியங்களை நிறைவேற்ற இவன் அநேக தந்திரங்களைக் கையாண்டான் என்பதுண்மை. இந்தத் தந்திரங்களையே குடில நீதி என்று அழைத்து இவனைச் சிலர் திரஸ்காரமாகப் பேசுகிறார்கள். இது தவறு. சாணக்கியன் அநுஷ்டித்த தந்திரங்கள், கையாண்ட முறைகள் யாவும் இவனுடைய நன்மைக்காக அல்ல; தேச நன்மைக்காக. இவன் தனக்கென்று ஒன்றையும் வைத்துக் கொள்ளவில்லை. தன்னையே, தேசத்திற்காக, சந்திரகுப்தனுடைய நல்வாழ்வுக்காக அர்ப்பணஞ் செய்து விட்டான். சாணக்கியனைப் போன்ற பிராமணத்துவமுடையவர்கள் சென்ற இரண்டாயிர வருஷ காலமாக இந்தியாவில் தோன்றவில்லை. சிறப்பாக நமது தற்போதைய நிலையில், துரோணனைப் போன்ற, பரசுராமனைப் போன்ற, சாணக்கியனைப் போன்ற பிராமணத்துவமுடையவர்கள் தேவை. இவர்கள், தங்கள் கரத்தில் புல்லை ஏந்தினார்கள். ஆனால் வில்லும் ஏந்தத் தெரிந்திருந்தது இவர்களுக்கு. இவர்கள் பிறரை அடக்கி யாண்டார்கள். ஏனென்றால் இவர்களுக்கு அடங்கத் தெரிந்திருந்தது. இவர்கள், காட்டிலே தவக் கனலைச் சேகரித்துக் கொண்டார்கள். அதனை யுத்த களத்திலே வீரமாக வெளிப் படுத்தினார்கள். பிராமணத்துவம் என்பது ஒரு சக்தி; தனி ஜாதி யல்ல. முப்புரி நூலிலே, முழங்காலளவு வேஷ்டியிலே, உச்சிக் குடுமியிலே, ஒரு கை கும்பிடுதலிலே, அந்நிய ஆதிக்கத்துக்கு அடிமைத் தொண்டனாயிருப்பதிலே, அரை குறையான ஆங்கில ஞானத்தில் அழுகிப் போன இருதயத்தை மிதக்க விட்டுக் காட்டுவதிலே பிராமணத்துவம் இல்லை. அஞ்சாமையிலே, தியாகத்திலே, இதய விகாசத்திலே, அறிவுப் பண்பிலே பிராமணத்துவம் இருக்கிறது. இப்படிப்பட்ட பிராமண சக்தி நமது நாட்டிலே அதிகமாகத் தோன்ற வேண்டும்.

சென்ற இரண்டாயிரத்து முந்நூறு வருஷ காலமாக நமது நாகரிகம் மதத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, விஞ்ஞானத்தை மறந்து விட்டது. இப்பொழுது அதன் தண்டனையை நாம் அநுபவிக்கிறோம். இதனால்தான், மனிதன் அறியாமையுடையவன் என்று நம்புகிறோம். ஆனால் மனித சக்திக்குப் பயப்படுகிறோம். நாம் ஞானிகளாயிருக்கிறோம்; ஆனால் மூட நம்பிக்கை நிறைந்தவர்களாயிருக்கிறோம். கடவுளின் இருப்பிடம்

எவ்வளவு தூரமாகவும் ஆழமாகவும் இருந்த போதிலும் அதனைக் கண்டு பிடித்து விடுகிறோம். ஆனால் நம்மைச் சுற்றியுள்ள ஆபத்தை நம்மால் தெரிந்து கொள்ள முடிவதில்லை. "மோட்ச சாம்ராஜ்யத்தின் ஆழத்தில் தங்கள் பார்வையைச் செலுத்தி விட்டு, பூலோகத்தின் மீது நடக்கிறார்கள்" என்று ஜெர்மானியர்களைப் பார்த்து மாஜினி கூறினான். அது நமக்கு எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது!

சுவாமி விவேகானந்தர்கூட ஓரிடத்தில் உத்வேகத்துடன் கூறுகிறார்:— "இன்னும் ஓர் ஐம்பது வருஷ காலத்திற்காவது நாம் எந்தக் கடவுளர்களையும் நினைக்காமலிருந்தால் நல்லது. நமது கடவுள், நமது மதம் ஆகிய எல்லாம் நமது ஜாதிதான்; நமது தேசந்தான்." இந்தப் பாடத்தை நாம் எவ்வளவு அவசியமாக இப்பொழுது கற்றுக்கொள்ளவேண்டி யிருக்கிறது!

நமது நாகரிகம், அமைதியிலே தான் இன்பம் இருக்கிறதென்று கூறியது வாஸ்தவம். ஆனால் எப்படிப் பட்ட அமைதி? பம்பரம் போன்ற அமைதி. பம்பரமானது, எப்படி வேகமாகச் சுழன்றுகொண்டிருக்கிற போதே அமைதியாகக் காணப்படுகிறதோ அதுபோன்ற அமைதியே தேவையென்று நமது முன்னோர்கள் வற்புறுத்திப் போனார்கள். அதாவது செயலிலே சாந்தி பெற வேண்டுமென்பதுதான் இதன் அர்த்தம். ஆனால் நாம் சாந்தி பெறுவதை லட்சியமாகக்கொண்டு, செயலைத் துறந்து விட்டோம். பம்பரத்தைப் போன்ற அமைதிக்குப் பதிலாக, சவர்போன்ற அமைதியை லட்சியமாகக் கொண்டு விட்டோம். கிடைத்த பலன் அடிமைத்தனம்! ஒரு நாகரிகம், சிதைவுபடாமல் இருக்க வேண்டுமானால், அந்த நாகரிகத்தைப் பின்பற்றுவோர்கள், சதா விழிப்புடையவர்களாயிருக்கவேண்டும். சமாதானம், நமது லட்சியமா யிருக்கலாம். ஆனால் அதற்காக நமது ஆயுதங்களைத் துருப்பிடித்துப்போகும்படி விடக்கூடாது. இந்தப் பாடத்தைத்தான் கீதை நமக்குப் போதிக்கிறது. இதனை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்திருப்போமானால், சுதந்திர பீடத்திலிருந்து நாம் விழுந்திருக்கமாட்டோம்.

இன்று நமது நாகரிகம் எல்லோருடைய பரிகாசப் பொருளாகவும் பரிசோதனைக் களமாகவும் இருக்கிறது. ஒரு காலத்தில் குரு பீடத்திலிருந்தது நமது நாடு. இன்று அதன் ஆத்மாவில் அச்சமும், கோழைத்தனமும் புகுந்துகொண்டுவிட்டன. உலக சகோதரத்துவம் நமது நாட்டிலேதான் அதிகமாகப் பிரசாரஞ் செய்யப்படுகிறது. எல்லாவித அரசியல் தத்துவங்களையும் இங்கே பரீட்சை செய்து பார்க்கிறார்கள். எல்லா மதங்களுடைய கலப்பும் இங்கே காணலாம். இதனால் சர்வ மதத்தினராலும் அங்கீகரிக்கப்படுகிற ஒரு புதிய மதத்தை ஸ்தாபிக்க இந்தியாதான் ஏற்ற இடமென்று சிலர் சொல்கிறார்கள். அப்படியானால் நமக்கென்று தனி அரசியல் இல்லையா? தனி மதம் இல்லையா? நமக்குத் தனித்துவமே இல்லையா? இதை நினைக்கிற போது பைரன் என்னும் ஆங்கிலக் கவிஞனுடைய திருவாக்கு நமது ஞாபகத்திற்கு வருகிறது. அவன் கதறுகிறான்:—

உனது புகழ் நிறைந்த நாட்கள்
கழிந்துவிட்டன; ஆனால்
நினது அவமானகரமான வருஷங்கள்
இன்னும் கழியவில்லை.

புராதன நாகரிகப் பெருமை வாய்ந்த இந்தியன், இன்று, பட்டினியால் வாடுகிறான். பல சக்திகள், அவனைப் பிழிந்தெடுக்கின்றன. வற்றாத ஜீவநதிகளும், குறையாத நில வளமும் அவனை, வறுமையினின்று காப்பாற்றவில்லை. அந்த வறுமையிலேதான், அவன் இன்பம் காண வேண்டியவனாயிருக்கிறான். அப்படித்தான் அவனுக்கு உபதேசமும் செய்யப்படுகிறது!

எந்த இந்தியர்கள் இரண்டாயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன்னர்வரை, அந்நிய நாட்டரசர்களின் அத்தாணி மண்டபங்களில் அதிதி சத்காரம் பெற்றார்களோ, அந்த இந்தியர்கள், இன்று அயல் நாடுகளில் அச்சத்தோடு வாழ்கிறார்கள்; பிச்சை யெடுத்துப் பிழைக்கிறார்கள். மூட்டை தூக்குகிறவர்கள் இந்தியர்கள்; வண்டியிழுக்கிறவர்கள் இந்தியர்கள்; நிறத்தடைச் சட்டங்களினால் பாதிக்கப்படுகிறவர்கள் இந்தியர்கள். வேதாந்த விசாரஞ் செய்த நமது தாய்மார்கள், போர்க்களத்தில் புகழோடு போர் புரிந்த நமது தாய்மார்கள், கற்புத் திறனால் நகரத்தையே அழித்த நமது தாய்மார்கள், இன்று, ஐயோ, வெளி நாடுகளில் தோட்டங்களிலே, வயற் காடுகளிலே மானத்தை விற்று வயிறு பிழைக்கிறார்கள். இந்த நிலையிலிருந்து நமது நாகரிகம் நம்மைக் காப்பாற்றவில்லை,

உலகத்து ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கினராகிய இந்தியர்கள் இன்று சுதந்திரமற்றவர்களாயிருக்கிறார்கள். இந்த நிலையிலிருந்து நமது நாகரிகம் நம்மைக் காப்பாற்றவில்லை.

உலகத்திலேயே சராசரி வயதிலும் வருமானத்திலும் குறைவானவர்கள் இந்தியர்கள். இந்த நிலையிலிருந்து நமது நாகரிகம் நம்மைக் காப்பாற்றவில்லை.

அதிகமான குழந்தை மரண விகிதமும், நோய்வாய்ப்பட்டிறப்போர் தொகையும் இந்தியாவிலேதான் அதிகம். இந்த நிலையிலிருந்து நமது நாகரிகம் நம்மைக் காப்பாற்றவில்லை.

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்த நமது நாகரிகத்தைப்பற்றி நாம் சிந்தனை செய்யவேண்டாமா? சிந்தனைதான் நமது செயலைத் தூண்டும். நமது செயலைக்கொண்டுதான் நாம் உலகமதிப்பு என்னும் தராசில் நிறுக்கப்படுவோம். குருநானக் உபதேசம் செய்கிறார்:— "மனிதர்கள், அவர்கள் செய்கிற வேலைகளைக் கொண்டுதான் காப்பாற்றப்படுகிறார்கள். நீ எந்த ஜாதி, எந்தக்குலம் என்று யாரையும் பார்த்துக் கடவுள் கேட்பதில்லை. நீ என்ன வேலை செய்திருக்கிறாய் என்றுதான் கேட்கிறார்."

நமது நாகரிகம் இன்று எந்த நிலையிலிருக்கிறதென்று தெரியாத ஒரு நிலையில் இருக்கிறது. ஒரு கவிஞன் கூறுகிறான்:—

"இரண்டு உலகத்திற்குநடுவில்
நான் அகப்பட்டுக்கொண்டிருக்

கிறேன். இந்த இரண்டு உலகங்களில், ஓர் உலகம் இறந்துவிட்டது; மற்றோர் உலகம் பிறக்கவேயில்லை. எனக்கென்று தலைசாய்த்துப் படுக்க ஓர் அங்குல இடமும் இல்லை."

இதுதான் இந்திய நாகரிகம்! நாம்தான் நாகரிக இந்தியர்!!

திருவள்ளுவர்

தமிழர் சமுதாயம் ஒற்றுமைப்பட்டு நிலையோடு வாழவேண்டுமானால், தமிழர் திருநாட்கள் பல கொண்டாடப்பட வேண்டுமென்பதை நாம் பல முறை வற்புறுத்தி வந்திருக்கிறோம். வள்ளுவர், கம்பர் போன்ற கவி திலகங்களின் திருநாட்களையும், பொங்கல், தீபாவளி போன்ற பண்டிகை தினங்களையும், தமிழர்கள் வசிக்கும் ஒவ்வோர் இடத்திலும் கொண்டாட வேண்டுவது அவசியமாகும். இந்த வருஷம், இலங்கையில் வள்ளுவர் திருநாள், சாளது மாசி மாதம் முப்பதாந் தேதி (13-3-41) வியாழக்கிழமை, சிறந்த முறையில் கொண்டாடப்படுமென்பதையறிந்து பெரிதும் மகிழ்ச்சி கொள்கிறோம். வள்ளுவர், ஒரு மொழிக்கோ, ஒரு நாட்டிற்கோ, ஒரு காலத்திற்கோ உரிய அறிஞரல்லர். உலக மக்களத்தனை பேருக்கும் பொதுவான அறநெறிகளையே அவர் வகுத்துக் காட்டியிருக்கிறார். மனிதனை, மனிதத் தன்மை நிறைந்தவனாக்குவது திருக்குறள். இதனைத் தமிழர்கள் அறிந்து, வள்ளுவர் நாளைச் சிறப்பிப்பார்களாக.

கீழ் நாட்டில்

சென்ற ஒன்றரை வருஷ காலமாக ஐரோப்பாவில் மட்டும் அடித்துக் கொண்டு வருகிற யுத்தப் புயலானது, இப்பொழுது கீழ் நாட்டிலும் பரவி விடுமோ என்று பயப்படவேண்டியிருக்கிறது. கீழ்த் திசையில் ஆதிக்கங் கொண்டுள்ள வல்லரசுகளுக்கும் ஜப்பானுக்கும் இருந்து வரும் பரஸ்பர சம்பந்தமானது, நல்லெண்ணத்துடன் கூடியதாயில்லை. ஜப்பானுடைய உருட்டல் மிரட்டல்கள், எவ்வளவு காலம் அதன் செல்வாக்கை நிலைக்கச் செய்யும் என்பதும் நமக்குத் தெரியவில்லை. ஆயினும், பொதுவாக, பத்திரிகைகளில் இப்பொழுது வெளியாகும் செய்திகளைக் கொண்டு ஜனங்கள் ஒருவித பீதியையடைந்திருக்கிறார்கள். இது பெரிதும் விசனிக்கத்தக்கது. இந்த பீதி, விரைவில் குறைந்து, முன் மாதிரி ஒருமன நிம்மதி ஜனங்களுக்கு ஏற்படுமென்றே நம்புகிறோம். இப்பொழுது நடைபெறும் அரசியல் சதுரங்க ஆட்டத்தில், எந்த வல்லரசின் போக்கு எந்தமாதிரி யிருக்குமென்பதை எவ்விதத்தாலும் நிர்ணயித்துச் சொல்ல முடியாமலிருக்கிறது. ஆதலின், நம்பிக்கையில் தான் நாம் வாழவேண்டும்.

தாமஸ் எடிஸன்

இன்று நாம் மின்சார விளக்கிலே சுகமாகப் படிக்கிறோம்; அல்லது சினிமா, கிராமபோன் முதலிய நாகரிக வசதிகளை அநுபவிக்கிறோமென்று சொன்னால் அதற்குக் காரணம், அமெரிக்காவில் மிலான் என்ற நகரத்தில் 1847ம் வருஷம் பிப்ரவரி மாதம் 11ந் தேதி பிறந்த தாமஸ் ஆல்வா எடிஸன் தான். இவன் பாலியத்தில், ரெயிலிலேயே பிரயாணஞ் செய்து பத்திரிகைகளை விற்கும் தொழிலில் ஈடுபட்டு அதன் மூலமாகத் தன் பிழைப்பை நடத்தி வந்தான். ரசாயனப் பொருள்களைப் பரிசோதனை செய்து அவற்றின் குணாகுணங்களைத் தெரிந்து கொள்வதிலே இவனுக்கு எப்பொழுதுமே ஒருவித ஆவல் உண்டு. இந்தப் பரிசோதனைகளை இவன் சாதாரணமாக வீட்டிலேயே நடத்துவான். பத்திரிகை விற்பனைத் தொழிலில் ஈடுபட்ட பிறகு, இவன் தனது பரிசோதனை சாலையை, தான் ஏறிச் சென்ற ரெயில்வே கம்பார்ட்மெண்டுக்கே மாற்றிக்கொண்டான். தவிர, இந்த வண்டியிலேயே ஓர் அச்சாபீஸை அமைத்து, அதன் மூலம் ஒரு வாரப் பத்திரிகையையும் வெளியிட்டான்.

இந்தக் காலத்தில் எடிஸன் தந்தியடிக்கும் தொழிலில் பயிற்சி பெற்றான். தந்தியடிக்கும் குமாஸ்தா வேலை கிடைத்தது. ஆனால் இந்த வேலை இவனுக்கு நீடித்து நிலைக்கவில்லை. இந்தமாதிரி இவனுக்குப் பல தடவை வேலைகள் கிடைத்தும் அவை போயும் இருக்கின்றன. இந்த வேலையில்லாத் திண்டாட்ட காலத்திலும், இவனுடைய மூளை குழம்பிக் கிடக்கவில்லை. சட்டசபைகளில் ஓட்டுப் பதிகிற ஓர் இயந்திரத்தைக் கண்டுபிடித்தான்.

நியூயார்க் நகரத்தில், தங்க விலை ஏற்றத்தையும் இறக்கத்தையும் ஒருவகை மின்சார யந்திரத்தின் மூலம் அறிவிக்கிற ஒரு கம்பெனியிலிருந்தது. ஒருநாள் இந்த யந்திரம் திடீரென்று நின்றுவிட்டது. இதனை, எடிஸன் ஒழுங்குபடுத்திக் கொடுத்தான். இது முதற்கொண்டு இவனுக்கு நல்லகாலம் பிறந்தது. மேற்படி மின்சார யந்திரத்தை இன்னும் பல வகைகளில் அபிவிருத்தி செய்தான். இவனுடைய கருவிகளின் உரிமைகளை லெப்பர்ட்ஸ் என்ற ஒருவன் நாற்பதினாயிரம் டாலர் கொடுத்து வாங்கினான். இந்தத் தொகையைக் கொண்டு எடிஸன் நேவார்க் என்ற இடத்தில் ஒரு பரிசோதனை சாலையைத் தொடங்கி அதில் பலவகை ஆராய்ச்சிகள் நடத்தி வந்தான். இது தவிர, நியூயார்க் நகரத்திற்கு அருகாமையிலிருந்த மென்லோ பார்க்கில் ஒரு தொழிற் சாலையை அமைத்து அங்கிருந்து போனோகிராப், மின்சார விளக்கு போன்ற பல புதிய விஷயங்களைக் கண்டுபிடித்தான். மின்சார விளக்கை அமைக்க எடிஸன் சுமார் 1000 விதமான பரிசோதனைகளைச் செய்தானென்று சொல்லப்படுகிறது. யுத்த சம்பந்தமான இன்னும் பல கருவிகளையும் இவன் கண்டுபிடித்துக் கொடுத்தான்.



1941

ஜனவரி

29 இந்தியா அரசாங்கத்திற்கும் பர்மா அரசாங்கத்திற்கும் நடை பெறப் போகிற வியாபார ஒப்பந்தப் பேச்சுகளில், இந்தியா அரசாங்கத்தின் பிரதி நிதிகளாக, பொக்கிஷ அங்கத்தினரான ஸர் ஜெரிமி ரெய்ஸ்மானும், வியாபார அங்கத்தினரான ஸர் ராமசாமி முதலியாரும் இருப்பார்கள்.

லண்டனில் இந்தியா ஹை கமிஷனர் பதவியை வகித்து வரும் ஸர் பிரோஸ்கான் நூன் என்பவருடைய உத்தியோக காலம் 1-7-41 வரை நீடித்து வைக்கப் பட்டிருக்கிறது.

வங்காளத்தில் பிரசித்தி பெற்ற காளி கோயில் தாரகேசுவரத்தில் இருக்கிறது. இதிலுள்ள விக்கிரகம் காணமற் போய் விட்டது.

லாகூரிலுள்ள ஸ்ரீமதி ப்ரேடா பேடா என்ற ஆங்கில ஸ்திரீக்கு, சத்தியாக்கிரகம் செய்ய காந்தியடிகள் அநுமதி கொடுத்து விட்டார்.

30 தென்னாப்பிரிக்கா யூனியன் அரசாங்கத்தின் மாஜி பிரதம மந்திரியாயிருந்த தளபதி ஹெர்ட்ஸாக்குக்கு வருஷத்தில் இரண்டாயிரம் பவுன் உபகாரச் சம்பளம் கொடுக்க வேண்டு மென்ற மசோதா யூனியன் சட்ட சபையில் நிறைவேறியது.

அல்பேனியாவில் இத்தாலியர்களுக்கு ஏற்பட்ட சேதம் இதுவரை சுமார் அறு பதினாயிரம் பேருக் கதிகமா யிருக்கு மென்று சொல்லப் படுகிறது.

31 சிரியாவில் பெரிய வெள்ளப் பெருக் கேற்பட்டு பலத்த உயிர்ச் சேதம் உண்டாயிருக்கிறது.

வட ஆப்ரிக்காவிலுள்ள டெர்னா என்ற ஊரை இத்தாலியர்கள் காலி செய்து விட்டார்கள்.

பிரான்சுக்கும் தைலாந்துக்கும் இன்று சமரஸ ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது.

பிப்ரவரி

1 பாரிஸ் நகரத்தில், ஜெர்மானியர்களுக்குச் சாதகமான ஓர் அரசியல் கட்சி ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது.

எடிஸனுக்குக் கொஞ்சம் காது மந்தம். எப்பொழுதும் ஓயாமல் வேலை செய்துகொண்டிருப்பான். ஒருநாளில் சராசரி 20 மணிக்கு மேல் வேலை செய்வது வழக்கம். இவன், நல்ல பிரபல ஸ்திதிக்கு வந்தபிறகுகூட, பொதுக்கூட்டங்களில் வந்து பேச அதிகமாக சங்கோஜப் படுவான். இவன் 1931ம் வருஷம் அக்டோபர் மாதம் 18ந் தேதி பூதவுடலை நீத்தான்.

பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள், ஆப்ரிக்காவிலுள்ள டிரிபோலியைத் தாக்கின.

2 ஆப்ரிக்காவிலுள்ள அகோர் டாட் என்ற ஊரைப் பிரிட்டிஷ் துருப்புகள் கைப்பற்றிக் கொண்டு விட்டன.

ருமேனியாவில் அமைதி ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப் படுகிறது.

3 எழு நூறு போலிஷ் பாதிரிமார்களை ஜெர்மானியர்கள் சுட்டுக் கொன்றார்கள்.

அமெரிக்க பிரசிடெண்ட் தேர்தலில் நின்று தோல்வியுற்ற வெண்டெல் வில்கி என்பவர், இங்கிலாந்தில் ஜெர்மானியர்களால் தாக்கப்பட்ட கவெண்ட்ரி, பர்மிங்ஹாம் முதலிய நகரங்களைப் பார்வையிட்டார்.

லண்டனை ஜெர்மன் ஆகாய விமானங்கள் தாக்கின.

4 அபிசீனியாவின் சிம்மாசனத்தை ஹெயிலி செலாஸி கைப் பற்றிக் கொள்கிற விஷயத்தில், பிரிட்டன் எல்லாவித உதவிகளையும் செய்யத் தயாராயிருப்பதாக மிஸ்டர் ஈடன் காமன்ஸ் சபையில் தெரிவித்தார்.

சீன அரசாங்கத்திற்கு எவ்வித உதவிகளும் செய்யக் கூடாதென்று தடை செய்ய ஜப்பானிய அரசாங்கம் எல்லாத் தடை முறைகளையும் அனுஷ்டிக்குமென்று தெரிகிறது.

சென்னை பாபநாசம் நீர் வீழ்ச்சியிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யச் சென்னை அரசாங்கத்தார் முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர் என்று ஒரு செய்தி கூறுகிறது.

5 ஆப்ரிக்காவில் நான்கு போர் முனைகளில், பிரிட்டிஷ் படைகள் இத்தாலியர்களைத் தாக்குகின்றன.

கிரேக்கப் படைகள் அல்பேனியாவில் வெற்றியடைந்து கொண்டு வருவதாகச் சொல்லப்படுகிறது.

இந்தோ-பர்மா வியாபார ஒப்பந்த மகாநாடு இன்று புது டெல்லியில் ஆரம்பமாகியது.

6 பிரிட்டனுடைய தினசரி யுத்தச் செலவு 12.250.000 பவுன் என்று, பிரிட்டிஷ் பொக்கிஷ மந்திரி காமன்ஸ் சபையில் தெரிவித்தார்

ஐர்லாந்திலுள்ள முக்கியமான நகரங்களிலிருக்கும் குழந்தைகளைக் காலி செய்து விட ஐரிஷ் அரசாங்கத்தார் திட்டம் போட்டுக் கொண்டிருக்கின்றனர்.

7 இத்தலிக்கும் ஸ்விட்ஸர்லாந்துக்கும் உள்ள எல்லைப் புறத்தை இத்தலி அடைத்து விட்டது.

தைலாண்ட்-இந்தோ சீனா சமரஸ மகாநாடு இன்று பாங்காக் நகரத்தில் ஆரம்பமாகியது.

யுத்த ஆகாய விமானச் செலவுக்காக பரோடா மகாராஜா ஐம்பதினாயிரம் பவுன் நன்கொடையளித்திருக்கிறார்

சீனத் தலைவரான சியாங்-கை-ஷேக்குக்கு பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட், ஒரு தூதர் மூலம் கடிதமொன்று அனுப்பியிருக்கிறார்.

8 ஆப்ரிக்கப் போர்முனையில் பல வெற்றிகளையடைந்ததற்காக தளபதி வாவலைப் பாராட்டி அரசர் பெருமான் ஒரு செய்தி அனுப்பியிருக்கிறார்.

கிரேட் பிரிட்டனுக்கு உதவி செய்ய வேண்டுமென்கிற மசோதா அமெரிக்க ஜனப்பிரதிநிதி சபையில் இன்று நிறைவேறியது.

9 இங்கிலாந்தில் சுற்றுப் பிரயாணஞ் செய்துவந்த வெண்டெல் வில்கி என்பவர், இன்று நியூயார்க் நகரம் வந்து சேர்ந்தார்.

இங்கிலாந்தில் ஜெர்மன் ஆகாயவிமானக் குண்டுகளினால் தாக்கப்பட்ட தொழிற்சாலைகளைச் செப்பனிட ஒரு புதிய அதிகாரி நியமிக்கப் பட்டிருக்கிறார்.

பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஸ்ரீ சர்ச்சில் இன்று ரேடியோவில் பேசுகையில், பிரிட்டிஷார் இதுவரையில் அடைந்துள்ள சாதகமான வெற்றிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்.

10 இத்தலி யுத்தத்தில் இறங்கின பிறகு மால்டா தீவு மூந்நூறு தடவை ஆகாய விமானங்களால் தாக்கப் பட்டிருக்கிறது.

பெங்காஸி என்ற ஆப்ரிக்கப் போர் முனையில் பதினையாயிரம் இத்தாலியர்கள் கைது செய்யப் பட்டார்கள்.

ஜெர்மனியின் தூண்டுதலின் பேரிலேயே ஜப்பான் சில ஆக்ரமிப்பு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறதென்று லார்ட்ஸ் சபையில் கூறப்பட்டது.

பல்கேரியாவில் நாஜி துருப்புகள் வந்து இறங்கியிருக்கின்றன.

11 பிரிட்டன் மீது ஜெர்மனி, வெற்றிகரமாகப் படையெடுக்க முடியாதென்று வெண்டெல் வில்கி அபிப்ராயப் படுகிறார்.

ருமேனியாவின் எல்லா முக்கிய நகரங்களிலும் விளக்கணைப்புத்திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

12 ஜெர்மன் நீண்ட தூர பீரங்கிகள், பிரெஞ்சு கடலோரப் பிரதேசத்திலிருந்து, இங்கிலாந்தின் கிழக்குத் துறைமுகப் பிரதேசங்களைத் தாக்கின.

அறிஞர் என். ஜி. ரங்கா இன்று திருச்சி சிறையிலிருந்து விடுதலை செய்யப் பெற்று, மீண்டும் கைது செய்யப் பெற்றார்.

தளபதி பிராங்கோவும், முஸோலினியும் இன்று ஸ்பெயினிலுள்ள போர்டி கோரா என்ற இடத்தில் கலந்து பேசினார்கள்.

13 ஆசிய கீழைப் பிரதேசங்களில் வசிக்கும் அமெரிக்கப் பிரஜைகளை, தாய் நாட்டுக்கு வந்து விடுமாறு அமெரிக்கா அரசாங்கம் உத்திரவு செய்திருக்கிறது.

பிரிட்டனுக்கு இன்னும் அதிகமான நாசகாரிக் கப்பல்களை அனுப்ப வேண்டுமென்று வெண்டெல் வில்கி அமெரிக்க அரசாங்கத்திற்கு யோசனை கூறியிருக்கிறார்.

இந்தோ-பர்மா வியாபார ஒப்பந்த மகாநாட்டுக்கு பர்மா அரசாங்கத்தின் பிரதிநிதியாகச் சென்றிருந்த பிரதம மந்திரி ஊஸோ இன்று ரங்கூனுக்கு வந்து சேர்ந்தார்.

14 கீழைப் பிரதேசங்களின் அரசியல நிலைமை மோசமாகிக் கொண்டு வருகிறதென்று லண்டனில் அபிப்பிராய மிருந்து வருகிறது.

யூகோஸ்லேவியாவின் பிரதம மந்திரியும் அந்நிய நாட்டு மந்திரியும் ஜெர்மனிக்குச் சென்றிருக்கிறார்கள்.

அமெரிக்காவில் ஜப்பானிய தூதராக நியமனம் பெற்றிருக்கும் தளபதி நோமூரா இன்று பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டை பேட்டி கண்டார்.

15 கிரேக்க-இத்தாலிய யுத்தத்திலே, கிரேக்கர்களுக்கு அதிக வெற்றி கிடைத்து வருவதாகச் சொல்லப் படுகிறது.

16 சிங்கப்பூரைச் சுற்றியுள்ள கடலில், சுரங்கங்கள் வைக்கப் பட்டிருக்கின்றனவென்று எச்சரிக்கை செய்யப் பட்டிருக்கிறது.

சீனாவில், ஜப்பானுடைய ஆக்ரமிப்புக்குட்பட்ட பிரதேசங்களிலிருந்து, பிரிட்டிஷ் காரர்கள் வெளியேறுதல் நல்லதென்று பிரிட்டிஷ் அரசாங்கம் ஓர் அறிக்கை விடுத்திருக்கிறது.

17 வெண்டெல் வில்கி என்பார் சீனாவுக்குச் செல்வார் என்று சொல்லப்படுகிறது.

மத்திய ஐரோப்பாவில் டான்யூப் நதி வெள்ளப் பெருக் கெடுத்துக் கொண்டு ஓடுகிறது. 80000 பேர் பாதிக்கப் பட்டிருக்கின்றனர்.

ஸ்பெயின் தேசம் முழுவதும் புயற் காற்றினால் பாதிக்கப் பட்டிருக்கிறது.

துருக்கியும் பல்கேரியாவும் ஏகோபித்த பான்மை யுடனேயே இருப்பதாக இரண்டு நாடுகளும் சேர்ந்து ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றன.

18 இத்தாலியக் கப்பல்கள் பலவற்றை பிரிட்டிஷார், மத்திய தரைக் கடலில் மூழ்கடித்து விட்டனர்.

மாஜி ஸ்பெயின் மன்னரான அல்பான்ஸோ மிகுந்த ஆபத்தான நிலையிலிருக்கிறார்.

யுத்தம் ஆரம்பித்த காலத்திலிருந்து இது வரை, ஜெர்மனியின் 1,330,000 டன் நிறையுள்ள கப்பல்களை பிரிட்டன் மூழ்க்கி யிருக்கிறது.

19 இன்று பர்மா சட்ட சபை கூடியது. கவர்னர், நீண்ட தொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் வந்து தாக்கா வண்ணம், ஜெர்மனி பலத்த பந்தோபஸ்து செய்து கொண்டு வருவதாகத் தெரிகிறது.

சிங்கப் பூரில் ஆஸ்திரேலியத் துருப்புகள் வந்திறங்கியிருக்கின்றன.

இந்தியாவில் இது வரை 22,000 இத்தாலியக் கைதிகள் இருக்கிறார்கள்.

கீழ் நாட்டில் அமைதி உண்டாக, என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமோ அவை யனைத்தையும் எடுத்துக்கொள்ள ஜப்பான் தயாரா யிருப்பதாக ஜப்பானிய அந்நிய நாட்டு மந்திரி பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரிக்கு ஒரு செய்தி விடுத்திருக்கிறார்.

20 கீழ்நாட்டில் யுத்தம் உண்டானால் அதற்கு ஆஸ்திரேலியா சித்தமா யிருப்பதாக, ஆஸ்திரேலியப் பிரதம மந்திரி கூறினார்.

கிரீஸ் தேசத்தின் மீது ஜெர்மன் ஆகாய விமானங்கள் பறந்து கொண்டிருப்பதாகச் சொல்லப் படுகிறது.

ஒரு பிரிட்டிஷ் நீர் மூழ்கிக் கப்பல், ஒரு நார்வே கப்பலை, நார்வே கடலில் மூழ்கடித்து விட்டது.

இந்திய அரசாங்கத்து வரவு செலவுத் திட்டம் இன்று இந்திய சட்ட சபையில் ஆஜர் படுத்தப் பட்டது.

பர்மாவில் ஆகாய விமானத் தாக்குதல் ஏற்பட்டால் அதற்காகவேண்டிய பந்தோபஸ்துகள் செய்யப் பட்டிருக்கின்றன.

பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரியான மிஸ்டர் ஈடன் இன்று கெய்ரோ வந்து சேர்ந்தார்.

மாஜி தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவரான ஸ்ரீ சி என். முத்துரங்க முதலியார், சத்தியாக்கிரகம் செய்ததற்காக மூன்று மாதக் கடுங் காவலும் முந்நூறு ரூபா அபராதமும் விதிக்கப் பட்டார்.

21 இருநூறு அமெரிக்க ஆகாய விமானங்கள், சிங்கப்பூருக்குச் சென்றிருக்கின்றன வென்று ஒரு செய்தி கூறுகிறது.

பர்மா சட்ட சபைத் தலைவரான ஊபிட் லேக் ராஜீநாமா செய்து விட்டார்.

கிரீஸ் தேசத்திற்கு, அமெரிக்க ஆகாய விமானங்களின் உதவி தேவையாயிருக்கிறதென்று சொல்லப் படுகிறது.

22 இந்தோ-சைனா கடலோரத்தில் ஜப்பானியக் கப்பற் படைகள் இருப்பதை, பிரெஞ்சு அரசாங்கத்தார் ஆட்சேபிக்கின்றனர்.

மத்திய தரைக் கடலில் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் சுரங்க வெடிகள் வைத்திருக்கின்றனர்.

23 முஸோலினி, இத்தலி இதுவரையும் யுத்தத்தில் அடைந்து வந்த சாதக பாதகங்களைப் பற்றி ஒரு பிரசங்கம் செய்தார்.

24 சமீப காலத்தில் ஜெர்மனியானது, பிரிட்டிஷ் கப்பல்களைத் தீவிரமாகத் தாக்கப் போவதாக ஹிட்லர் பெர்லினில் நீண்டதொரு சொற் பொழிவு நிகழ்த்தினார்.

தான் கையெழுத்திட்ட ஒப்பந்தங்களின் படி நடக்க எப்பொழுதும் தயாராயிருப்பதாக துருக்கி தன் உறுதியைத் தெரிவித்திருக்கிறது.

25 மிஸ்டர் ஈடன் அங்கோரா வந்து சேர்ந்தார்.

காங்கிரசுக்கும் அரசாங்கத்திற்குமிடையே ஏற்பட்டுள்ள பிணக்கைத் தீர்த்து வைக்க மார்ச் மாதம் 13ந் தேதி பம்பாயில் ஒரு சமரச மகாநாடு நடத்த சில தலைவர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

நமது பிரதிநிதி

ஸ்ரீமான் ராம. முத்துராமன் செட்டியார் அவர்கள், "ஜோதி"யின் பிரதிநிதியாக பர்மாவில் ஆற்று மார்க்கமாகச் சுற்றுப் பிரயாணஞ் செய்துவருகிறார். அவருக்கு அன்பர்கள், எல்லாவித ஆதரவுகளையும் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்

சையாமைப்பற்றி

சையாம் என்பது ஒரு சுதந்திர நாடு. பர்மாவுக்குத் தெற்கிலும் கிழக்கிலுமாக இருக்கிறது. சையாம் கிரிகுடா, சையாமுக்குத் தெற்கிலிருக்கிறது. மலேயா தீபகற்பத்திற்கும் இதற்கும் ரெயில் மார்க்கமான தொடர்புண்டு.

சையாமின் விஸ்தீரணம் 200,148 சதுர மைல். ஜனத்தொகை 11,506.2078. இவர்களில் 100க்கு 90 பேர் சையாமியர்கள். பாங்காக் என்பது தலைநகரம்.

சையாமின் பூர்வ சரித்திரம் அதிகமாகத் தெரியவில்லை. கி. பி. 18வது நூற்றாண்டில் பவாடாக் என்ற ஒரு சீனப் போர்வீரன் பர்மாவின்மீது படையெடுத்து வந்த பர்மியர்களைத் தோற்கடித்துவிட்டு பாங்காக்கைத் தலைநகரமாக ஏற்படுத்திக்கொண்டு சையாமை ஆட்சி புரிந்தான். 1782ம் வருஷம் இவனுடைய பிரதம மந்திரி இவனை, அரச பதவியினின்று வீழ்த்திவிட்டுத் தானே அரசனானான். இவனுடைய வமிசத்தினர்கள் இப்பொழுது அரச பதவியில் வீற்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது. கி. பி. 1680ம் வருஷத்திலிருந்தே பிரான்சுக்கும், சையாமுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருந்தது. இந் நாட்டில், பிரெஞ்சுக்காரருக்கும் பிரிட்டிஷாருக்கும் சொந்தமாயுள்ள பிரதேசங்களுக்கு நடுவில் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு உபயோகப்படுத்திக் கொள்ளக்கூடிய ஒரு நாடாக இது இருந்து வந்திருக்கிறது. 1855ம் வருஷம் சையாமுக்கும் பிரிட்டிஷாருக்கும் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டு அதன்படி பிரிட்டிஷாருக்கு சையாமில் வியாபார சலுகைகள் பல ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. சையாமில், பிரெஞ்சுக்காரருக்கும் பிரிட்டிஷாருக்குமுள்ள ஆதிக்கப் பிரதேசங்களின் எல்லையைப்பற்றி, அடிக்கடி இருநாட்டினருக்கும் மனஸ்தாபங்கள் ஏற்பட்டன. இதில் இடையிடையே சையாமும் உபயோகித்துக்கொள்ளப் பட்டது. சையாம், ஒரு சுதந்திர நாடாக இருந்தபோதிலும், இதில் பிரிட்டிஷாருடைய செல்வாக்கும் பிரெஞ்சுக்காரருடைய செல்வாக்கும் மாறி மாறி ஏற்பட்டுவந்தன. அரசர்களும், தங்கள் தங்கள் நாட்டின் நலனுக்காக இந்தச் செல்வாக்கை உபயோகித்தும் வந்தனர். 1914ம் வருஷம் ஐரோப்பிய மகாயுத்தத்தில், சையாம, நேசக் கட்சியினருடைய தூண்டுதலின் பேரில், ஜெர்மனிக்கு விரோதமாக யுத்தம் தொடுத்தது. யுத்தம் முடிந்த பிறகு சையாம், சர்வதேச சங்கத்தில் ஓர் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

1932ம் வருஷம், சையாமில் தரைப் படையினரும் கப்பற்படையினரும் சேர்ந்து, அரசாங்கத்திற்கு விரோதமாகக் கலகஞ் செய்தனர். இதன் விளைவாக, சையாமில் மன்னரின் சுயேச்சாதிகாரம் போய், சட்ட ரீதியான ஆட்சி முறை ஏற்பட்டது. 1935ம் வருஷம் பிரஜாதி போக்

என்ற மன்னர் அரசு துறந்தார். இவருக்குப் பிறகு ஆனந்த மஹிதோல் என்ற இளங் குமார் பட்டஞ்சூட்டப் பட்டார். இவர் சிறுபிள்ளையாயிருக்கிற படியால் ஒரு ரீஜன்ஸி கவுன்ஸில் இப்பொழுது நிருவாகத்தை நடத்தி வருகிறது.

சையாம் எல்லைப்புறத்திற்குச் சமீபத்தில் பர்மாவிலுள்ள நகரங்கள் டவாய், மெர்குயி, மோல்மீன் முதலியன.

இந்தோ—சைனாவைப்பற்றி

கொச்சின்—சைனா, டாங் கிங், அன்னாம், கம்போடியா, லாவோஸ், க்வாங் சௌவன் ஆகிய இந்தப் பிரதேசங்களனைத்தும் சேர்ந்து, இந்தோ-சைனா அல்லது பிரெஞ்சு இந்தோ-சைனா என்று அழைக்கிறார்கள். இவை யாவும் பிரெஞ்சுக்காரருடைய ஆதிக்கத்திலிருக்கின்றன. இதனால் தான் இது, பிரெஞ்சு இந்தோ-சைனா என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பிரதேசமனைத்தையும் ஒரு பிரெஞ்சு கவர்னர்—ஜெனரல் நிருவாகம் செய்கிறார். இவருடைய தலை நகரம் ஹானோயி.

மேற்படி பிரதேசங்களில், கொச்சின் சைனா வென்பது, பிரெஞ்சுக்காரருடைய நேரான ஆதிக்கத்திலிருக்கிறது. இதனை நிருவாகம் செய்கிறவர் ஒரு கவர்னர். இதன் தலை நகரம் செய்கோன். மற்ற டாங் கிங், அன்னாம் முதலிய பிரதேசங்கள், 'பாது காப்பு மாகாணங்கள்' என்ற பெயரால், பிரெஞ்சுக்காரருடைய மேற் பார்வையில் ஆனால் தனித் தனியான நிருவாகத்திற்குட்படுத்தப் பட்டிருக்கின்றன. இந்த மாகாண அதிகாரிக்கு 'ரெஸிடெண்ட் சுபீரியர்' என்று பெயர்.

இந்தோ-சைனாவுக்கென்று, பிரெஞ்சுக்காரருடைய மேற் பார்வையில் தனியான தரைப் படையும் கடற் படையும் உண்டு.

இந்தோ—சைனாவின் மொத்த விஸ்தீரணம் 310,000 சதுர மைல். ஜனத்தொகை 21,652,000.

நம்முடைய கிராமங்கள் எப்படியிருந்தன?

1812ம் வருஷம் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையின் செலக்ட் கமிட்டி வெளியிட்டிருக்கும் ரிப்போர்ட்டில், நம்முடைய சென்னை மாகாணத்தின் ஒரு கிராமம் எப்படி நிர்வகிக்கப்பட்டு வந்தது என்பதைப்பற்றி எழுதியிருப்பதைப் பாருங்கள்.

1 தலைவர்—இவர், அந்தக் கிராமம் சம்பந்தப்பட்ட எல்லாக் காரியங்களையும் மேற்பார்வை செய்வார். கிராமவாசிகளுக்குள் ஏதேனும் தகராறு ஏற்பட்டால் அதைத் தீர்த்து வைப்பார். ஊர் பாதுகாவல் பொறுப்பு இவருடையது. சர்க்காருக்கு அந்தக் கிராமவாசிகள் செலுத்தவேண்டிய வரியை வசூலிப்பவரும் இவரே. இந்தத் தலைவரை கிராமவாசிகளே தெரிந்தெடுக்கிறார்கள்.

2 கணக்கப்பிள்ளை—அந்தக் கிராமத்தின் விளை பொருள் சம்பந்தப்பட்ட எல்லாக் கணக்குகளும் இவரிடமிருக்கும்.

3 பாதுகாவலர்— பெரிய பாதுகாவலர், சிறிய பாதுகாவலர் என்று இவர்கள் இருவகைப்படுவர். குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது, அந்தக் கிராமத்திற்கு வந்திருக்கும் வெளியார்களையும் அவர்களது சொத்துக்களையும் பாதுகாப்பது இவைகள் பெரிய காவலருடைய வேலைகள். வேளாண்மைகளைப் பாதுகாப்பது, தான்யங்களைச் சேகரிப்பது அளப்பது முதலிய வேலைகளுக்கு உதவி செய்வது இவை சிறிய காவலருடைய வேலைகள்.

4 எல்லைக் காவலர்— அந்தக் கிராமத்தினுடைய எல்லைப்புறத்தைப்பாதுகாப்பவர்.

5 நீர்ப்பாய்ச்சி—கண்மாய், அல்லது ஏரி இவைகளைப் பராமரித்துக் கண்காணிப்பவர். ஒவ்வொரு நிலங்களுக்கும் காலத்தையும் நிலைமையையும் அனுசரித்து தண்ணீர் பாய்ச்சுவிப்பவர்.

6 புரோகிதர்—அந்தக் கிராமக் கோவில்களின் பூஜை வகையறாக் காரியங்கள் இவருடைய பொறுப்பில் நடைபெறும்.

7 உபாத்தியாயர்— கிராமத்துக் குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கவேண்டியது இவருடைய பொறுப்பு.

8 ஜோஸிடர்— விதை விதைத்தல், நடவு நடல், அறுப்பறுத்தல் மற்ற நல்ல காரியங்கள் இவைகளுக்கு நாள் பார்த்துச் சொல்லவேண்டியது இவருடைய வேலை.

—மா. சர்மா, B. A. (Hons)

சிலப்பதிகாரம்—புறஞ்சேரி புக்கது

பாண்டியன் பெருமை:

திசைகளின் எல்லையே தென்னவன் சிறப்பின் எல்லையும். அவன் ஆட்சியில் மக்களேயன்றி மிருகங்களுங்கூட ஒருவருக்கும் இன்னல் இழைப்பதில்லை. காடிகள் பாம்பின் புற்றுகளைத் தோண்டமாட்டா. ஒளி பொருந்திய வரிகளையுடைய வேங்கைகள் மருண்ட பார்வையையுடைய மான்களோடு மாறுபடுவதில்லை. பாம்பும் முதலையும் தம்மைத் துன்புறுத்தியவருக்குங்கூட துன்பம் தரமாட்டா. இடிக்கும், கொடிய தேவதைகளுக்கும் எவரும் பயப்பட வேண்டியதில்லை. இயற்கையிலேயே துர்க்குணமுடைய கொடிய ஜந்துக்களும் இவ்வாறு அஹிம்ஸை முறையில் அணுவளவும் பிசகாது நடப்பது பாண்டியன் ஆட்சிச்குப் பெருமையைத் தருவதல்லவா?

கோள்வல் உளியமும்
 கொடும்புற்று அகழா
வாள்வரி வேங்கையும்
 மான்கணம் மறலா
அரவும் சூரும்
 இறைதேர் முதலையும்
உருமும் சார்ந்தவர்க்கு
 உறுகண் செய்யா
செங்கோல் தென்னவர்
 காக்கும் நாடென
எங்கணும் போகிய
 இசையோ பெரிதே.

வெய்யிலின் கொடுமை:

இவ்வளவு சிறப்புடைய இராச்சியத்தில் மக்களுக்கு ஒரே ஒரு குறை இருந்தது. அதுதான் சூரிய வெப்பம். சூரியன் தன் முழு வெப்பத்தையும் பாண்டிய நாட்டிற்கே தருகிறான் என்று சொல்லலாம். ஐயறிவுடையவை என எல்லோரும் இழித்துக் கூறும் மிருகங்களை அந்நாட்டினர்க்குத் துன்பம் ஒன்றும் தராதிருக்க, தேவன் என்று கருதப்படும் சூரியன் மக்களை அப்படி வதைப்பானேன்? பாண்டியன சந்திர வம்சத்தவன் என்ற காரணத்தாலோ?

கண்ணகியால் இவ் வெப்பத்தைத் தாங்க முடியவில்லை. பருக்கைக்கற்கள் வழி நெடுக இருந்ததால் அவள் கால்களில் கொப்புளங்கள் கிளம்பின. பாதங்கள் பூமியில் படியவில்லை. ஆகவே கோவலன் கவுந்தியடிகளை நோக்கி, "இந்நாட்டில் மிருகங்களால் ஏற்படக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை பகற்காலத்தில் நடந்து கஷ்டப்படுவதைவிட இராக்காலத்தில் பயணஞ் செய்யலாமே. இதில் குற்றம் ஒன்று இல்லையே எனக் கேட்டான். கண்ணகியின் நிலையை நோக்கி கவுந்தியடிகளும் சம்மதித்தார்.

சந்திரன் தோற்றம்:

குடிகளை வருத்தும் கொடுங்கோலன் ஆட்சியில் மக்கள் என்ன

பாடுபடமாட்டார்கள்! "இவ்வரசன் என்று ஒழிவான். நம்மைக் காக்க நல்ல அரசன் எப்பொழுது ஏற்படுவான்" என்று ஏங்கித் தவிக்கமாட்டார்களா? அதுபோலவே கோவலன் முதலானோர், "சூரியன் எப்பொழுது மறைவான். உலகத்து உயிர்களை உவப்பிக்கும் சந்திரன் எப்பொழுது தோன்றுவான் என்று எதிர்பார்த்த வண்ணம் இருந்தனர்.

சூரியன் மேற்றிசையில் மறைந்தான். சந்திரன் தோன்றிவிட்டான். அவனோடு அரசனைப் பின்பற்றிவரும் சேனைகளின் கூட்டம்போல், நக்ஷத்திரங்கள் திரள் திரளாய்த் தோன்றின. வெள்ளிய நிலா பால் போல எங்கும் பரந்தது.

கொடுங்கோல் வேந்தன்
குடிகள் போலப்
படுங்கதிர் அமையம
பார்த்திருந்தோர்க்குப்
பன்மீன் தானையொடு
பாற்கதிர் பரப்பித்
தென்னவன் குலமுதல்
செல்வன் தோன்றி....

பூமகள் புலம்பல்

குளிர்ச்சி பொருந்திய சந்திர கிரணங்களும், பொதிய மலையிற் பிறந்து, மதுரையில் வளர்ந்து, புலவர் நாவிற் பூக்க தென்றலும் கண்ணகியின் மேல் வீசின. இந்நிலையில் அவனைக் காண பார்மகளுக்குப் பிடிக்கவில்லை.

முன் மாதவியின் மையலில் மயங்கிக் கோவலன் பிரிந்திருந்தான். அப்பொழுது கண்ணகி நக்ஷத்திரங்கள் போல் மின்னுகின்ற ஒளி பொருந்திய முத்துக்கள் கோத்த வடத்தைக் கழற்றி யெறிந்துவிட்டாள். அவள் மார்பில் குளிர்ச்சியைத் தந்து மகிழ்விக்கும் சந்தனம் பூசிக்கொள்வதைத் தவிர்த்தாள். நல்ல மணம் பொருந்திய மலர்களையும் கூந்தலில் முடிப்பதில்லை. இன்பத்தைத்தரும் எப்பொருளையும் துறந்து துன்பக் கடலில் மூழ்கியிருந்தாள்.

இப்பொழுது கோவலன் அவளுடன் இருக்கிறான். தென்றலும் வீசுகிறது. நிலவும் பால்போல் பிரகாசமாய்க் காய்கிறது. இந்நிலையிலும் கண்ணகிக்கு இளமைக்குரிய இன்பம் அடைய இடமில்லையே என்பதுதான் பூமகள் வருத்தம்.

மாதவியைப் பிரிந்ததால் ஏற்பட்ட புண் இன்னும் ஆறியிருக்காது. மதுரைக்குப் போய்ச்சேர வேண்டும் என்ற உறுதி கோவலன் மனம் முழுவதையும் பற்றியிருக்கும். இவையோடு நில்லாது அவர்களோடு வழித்துணையாய் வருபவர் ஒரு தவசி. கணவனுடன் இருந்தும் கண்ணகி களிக்கக் கொடுத்துவைக்கவில்லையே! இதைச் சிந்தித்துப் பார்மகள் வருத்தப்பட்டு, நெட்டுயிர்ப்புக் கொண்டவளாய்த் துயின்றாள்.

தாரகைக் கோவையும்
சந்தின் குழம்பும்
சீரிள வனமுலை சேராது
ஒழியவும்
தாதுசேர் கழுநீர் தண்பூம்
பிணையல்
போதுசேர் பூங்குழல்
பொருந்தாது ஒழியவும்

பைந்தளிர் ஆரமொடு
    பல்பூங் குறமுறி
செந்தளிர் மேனி சேராது
    ஒழியவும்
மலயத் தோங்கி மதுரையின்
    வளர்ந்து
புலவர் நாவில் பொருந்திய
    தென்றலொடு
பானிலா வெண்கதிர்
    பாவைமேற் சொரிய
வேனிற் றிங்களும்
    வேண்டுதி யென்றே
பார்மகள் அயர்வுயிர்த்து
    அடங்கிய பின்னர்....

வழி நடத்தல்

இப்பொழுது குளிர்ந்த நிழலில் நடந்து போகிறார்கள். வெப்பத்தால் வரும் துன்பம் ஒழிந்தது. ஆனால் தூக்க மயக்கத்தில் தள்ளாடித் தள்ளாடி நடக்க வேண்டியிருந்தது. கொடிய மிருகங்களின் கூக்குரல் கண்ணகியை நடுங்கச் செய்தது. கோவலன் அவளைத் தன் தோள்களைப் பற்றிய வண்ணம் நடக்கச் சொல்லி, தூக்கம் ஒழிய கவுந்தி அடிகளைக் கதைகள் சொல்லுமாறு கேட்டுக் கொண்டான்.

இவ்விதம் கஷ்டப்பட்டுக் கொண்டு கோழி கூப்பிடும் நேரம் வரையில் நடந்து சென்றனர். பொழுது புலர்ந்தது. இசைப் பயிற்சியில் ஈடுபட்ட அந்தணர் வாழும் ஊர் ஒன்றைச் சேர்ந்தனர். அவ்வூருக்கு வெளியேயிருந்த ஒரு கோவிலில் தங்கினர்.

கௌசிகன்

கவுந்தியடிகளையும் கண்ணகியையும் கோவிலில் விட்டு விட்டு, கோவலன் காலைக் கடன்கள் கழிக்க நீர்நிலை ஒன்றைத் தேடிச் சென்றான். வழியில் மாதவியால் அனுப்பப்பட்ட கௌசிகன் என்ற அந்தணன் அவனைப் பார்த்தான். புகார் நகரத்தை விட்ட பிறகு கோவலன் கண்ணகியோடு வெளி வந்ததைப் பற்றி மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தானாகையால் உடம்பு மெலிந்து உருமாறி இருந்தான். மேலும் சூரிய வெப்பத்தால் அவன் முகம் கருத்திருந்தது. ஆகவே முதலில் அந்தணனால் அவனை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை.

சூழ்ச்சி

கௌசிகனுக்கு மட்டும் இவன் கோவலனாயிருக்க வேண்டும் என்று பட்டது. அதை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ள ஒரு உபாயம் செய்தான். அருகில் வாடிப் போன ஒரு குருக்கத்திப் புதரைக் கண்டான். குருக்கத்திக்கு மாதவி என்ற மறு பெயர் உண்டு. அதை நோக்கி, 'கோவலன் பிரிவால் வருந்தி உடல் மெலிந்து வாட்டமுற்ற மாதவி போல நீயும் வெய்யிலின் கொடுமையால் வாடினாய் போலும்! இது உங்கள் பெயரின் விசேஷமா?' என்று கூறினான்.

கோவலன் பிரியக்
    கொடுந்துயர் எய்திய
மாமலர் நெடுங்கண்
    மாதவி போன்றில்

வருந்திறல் வேனிற்கு
அலர்களைந்து உடனே
வருந்தினை போலும்நீ
மாதவி......................

மாதவி என்ற சொல் கேட்டவுடன் கோவலன் திடுக்கிட்டான். கௌசிகனை அணுகி 'நீ கூறிய சொற்களின் பொருள் என்ன?' என்று கேட்டான். கௌசிகனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. சிரமமில்லாமல் கோவலனைக் கண்டு கொண்டான் அல்லவா?

கௌசிகன் கூற்று:

'கோவலா! நீயும் நின் மனைவியும் விடியற் காலத்தில் வெளிக் கிளம்பிப் போன செய்தி தெரிந்ததும் நேர்ந்த விபரீதங்கள் பல. பெருஞ் சொத்துக்கு அதிபதியான உன் தந்தையும், உன் தாயும், தம் அருமையான மாணிக்கத்தை யிழந்து விட்ட நாகம் போல் தவித்தனர். உன் சுற்றத்தாரெல்லாம் இனிய உயிரை யிழந்த உடல் போல் செயலற்ற நிலையை யடைந்தனர். உங்களைத் தேடத் திசையெங்கும் ஏவலாளரை அனுப்பினர். தகப்பன வார்த்தையைத் தட்டாமல், அரசுரிமையைத் துச்சம் என்று கொண்டு,' அயோத்திநகரை விட்டு ராமன் காட்டுக்குச் சென்ற பொழுது, அயோத்தி மாந்தர் அடைந்த துன்பம்போல், ஊரார் உன்வெளிப் பாட்டிற்கு வருந்தினர்.

இருநிதிக் கிழவனும் பெருமனைக்
கிழத்தியும்
அருமணி இழந்த நாகம்
போன்றதும்
இன்னுயிர் இழந்த யாக்கை
யென்னத்
துன்னிய சுற்றம் துயர்க்கடல்
வீழ்ந்ததும்
ஏவலாளர் எங்கணும்
சென்று
கோவலர்த் தேடிக் கொணர்கெனப்
பெயர்ந்ததும்
பெருமகன் ஏவல் அல்லது
யாங்கணும்
அரசே தஞ்சமென்று அருங்கான்
அடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி
போலப்
பெரும்பெயர் மூதூர் பெரும்பேது
உற்றதும்....

இவ் விஷயங்களை வயந்த மாலை மாதவிக்கு வந்து சொன்னாள். அடங்காத் துயரம் அடைந்தவளாய் மாதவி மயங்கி வீழ்ந்தாள். அதைக் கேள்விப்பட்ட நான் அங்குச் சென்றேன். மாதவி என்னை வணங்கி, "கண்மணி யனையாற்குக் காட்டி என் துயர் நீக்கு" எனத் தன் மலர்க் கையால் ஓலை ஒன்று எழுதித் தந்தாள். அதை எடுத்துக் கொண்டு நான் அலைந்த தேசங்கள் எண்ணில. இன்று உன்க் கண்டேன். இதோ ஓலை என்று மாதவியின் ஓலையைக் கோவலன் கையில் கொடுத்தான் கௌசிகன்.

ஓலையின் வாசகம்

ஓலையின் மேல் முத்திரை காணப்பட்டது. அது மாதவியின் கூந்தலின் வகிட்டின் குறி. அதைப் பார்த்த அளவில் கோவலனுக்கு வாசனை பொருந்திய அக்கூந்தல் ஞாபகத்திற்கு வந்தது. ஓலையைப் பிரிக்க மனம் வரா

மல் சில நேரம் திகைத்து நின்றான். பின் ஒருவாறு தேறி ஓலையைப் பிரித்துப் படித்தான்.

"உயர்ந்தோனே! தாய் தந்தையர் பணிவிடையைக் கைவிட்டதோடு, குலக் கொடியாகிய கண்ணகியுடன் இரவில் நகரத்தை விட்டு வெளிப் போந்ததற்குக் காரணம் என்ன? ஒருவேளை என்னால் நேர்ந்திருக்குமோ என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கிறேன். என் தவறாக இருந்தபோதிலும் மகளிர் சொல் குற்றமறாத சொல் என்று கொள்ள வேண்டுகிறேன். மேலும் நான் தனித்திருப்பது எனக்குத் துயர் தருகிறது. இதைத் தீர்த்தல் வேண்டும். உம் பெருமைக்குக் குறைவு வாராமல் நடந்துகொள்க" என்று மாதவி எழுதியிருந்தாள்.

உடனுறை காலத்து உரைத்தநெய்
 வாசம்
குறுநெறிக் கூந்தல் மண்பொறி
 யுணர்த்திக்
காட்டிய தாதலிற் கைவிடல்
 ஈயான்
எட்டகம் விரித்தாங்கு எய்தியது
 உணர்வோன்
அடிகள் முன்னர் யானடி
 வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக்கொளல்
 வேண்டும்
குரவர்பணி யன்றியும் குலப்பிறப்
 பாட்டியோடு
இரவிடைக் கழிதற்கு என்பிழைப்பு
 அறியாது
கையறு நெஞ்சம் கடியல்
 வேண்டும்
பொய்தீர் காட்சி புரையோய்
 போற்றி....

கடிதத்தைக் கண்டபின் கோவலனுக்கு மாதவியின்மேல் இருந்த கோபம் ஒழிந்தது. அவள் நிலைக்குப் பெரிதும் வருந்தினான். கௌசிகனை நோக்கி 'அவள் மேல் குற்றம் ஒன்றுமில்லை. இது என்னால் ஏற்பட்டதே. இக்கடிதத்தில் கண்ட செய்தி என் தந்தைக்கும் பொருந்துகிறது. இதை என் தந்தையிடம் தந்து, அவருக்கும் சுற்றத்தாருக்கும் தேறுதல் கூறு' எனக் கூறினான்.

"குரவர் பணிவிடைகளைத் தவிர்த்ததன்றியும் குலப் பிறப்பாட்டியோடு இரவில் வெளிச் சென்றேன். இவற்றால் ஏற்படும் துன்பம் காரணமாக மனம் கலங்கவேண்டாம். என் பிழைப்பறியாது நான் கூறும் இச்சொற்களை திருவுளம் கொள்க" என்னும் பொருள் தருவதால் மாதவியின் கடிதம் கோவலன் தந்தைக்குத் தக்க கடிதமாக அமைந்தது.

மதுரைக்கு வழி கேட்டல்

கௌசிகன் சென்றபின் கோவலன் கோயிலுக்குச் சென்றான். அங்கு துர்க்கையைச் சிறப்பித்து பாடிக் கொண்டிருந்த பாடகர்களுடன் தானும் சேர்ந்து சிலநேரம் பாடினான். பின் அவர்களை நோக்கி "மதுரை இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது" எனக் கேட்டான். அவர்கள்,

அட்டிற் புகையும்
 அகலங் காடி
முட்டாக் கூவியர்
 மோதகப் புகையும்
மைந்தரும் மகளிரும்
 மாடத் தெடுத்த

அந்திம் புகையும்
ஆகுதி புகையும்

ஆகிய பலவகைப்பட்ட புகைகளையளாவி, புலவர் நாவாலே ஏத்தப்படும் ஒரு சிறப்பையே உடைய பொதியில் தென்றலினும் வேறுபட்ட மதுரைத் தென்றல் வீசுகிறது தெரியவில்லையா? அதனால் மதுரை அருகில் உள்ளது என அறியலாமே என்றனர்.

பொதியில் தென்றலுக்குப் புலவர் ஏத்தும் சிறப்பு மட்டுந்தான் உண்டு. மதுரைத் தென்றல் பல நறுமணமுள்ள புகைகளை அளாவி வருவதால் அதனின் மேம்பட்டதாகிறது. அது திரட்டி வரும் புகைகளில் அட்டிற் புகை ஒன்று. விருந்தினர்க்கு என்றே அரிசியை உலையேற்ற வேண்டும் என நூல்கள் கூறுவதால் "அட்டிற்புகை" மதுரை மக்கள் அறத்தின் வழி நிற்போர் என்று அறிவிக்கிறது. அது போலவே போதகப் புகையும், மைந்தரும் மகளிரும் எடுக்க அகிற் புகையும், அந்தணர் ஆகுதிப்புகையும், முறையே பொருள், இன்பம், வீடு இவைகளைக் குறிப்பாய் கூறுகின்றன; இதனால் மதுரை மக்கள் நான்கு புருஷார்த்தங்களையும் கடைப்பிடித்து ஒழுகுபவர் எனத் தெரிகிறது.

வையை

மதுரை அருகில் உள்ளது என்று அவர்கள் கூறிச் சென்றபின், முதல் நாளைப் போலவே அன்றிரவில் மீண்டும் பயணத்தைத் துவக்கினார்கள். விடியற்காலத்தில் வையை என்னும் ஆற்றின் கரையை வந்து அடைந்தனர்.

வையைக் கரையெங்கும் குரவம், மகிழம்; கோங்கு, வேங்கை, வெண்கடம்பு, சுரபுன்னை, மஞ்சாடி, பாதிரி முதலிய பலமரங்கள் செழித்து ஓங்கி வளர்ந்திருக்கின்றன. அம் மரங்கள் பூக்கள் மலிந்து இருப்பதைப் பார்த்தால், வையைப் பெண் உடுத்திய பூவாடையோ இது என்ற எண்ணம் தோன்றும்.

கரைச் சரிவுகளிலே குருக்கத்தி, செம்முல்லை, முசுட்டை, மல்லிகை, திருவாட்சி, பிடவம் முதலிய பூங்கொடிகள் படர்ந்து ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு இருக்கின்றன. அவற்றின் காட்சி வையைப் பெண்ணின் முத்துக்கள் கோத்த மேகலாபரணத்தை நினைவூட்டுகின்றது.

கரையின் மேலிருந்து முருக்கமரம் உதிர்த்த சிவந்த புஷ்பங்கள் வையையின் செவ்விதழ்கள். ஆற்றில் அருவி நீரோடு கலந்து ஓடும் முல்லைப் பூக்களே அவள் பற்கள். வெள்ளத்தை எதிர்த்துச் செல்லும் கயல் மீன்கள் தாம் அவள் கண்கள். இரண்டு பக்கங்களிலும் நீர் அறலிய கருமணலே அவள் கூந்தல். அக் கருமணலினிடத்து உதிர்ந்த பூக்கள் அவள் கூந்தலில் முடித்த பூக்கள். இவ் வையை உலகத்து மக்களைக் காக்கும் உயர்ந்த ஒழுக்கமுடையாள். பல பொருள்களும் விளைவதற்குக் கருவியாயிருக்கிறாள். புலவர்களால் போற்றப்படுபவள்.

கோவலன் முதலியோர் அவ் வாற்றங்கரையை அடைந்தது விடியற்காலம். ஆகவே ஆறு முழுவதும் பூக்களால் மூடப்பெற்றிருந்தது. பார்ப்

போர் இது பூக்கள் ஒழுகும் ஆறு என்று சொல்லும்படி இருந்தது.

பூக்களால் மூடப்பட்டிருந்த வையை நதியின் இயற்கைக் காட்சியை ஆசிரியர் கதையின் போக்கை அறிவிக்கும் கருவியாக உபசரிக்கிறார். வையைப் பெண்ணிற்கு, கண்ணகிக்கு மேல் நேரப்போகும் கஷ்டங்களைப்பற்றித் தெரியுமாம். அதனால் அவள் கண்ணகியின் நிலைக்கு வருந்தி விடும் கண்ணீராகிய நீரை, கோவலன் முதலியோர் பார்த்தால் வருத்தப்படுவார்கள் என்று நினைத்துப் பூவாடையைப் போர்வையாகக்கொண்டு தன் கண்ணீரை மறைத்துவிட்டாளாம்.

மாதவியை விட்டுப் பிரிந்துவந்த கோவலனை கண்ணகியோடு சேர்ப்பதற்கு முன், ஆசிரியர் கண்ணகி கனவு காண்பதாகச் சித்தரித்து கதையின் பின் பாகத்தைக் குறிப்பாய்க் காட்டினார். அதுமுதல் இதுவரையும் அவர்கள் வழி நடந்ததையும் வழிகளில் கண்ட காக்ஷிகளையும் வர்ணித்து வந்ததால், கதைப்போக்கை மறுபடியும் நமக்கு ஞாபகமூட்ட வையைக் காட்சியைச் சித்தரிக்கிறார்.

ஆற்றைக் கடந்தது:

அவ்வாற்றைக் கடக்க அநேக ஓடங்கள் இருந்தன. அவற்றில் சில குதிரை முகம் போலவும், சில யானை முகம் போலவும், சில சிங்க முகம் போலவும் செய்யப்பட்டு விளங்கின. ஒரு படகின் மூலம் மூவரும், மக்கள் நடமாட்டம் அதிகமில்லாத ஒரு துறையில் சென்று இறங்கினர்.

அகழி:

தென் கரையில் மதுரையை வலங்கொண்டு சென்றால் புண்ணியம் உண்டு என்று நினைத்தது போல் அந்நகரத்தை சுற்றி வளைந்து ஓடும் அகழியைக் கண்டனர்.

அவ்வகழியின் கரையில் பல சோலைகள் இருந்தன. அவற்றில் புஷ்பித்த பூக்கள் தேனைத் துளிக்கின்றன. தேனுக்குத் திரியும் வண்டுகள் ரீங்காரம் செய்து கொண்டிருக்கின்றன. இக்காட்சியும் கண்ணகிக்கும் கோவலனுக்கும் நேரப் போகும் கஷ்டத்தை எடுத்துரைப்பனவாக உபசரிக்கிறார் ஆசிரியர். புஷ்பங்கள் அவர்கள் நிலைக்கு வருந்தினவாய் கண்ணீர் உகுக்கின்றனவாம். வண்டுகள் செய்த சப்தம் அவற்றின் அழுகையாம். இக்குறிப்புகளோடு நில்லாது நான் மாடக் கூடலின் புறமதிலின் மேல உயரப் பறக்கவிட்டிருந்த கொடியும் 'உள்ளே வர வேண்டாம்' என்று அவர்களை நோக்கிக் கூறுவன போல் அசைந்து ஆடினவாம்.

கதையின் விளைவு அண்மையில் இருக்கிறது. இவ்விளைவின் வித்து மாதவியும் கோவலனும் கடற் கரையில் பாடிய காலத்தில் விதைக்கப்பட்டது. அதன் பின் அதைப் பற்றிய நினைவு வாராதபடி ஆசிரியர் பலவர்ணனைகளை இடையே பெய்திருக்கிறார். விளைவைக் கூறப்போகும்போது "எதிர்பாராத விளைவு" என்ற எண்ணம் ஏற்படாதிருக்க இரண்டு முறைகள் வித்து விதைத்ததைக் நமக்கு ஞாபகமூட்டுகிறார். காவியத்தின் பயன் நமக்கு சிறந்த நீதியைத் திருஷ்டாந்தமூலம்

அம்மா !

—"தேவகவி"

அம்மா! சங்கீதம், மௌனத்திலே போய்
லீனமடையலாம்;

சிரத்தை, வைராக்கியத்திலே
கொண்டுபோய்ச் சேர்க்கலாம்;

சூரியனைக் கண்ட தாமரை இதய விகாசமே
யடையாமற் போகலாம்;

ஆனால், சேயான என்னை தாயான நீ
தள்ளித்தான் வைப்பையோ?

உலகத்தில் கெட்ட பிள்ளைகள்
இருப்பது சாதாரணம்.

கெட்ட தாய்மார்கள்
இருக்கவேமாட்டார்களல்லவா?

கற்பிப்பதாகும். அது கற்பிக்கும் நீதி நம் மனத்தில் ஆழ்ந்து பதிய நம் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பக் கூடிய சம்பவங்களைச் சித்தரிக்கும். அது சித்தரிக்கும் சம்பவம் காரண காரியப் பிணைப்பற்றதாயிருந்தால் நம் மனத்தில் உணர்ச்சி ஒன்றும் ஏற்படாது. ஆகவே இக் காரண காரியப் பிணைப்பே கதையின் முக்கிய அம்சமாதலானும், அப் பிணைப்பில்லையில் அக் காவியத்தால் மக்களுக்கு ஏற்படும் நன்மை ஒன்றும் இல்லையாகலானும், ஏற்கனவே ஏற்படுத்திய பிணைப்பை இவ்விரு செய்திகளின் மூலம் ஆசிரியர் உறுதியாக்குகிறார்.

—"சங்கர குமாரன்"

பத்மினி

இன்றைக்குச் சுமார் 650 ஆண்டுகளுக்கு முன் வட இந்தியாவிலுள்ள மீவார் நாட்டை பீம்ஸிங் என்னும் இராஜ புத்திர வீரன் ஆண்டு வந்தான். சித்தூர் அவன் நாட்டின் தலை நகரமாக விளங்கிற்று.

பீம்ஸிங் ஒரு சுத்த வீரன். அவனுக்கு பத்மினி என்ற மனைவி இருந்தாள். அவள் அழகிற் கேற்பவே அவள் பெயரும் அமைந்திருந்தது. பொன் மலர் நாற்றமுடைத்து என்றவாறு அழகிற் கேற்ற அறிவும், ஆற்றலும் பெற்றிருந்தாள். அவள் அழகு உலகப் பிரசித்தமாக இருந்தது. கண்டோர் அனைவரும் உலகில் அவளை விட அழகுள்ளவர்கள் இல்லை என்றே சொல்லிப் போனார்கள்.

இது சமயம் டில்லியை அலாவுதீன் என்னும் கில்ஜி வம்சத்து மகமதிய மன்னன் ஆண்டு வந்தான். வீரமுள்ளவனாயினும் சுயநலப் பிரியன். சுயநலத்தின் பொருட்டு எந்தக் காரியத்தையும் செய்யச் சித்தமாவான். திக்விஜயம் செய்து எல்லா நாடுகளையும் ஜெயித்து வரும் போது மீவார் நாட்டின் தலைநகராகிய சித்தூரையும் எதிர்த்து முற்றுகை யிட்டான்.

பத்மினியின் அழகைப் பற்றிக் கேள்விப்பட்டான். உடனே பத்மினியைத் தன் மனைவி யாக்கிக் கொள்ள மன உறுதி கொண்டான். என்னே இவனது கெட்ட எண்ணம்! பிறர் மனைவியை இச்சித்தலால் வரும் தீமை அறியான் போலும்!

சித்தூர் முற்றுகை உலகப் பிரசித்தமானது. அலாவுதீன் பெருஞ் சேனை கொண்டு சித்தூரை எதிர்த்தான். பீம்ஸிங்கும் இராஜ புத்திர வீரர்களுடன் தன் கோட்டையைக் காத்து நின்றான். பீம்ஸிங்கின் சேனை சிறியது. அலாவுதீன் சேனையோ பெரியது. ஆயினும் வெகு நாட்கள் வரையில் முடிவு ஒன்றும் ஏற்படவில்லை. பீம்ஸிங் தன் இராஜ்யத்து ஜனங்களின் சுகம் கருதி அலாவுதீனைச் சமாதானத்திற்குக் கூப்பிட்டான். இதுதான் சமயமென அலாவுதீன் பத்மினியைத் தனக்கு மனைவியாக்கிக் கொடுத்தால் சமாதானத்திற்கிசைவதாகச் சொன்னான். என்னே அவன் காம மயக்கம்! இத்தகைய இழிதொழிலுக்கு யாராவது உடன்படுவார்களா! அதுவும் இராஜபுத்திரர்கள்! ஒருக்காலும் இசையார். சண்டை மறுபடியும் துவக்கிற்று. நாட்கள் பல கழிந்தன. இத்தடவை அலாவுதீனை சமாதானத்திற்கு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. பத்மினியின் உருவத்தையாவது நிலைக்கண்ணாடியில் காட்டினால் சமாதானத்திற்கு உடன் படுவதாகக் கூறினான். இது சமயம் இராஜபுத்திரர்கள் அவன் காம வேட்கைக்கு வியந்து ஒத்துக் கொண்டனர்.

அடுத்த நாள் அலாவுதீன் வந்தான். பீம்ஸிங்கும் அவனை வரவேற்று நிலைக் கண்ணாடி வைத்திருக்கும் இடம் அழைத்துச் சென்றான். பத்மினி திரை மறைவிலிருந்து தன்னுருவைக் கண்ணாடியில் காட்டினாள். அலாவுதீன் உருவத்தைப் பார்த்து வந்த வழியே திரும்பினான். பீமஸிங் 'பகைவர் நேயம் புகையும் நெருப்பு' என்பதை அறியாது வழிவிடச் சிறிது தூரஞ் சென்றான். எதிர் பாராத வண்ணம் அவன் சிறை செய்யப்பட்டு அவர்கள் இடத்திற்குக் கொண்டு போகப்பட்டான்.

இச் செய்தியைப் பத்மினி அறிந்து விசனித்தாள். நம் வீட்டுப் பெண்கள் ஏதாவது ஆபத்து வந்தால் அழுது தீர்ப்பார்களே யல்லாது துன்பத்தினின்றும் நீங்கவழி தேட மாட்டார்கள். பத்மினி இந்தக் கோஷ்டியில் சேர்ந்தவள் அல்ல. எப்படித் தன் கணவன் உயிரையும் தன் மானத்தையும் காப்பாற்றிக் கொள்ளலாமென்று யோசித்து ஒரு முடிவுக்கு வந்தாள். தான் தனது பெருமைக்கும் அலாவுதீன் பெருமைக்கும் ஏற்ற தோழிப் பெண்களுடன் மூடு பல்லக்குகளில் ஏறிவரச் சம்மதித்தால் இஷ்டப்படி நடக்க ஆக்ஷேபணை இல்லை என்று அல்லாவுதீனுக்குச் செய்தியனுப்பினாள்.

இந்தக் கடிதம் கண்ட அலாவுதீன் தன் எண்ணம் ஈடேறி விட்டதென்று எண்ணி 'மனப்பால் குடித்து 'அப்படியே வருக' என்று பதிலனுப்பினான்.

பத்மினி ஏற்பாடு செய்தபடி இராஜ புத்திர வீரர்களைப் பெண்ணுடை தரிக்கச் செய்து மூடுபல்லக்குகளில் வர உத்திரவிட்டாள். தானும் ஒரு மூடு பல்லக்கிலமர்ந்து ஆடம்பரமாக அலாவுதீன் தங்கியிருந்த பாளயத்திற்குச் சென்றாள். மூடு பல்லக்குகளைச் சுமப்பவரும் பெண்ணுடை தரித்த ராஜ புத்திரர்களே யாவர்.

உண்மை யறியாத அலாவுதீன் பத்மினியை வரவேற்றான். பத்மினி அது தான் சமய மென்றெண்ணிக் கடைசி முறையாகத் தன் கணவனைப் பார்க்க வேண்டு மென்றாள். தன் கைச்சிக்கின பத்மினி தப்பமுடியா தென்றெண்ணி, அலாவுதீன் அலக்ஷியமாகத் தன் வீரர்களிற் சிலரை பீம்ஸிங் இருக்குமிடம் அழைத்துச் செல்லும்படி கட்டளையிட்டான். உடனே பத்மினி பீம்ஸிங் இருக்குமிடம் அழைத்துப் போகப் பட்டாள்.

பத்மினி தன் கணவனைக் கண்டு தன் எண்ணத்தைத் தெரிவித்து, போர் உடை தரிக்கச் செய்து, ஏற்கனவே சித்தமாக இருக்கும் இரு குதிரைகள் மீது ஏறிக்கொண்டு காற்றினும் கடுகிச் சென்றனர். பீம்ஸிங்கை ஏமாற்றின அலாவுதீனும் சரியானபடி ஏமாற்றப்பட்டான.

சௌக்கியமாக வெளியேறினர் பீம்ஸிங்கும் பத்மினியும் என்றறிந்த இராஜ புத்திர வீரர்கள் பெண்ணுடைகளைந்து ஆயுத மேந்தி அலாவுதீன் சேனையை எதிர்த்தனர். எங்கும் குழப்பம் உண்டாயிற்று. எதிர்பாராத வண்ணம் எதிர்க்கப்படவே அலாவுதீன் சேனைகள் சிதறி ஓடின. அலாவுதீனும் உயிர் தப்ப ஓட்ட மெடுத்தான். என்னே பெண்ணின் வீரம்! கணவ

—"நிர்வேத சைதன்யர்"

மதமும் தேசமும்

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் அரிய சாதனைகளின் பலனாக இந்துதர்மம் மறுமலர்ச்சியடைந்தது. அத்துடன் ஒரு புதிய இந்து மதம் பிறந்தது எனக் கூறலாம். அந்தப் புதிய மதத்தை சுவாமி விவேகானந்தர் தமது சுருதி, யுக்தி, அனுபவங்களினால் பரிசோதித்துப் பார்த்து, அது தற்கால புத்திமான்களால் அங்கீகரிக்கப்படக் கூடியதென்று உணர்ந்தார். அவருடைய கொள்கையின்படி, மதம் என்பது மனிதனுள் அடங்கியிருக்கும் தெய்வத் தன்மையின் வெளித் தோற்றம்; அது உள்ளத்தின் வளர்ச்சி; அதாவது பூரணத் தந்தை போல் பூரணம் பெற்று வானரசை (மோக்ஷ ராஜ்யத்தை) உள்ளத்தில் காண்பது. இயற்கை (பிரகிருதி) யின் பந்தங்களிலிருந்து நீங்குவதே மதங்களின் இலட்சியம். ஒவ்வொரு ஜீவனும் தெய்வத் தன்மையுடையவன்; பிரகிருதியை வசப்படுத்தி, தெய்வத்தன்மையை வெளிப்படுத்துவதே மனிதனின் இலட்சியம். இதைக் கர்மத்தினாலோ (கர்மயோகம்) அல்லது பக்தியினாலோ, (பக்தி யோகம்) அல்லது யோக மார்க்கத்தினாலோ, (இராஜ யோகம்) அல்லது ஞானத்தினாலோ (ஞான யோகம்) ஒன்றனுதவியைக் கொண்டோ அல்லது பலவற்றின் உதவியைக் கொண்டோ விடுதலை பெறுக. இதே சமயத்தின் கருப்பொருள். கொள்கைகள், கிரியைகள், கோயில்கள், புத்தகங்கள் என்பன அவ்வளவு சிரேஷ்டமானவையல்ல.

மனிதனின் கதியை நிச்சயப் படுத்தும் சக்திகளில் மதம் தலையாய இடம் பெறுகின்றது. எல்லாச் சமுதாய இயக்கங்களையும் ஒன்று சேர்க்கும் சக்தி வாய்ந்தது சமயந்தான். மனிதனின் இதயத்தை இயக்கும் இயந்திர சக்தியில் சிறந்தது சமயமே. ஆத்ம ஞானத்தைப் போல நம்மிடம் மின்சார சக்தியை ஏற்படுத்தக்கூடிய இலட்சியம் வேறொன்றுமில்லை. உலகத்தை அசைக்கும் மேதாவிகள், ஆத்மஞானமாகிய மின்சார சக்தி மலைகளேயாவர். அவர்களுடைய

னுயிரையும் காத்துத் தன் மானத்தையும் காத்துக் கொண்ட பெண்ணின் தைரியமல்லவோ தைரியம்!!

தப்பி ஓடிய அலாவுதீன் பழிக்குப் பழி வாங்க எண்ணி சேனை திரட்டி வந்து மறுபடியும் சித்தூரை முற்றுகையிட்டான். இராஜ புத்திரர்கள் சண்டை செய்து உயிர் விட்டு வீர சொர்க்கமடைந்தனர். பெண்கள் தீக்குளித்தனர். வெற்றி அலாவுதீனுக்கே கிடைத்தது. ஆனால் அந்த ராஜ்யத்தில் பிணக் குவியலன்றி இவன் ஆட்சி செய்ய ஒருவரும் உயிருடனில்லை.

வாழ்வானது காட்டுத் தீ போல் பரந்து பல்லாயிர மக்களின் ஆத்மஞான சுடரைப் பற்றி பெரியச் செய்கின்றது. அவர்களுடைய ஆற்றலுஞ் சமயத்திலிருந்தே வந்தது. அது ஒவ்வொரு மனிதனின் பிறப்புரிமையாயுள்ளது. அவனுடைய உண்மைச் சுபாவமாகிய நிரம்பிய ஆற்றலை உணரச் செய்வது ஒழுக்க நிறைவுக்கும், நன்மையும் பெருமையும் பயப்பனவாகிய எவற்றைச் செய்வதற்கும், பிறருக்குந் தனக்குஞ் சாந்தியைப் பெறுவதற்கும் சமயமே சிறந்தசக்தி. ஆகையினால் இந்த நோக்கத்துடன் மதத்தை நாம் ஆராய்ந்து படிக்க வேண்டும்.

ஜன சமுதாயங்களின் ஐக்கியத்துக்கும், இன்ப வாழ்வுக்கும் மதம் இன்றியமையாதது. தர்மத்தை அஸ்திவாரமாகக் கொள்ளாத எந்த நாகரிகமும் காலத்தில் அழிந்தொழிவது நிச்சயம். ரோம், கிரேக்க நாகரிகங்கள் நிர்மூலமானதற்குக் காரணமும் அதுதான். ஆனால் ஆஷாடபூதிகள், மதத்தின் பேரால் இழைத்த இன்னல்களையும் சரித்திரம் எடுத்துக் காட்டுகின்றது. ஒரு வெளிச்சத்தின் உதவியைக்கொண்டு ஒருவன் பாகவதம் வாசிக்கின்றான்; மற்றொருவன் கள்ள உறுதிப் பத்திரத்தை எழுதுகின்றான். திருட்டுப் பயல் திருட்டுப் பத்திரமெழுதுவது விளக்கின் குற்றமாகுமா? விஞ்ஞான சாஸ்திரிகள் கண்டுபிடித்த விதிகளை உபயோகித்து குரூரமான மனிதக் கொலை செய்வதற்கு விஞ்ஞான சாஸ்திரிகளைக் குற்றஞ் சொல்லலாமா? அதே போன்று க்ரூஸேட்ஸ் (Crusades) ஜெஹாட் (Jehad) என்னும் மதப் போர்கள் காரணமாக நடந்த படுகொலைகளுக்கு கிறிஸ்து நாதரையோ அல்லது முகம்மது நபிகளையோ குறை கூறலாமா? மனிதனின் அறியாமை, பொறாமை, தன்னலம், மிருகத் தன்மை என்பன காரணமாகவே மதத் துவேஷமும் சண்டைகளும் ஏற்படுகின்றன.

இந்த மதத் துவேஷத்தை வேரோடறுப்பதற்கு வழி சமரச தர்மந்தான். மனித சுபாவங்கள் பல; அதற்குத் தக்கவாறு மதங்களும் பல அமைக்கப்பட்டிருக்கின்றன. உலகிலுள்ள மதங்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடானவையல்ல; அவை ஒரு அகண்ட தர்மத்தின் பல்வகைத் தோற்றங்கள். இந்த ஒரு தர்மமே கால, தேச, மனித சுபாவ, வர்த்தமானங்களுக்கிசையப் பலவாகத் தோன்றுகின்றது. எல்லா மதங்களின் தேவையற்ற அம்சங்களை நீக்கி எஞ்சியிருப்பது சமரச சன்மார்க்கம் மட்டுமே. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் உலகுக்களித்த பெரும் நிதி இதுவேயாகும். கிரியாம்சத்தில் இதை எப்படிக் கைக்கொள்ளலாமென்பதை சுவாமி விவேகானந்தர் பின்வருமாறு கூறுகின்றார்:- "புராதன காலத்திலிருந்த சமயங்களனைத்தையும் நான் ஒப்புக்கொள்வது மட்டுமன்றி, அவையனைத்தையும் வழிபடுகின்றேன். அந்த மதத்தினர் ஒவ்வொருவரோடும், அவர்கள் எவ்வண்ணம் வழிபடுகின்றார்களோ அவ்வண்ணம் நானும் வழிபடுகின்றேன். முகம்மதியரின் மசூதி செல்வேன்; கிறிஸ்தவ ஆலயஞ் சென்று சிலுவையின் முன்னிலையில் முழந்தாளிடுவேன்; பௌத்த ஆலயஞ் சென்று புத்தரிடமும், அவருடைய தர்மத்தி

னுஞ் சரணாகதியடைவேன். ஒவ்வொருவருடைய உள்ளக் கமலத்தையும் ஒளிரச் செய்யும் ஒளியைத் தேடி தவஞ் செய்யும் இந்து மத தபசிகளுடன் தபோவனத்தில் தியானஞ் செய்வேன். இதைத் தவிரவும், இனிமேல் வரப்போகும் சமயங்களையும் ஏற்றுக்கொள்ளுவதற்கு எனது இதயத்தைத் திறந்தபடிவைத்திருப்பேன் வேதங்கள், பைபிள், குர் ஆன். இன்னும் மற்ற சமய சாஸ்திரங்களும், தர்மமாகிய புத்தகத்தின் சில பக்கங்களேயாகும். இன்னும் எண்ணிறந்த பக்கங்கள் அப் புத்தகத்தில் திறக்கப்படாமலிருக்கின்றது. அவை எல்லாம் திறக்கப்பட்டவுடன் அங்கீகரிப்பதற்கு எனது உள்ளத்தின் கதவைத் திறந்தபடிவைத்திருப்பேன். இதுவே வேதகாலத்து இந்தியாவின் ஆத்மீகச் செய்தி.” ஸ்ரீ ராமகிருஷ்ணரும் சுவாமி விவேகாநந்தரும் தங்கள் சரிதையாலும் அனுபவத்தாலும் இதை நிரூபித்திருக்கின்றனர்.

இந்திய மக்களின் துன்பங்களுக்குக் காரணமாயிருந்தவர் இந்தியரே. தனி மனிதனொருவன் தனது வினைப் பயனை அனுபவிப்பது போன்று, பல மனிதரைக் கொண்ட சமுதாயமும் அதன் அங்கத்தினரின் கூட்டுவினைப் பயனை அனுபவிக்கின்றது. இந்தியா தனது மூடத்தனத்தினால், ஐக்கியத்தையும், உறுதிப்பாட்டையுமிழந்தது; தேகபலம், மனோவலி, ஆத்ம தீரம் என்பனவற்றைக் கை நழுவவிட்டது இதைக்குறித்து சுவாமி விவேகானந்தர் கூறிய வார்த்தைகள், ஆகாயவிமானத்திலிருந்து வீசப்படும் வெடிகுண்டுகள் போன்று இந்திய சமுதாயத்தின் மேல் சிதறிவீழ்ந்தன. நாங்களே எங்கள் சீர்கெட்ட நிலைமைக்குக் காரணமாயிருக்கின்றோம். நமது செல்வச் சீமான்களாகிய முன்னோர்கள் சாதாரண மனிதரைத் தமது காலால் மிதித்து உய்ய வொட்டாது தடுத்தனர். அதன் பயனாக. அவர்கள் தாங்களும் மனிதர்தான் என்னும் எண்ணத்தையும் மறந்துவிட்டனர். இதற்கெல்லாம் முடிவு அடிமைத்தனமேயன்றி வேறென்று. பல விவேகிகள் இதற்கெல்லாம் காரணம் இந்து மதமே என்று அதன் மேல் பழி சுமத்தியிருக்கிறார்கள். தாழ்ந்தவர்களை முன்னேற்றுவதற்கு இவர்களுக்குத் தோன்றிய வழி என்னவெனில் இப்பூலோகத்திலுள்ள மிகச் சிறந்த மதத்தை நிர்மூலமாக்குவதுதான். இதற்கெல்லாம சூக்ஷமம் என்னவென்பதை இறைவனருளால் நான் கண்டுபிடித்து விட்டேன். நம் மதத்தில் தோஷமொன்றுமில்லை. பரமாத்மா எல்லா ஜீவன்களிலும் பரிணமித்திருக்கிறார் என்று நம்மதம் கூறுகின்றது. ஆனால் ஒவ்வொருவனும் தன் காரியத்தில அசத்தனையும் தயாள சிந்தையுமில்லாமலிருப்பதுதான் நிஜமான காரணம். அருட் பெருங் கடவுள் புத்தாவதாரமெடுத்து ஏழைகள், வியாகூலமுடையவர்கள், குற்றவாளிகள் என்பவர்களிடம் எவ்வாறு அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களை அறிந்து, அநுதாபப்பட வேண்டுமென உபதேசித்தார். ஆனால் நீங்கள் அவர் கூறியதைச் செவி கொடுத்துக் கேட்கவில்லை. யூதர்கள், தங்களை ரக்ஷிக்கத் திருவவதாரஞ் செய்த கிறிஸ்து நாதரை மறுத்துவிட்டு, மறுத்தநாள் முதற்கொண்டு தங்க இடமில்லாது, நாடோடிகளாகத் திரிந்துகொண்டு, எல்லோருடைய அதி

காரத்துக்கும உட்பட்டு நிற்கிருர்கள். அவர்களைப் போலவே நீங்களும் புத்த பகவானை அவமதித்துவிட்டு உங்களை ஆளவந்தவர்களுக்கு அடிமைகளாக இருக்கிறீர்கள்.

இவ்வித அடிமைத்தனத்திலிருந்து நீங்குவதற்கு வேண்டிய சாதனங்கள் என்ன? நமது நாட்டு மக்களுக்குத் தேவைப்படுவது இரும்புத்தசைகளும் உருக்கு நரம்புகளும், எதற்கும் அஞ்சாத மனோ வலிபும், இயற்கையின் (பிரகிருதி) திரையினூடே புதைந்து அங்கிருக்கும் அந்தரங்க இரகசியங்களை அறியும் ஆற்றலும், தனது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக ஆழமான சமுத்திரத்தில் குதிக்கவேண்டுமானாலும் குதித்து அதனால்வரும் மரணத்தையும் துரும்பெனக் கருதும் ஆத்ம தீரமும் வேண்டும். இவையெல்லாவற்றையுந் தருவது ஆத்ம ஞானந்தான். இவ் வார்த்தைகள் காதிற்பட்டவுடன், சடையும், தண்டமும், கமண்டலமும், மலைக் குகையும் வேண்டுமென்று நான் சொல்வதாகக் கருத வேண்டாம். அப்படியானால் நான் சொல்வதின் பொருளென்ன? இவ்வுலக வாழ்க்கையிலுள்ள பந்தங்களிலிருந்து விடுதலையளிக்கும் ஆத்ம ஞானமானது, சாதாரண வாழ்வுக்கு வேண்டிய சிறப்பைத் தராதா? சந்தேகமின்றி அது கொடுக்கக்கூடும். முக்தி, சாந்தி, துறவு இவைகளெல்லாம் எவ்லாவற்றிற்கும் மேலான இலட்சியங்கள். ஆனால் "இந்தத் தர்மத்தின் வெகு சிறிய ஞானங்கூட பிறப்பு, இறப்பு என்னும் பெரும் பயத்திலிருந்து ஒருவனைக் காப்பாற்றுகின்றது. இந்தியாவில் பிறந்த எல்லா மதங்களும் இப்பொழுது கூறப்போதும் விஷயத்தில் ஒரே அபிப்பிராயங் கொண்டவைகளாயிருக்கின்றன, அதாவது இந்த ஜீவாத்மனில் அளவிடற்கரிய சக்தி நிறைந்திருக்கின்றது; எறும்பு முதல் மனிதன்வரையில் ஊடுருவி நிற்கும் ஆத்ம ஸ்வரூபம் ஒன்றே; வித்தியாசமெல்லாம் வெளித்தோற்றத்திலேயே. அந்தச் சக்தி தகுந்த சமயமும், காலமும் கிடைத்ததும் வெளியாகின்றது. வெளியானபோதிலும் ஆகாத போதிலும், இச்சக்தியே தேவாதி தேவன் முதல் ஓர் அற்ப புல்வரையில் தோன்றியிருக்கின்றது. நாம் இத்தகைய ஞானத்தைப் பெற்று, தினமும் வீடு வீடாகச் சென்று இச் செய்தியைப் பறைசாற்ற வேண்டும்.

இந்திய நாடு புண்ணிய பூமி; தர்மக் குருக்ஷேத்திரம்; அதன் உயிர் நிலையம் ஆத்ம ஞானம். ஆகையால் அதன் முன்னேற்றம் அதனுடைய ஆத்மஞான முன்னேற்றத்தையே பொறுத்திருக்கின்றது. உயிருக்கு உறுதி பயக்கும் உதிர ஊற்றானது சுத்தமாயும், தெளிவாயுமிருக்கும் பொழுது, உடம்பில் ஒருவித நோய்க் கிருமியும் அணுகாது; நமது உதிர ஊற்று ஆத்ம ஞானம்; அது சுத்தமாயும், தெளிவாயுமிருந்தால் எல்லாஞ் சரிப்படும்; தேசிய, சமுதாய, பொருளாதாரக் குறைபாடு மட்டுமின்றி, நாட்டிலுள்ள வறுமையும், அது செவ்வனே யிருந்தால், நீங்கிப் போகும். ஆதலால் வேதக் கொடியை இந்நாட்டில் உயர்த்த வேண்டும்; இந்நாட்டு விமோசனம் அதில் மட்டுமே தங்கியிருக்கின்றது.

சமூக சேவை செய்வதற்கும், வேதாந்தக் கொள்கைகளை அடிப்

படையாகக் கொண்ட முறைகளைக் கைக்கொள்ள வேண்டும். ஏழைகள், அறிவிலிகள், தாழ்த்தப்பட்டோர் அனைவரையும் தெய்வ சொரூபங்களாகக் கருதிச் சேவை செய்தல் வேண்டும். கடவுளே உங்கள் கண் முன் பல வடிவங்களாகத் தோன்றுகின்றனர்; அவருடைய பிராணிகளை நேசிப்பவன் அவரையே வழி படுகின்றான். கடவுளைத் தேடி நீங்கள் எங்கே போக வேண்டும்? வறிஞர், பலவீனர், கஷ்டப்படுவோர் என்பவரெல்லாரும் தெய்வங்களல்லவா? அவர்களை ஏன் முதலில் வழிபடக் கூடாது? கங்கைக் கரையில் கிணறு வெட்டப் போவதுண்டா? இவர்களே உங்கள் தெய்வமாயிருக்கட்டும். அவர்களைப் பற்றிச் சிந்தியுங்கள்; வேலை செய்யுங்கள்; அவர்களுக்காகச் சதா பிரார்த்தனை செய்யுங்கள். அப்பொழுது உங்களுக்கு ஆண்டவன் வழி காட்டுவார். ஏழைகளின் துயர் கண்டு எவன் மனமுருகுகின்றானோ அவனே மஹாத்மா. அப்படியில்லையேல் அவன் துராத்மா. பாவத்திலெல்லாங் கொடிய பாவம் சாதாரண ஜனங்களைப் புறக்கணித்ததேயாம்; அதே நமது ஈனதசைக்குக் காரணம். ஜனங்களுக்கெல்லாம் உணவும், கல்வியும் ஊட்டி நல்வழிப் படுத்தினாலன்றி, ராஜரீகத்துறையிலுள்ள முயற்சியெல்லாம் நிஷ்பலனாகும். இந்தியாவைப் புனருத்தாரணஞ் செய்ய வேண்டுமாயின் நாம் ஜனங்களுக்காகப்பாடு பட்டு உழைக்க வேண்டும். தியாகமுஞ் சேவையுமே இந்தியாவின் தேசிய இலட்சியங்கள். அவற்றை ஸ்திரப்படுத்தினால் எல்லா நலன்களும் நம்மை வந்தெய்தும்.

வாழ்வென்பது வளர்தல்—அதாவது விரிதல்—அதாவது அன்பு. ஆகவே அன்பெல்லாம் வாழ்வு; வாழ்வதற்கு அதுதான் வழி. சுய நலங் கருதுதல் எல்லாம் இறப்புக்குச் சமானம். எங்கும் இது உண்மை நீங்கள் பார்க்கும் மானிட மிருகங்களில் நூற்றில் தொண்ணூறு பங்கு இறந்தவர்களே. ஏனெனில் மற்றவர்களை நேசிக்கிறவனைத் தவிர வேறெவரும் வாழ்வதில்லை. என் குழந்தைகளே! மற்றவர்களுக்காக உணர்ச்சி கொள்ளுங்கள்! ஏழைகளுக்கும், அறிவிலிகளுக்கும், கீழே விழுந்து நசுக்கப்படுபவர்களுக்கும் அநுதாபப்படுங்கள். இருதயம் நின்று, மூளை கலங்கி, உங்களுக்குப் பயித்தியம் பிடித்து விடும் என்று நினைக்கும் வரையும் அநுதாபப்படுங்கள். பிறகு எம்பெருமான் பாதாரவிந்தங்களில் உங்கள் ஆத்மாக்களைச் சமர்ப்பியுங்கள்; அப்பொழுது பலமும், உதவியும், அடக்க முடியாத சக்தியும் உங்களுக்கு வரும். சலிப்பின்றி உழைக்க வேண்டுமென்பதே சென்ற பத்து வருடங்களாக எனது மேற்கோளாக இருந்து வருகின்றது. வேலை செய் என்றே இன்னும் நான் சொல்லுகிறேன். எல்லாம் அந்தகாரமாயிருந்த பொழுதும் கஷ்டப்பட்டு உழை என்றே நான் சொல்லி வந்தேன். வெளிச்சம் உதயமாகும் பொழுதும் உழை என்றே இன்னமும் சொல்லுகிறேன். என் குழந்தைகாள்! பயப்படாதேயுங்கள்! அளவற்ற நக்ஷத்திரங்கள் நிறைந்த ஆகாயம் நம்மை நசுக்கிவிடுமோ வென்று பயப்படும் மனோபாவனையோடு உயரப் பார்க்காதேயுங்கள் சற்று காத்திருங்கள். கொஞ்ச நேரத்தில் அவை முழுதும் உங்கள் கால்களின் கீழிருக்கும்.

சற்று நில்லுங்கள். பணமாவது, பெயராவது ஒன்றுஞ் செய்வதில்லை; கீர்த்தி, கல்வி இவைகளும் ஒன்றுஞ் செய்வதில்லை; அன்பே எல்லாஞ் செய்கின்றது. ஞானமே, கஷ்டமென்று சொல்லப்படும் கருங்கற் சுவர்களையும் பிளக்கச் செய்கின்றது.

தேசம் முன்னேற வேண்டுமாயின் செல்வர், கற்றோர், அந்தஸ்துள்ளவர் அனைவரும் தம்மாலியன்றவரை மக்களுக்குத் தொண்டாற்ற முன்வர வேண்டும். உணவும், உடையும், கல்வியும், ஏழைகளின் வீடுவாசல்களுக்குக் கொண்டு கொடுக்கப்பட வேண்டும். அதன் பின்னரே ஆத்மஞானம் போதித்தல் வேண்டும். இங்கே இந்த உலகத்தில் எனக்கு அன்னங் கொடுக்காத கடவுள், அழியாச் சுகம் சுவர்க்கத்தில் கொடுப்பார் என்று நான் நம்பவில்லை. இந்தியா முன்னேற்றமடைய ஏழைகளுக்கு அன்னமிடப்பட வேண்டும்; கல்வி பரவ வேண்டும்; வைதீகர்களின் திருட்டுத்தனம் நீங்கவேண்டும். வைதீகர், கள்ளத்தனமில்லாவிட்டால் ஜன சமூகத்தில் கொடுங்கோலாட்சி இல்லை. நாம் வேண்டுவதென்ன? இன்னம் கொஞ்சம் சோறு; எல்லாருக்கும் இன்னம் கொஞ்சம் வேலை செய்யத் தகுந்த சமயம். இக் குறைகளை நிவர்த்தி செய்த பின்னர், ஒவ்வொரு வீட்டிற்கும் உயர்ந்த எண்ணங்கள் வந்து சேரும் வழிகளைத்தேடி, பிறகு ஸ்திரீ புருஷர்களும் தங்கள் வாழ்க்கையின் கதி என்னவென்று தீர்மானித்துக்கொள்ள விட்டுவிட வேண்டும். வாழ்க்கையில் முக்கியமான விஷயங்களைப்பற்றி நம்முன்னோர்களும், மற்றத் தேசத்தவர்களும் என்ன எண்ணியிருந்தார்களென்று ஜனங்கள் அறிய வேண்டும். மற்றவர்கள் என்ன எண்ணியிருக்கிறார்களென்று அவர்கள் அறிந்து, பிறகு நிச்சயிக்க வேண்டும். ரசாயன சாஸ்திரத்தில் செய்வதைப் போல, சரக்குகளை ஒன்றாய் வைத்து விட வேண்டும்; பிறகு அவை இயற்கையின்படியே ஒன்று சேரும்.

ஆத்ம ஞானத்துடன் நல்ல கல்வியும் பரவுதல் வேண்டும். கல்வியும், நாகரிக அறிவும் பிரபுக்களிடமிருந்து சாமானிய ஜனங்களுக்குக் கொஞ்சங் கொஞ்சமாகப் பரவ ஆரம்பித்த நாட்கொண்டு, மேற்றிசைத் தேசங்களின் தற்கால நாகரீகத்துக்கும், இந்தியா, ஈஜிப்து, ரோம், முதலிய தேசங்களின் பழையநாகரீகத்துக்கும் வேறுபாடு ஏற்பட்டது பொதுஜனங்களிடம் கல்வியும் அறிவும் எவ்வளவு அதிகமாகப் பரவுகின்றதோ, அவ்வளவு ஒரு ஜாதி முன்னேற்றமடைகிறது என்பதை நான் என் கண் முன் பார்க்கிறேன். ஐரோப்பாவிலுள்ள பல நகரங்களிற் பிரயாணஞ் செய்து, அங்கிருக்கும் மிகவும் எளிய ஜனங்களின் சௌகரியங்களையும், கல்வியையுங் கவனித்தபோது, நம் எளியவர்களின் நிலைமை என் மனதிற்றோன்றும்; அப்பொழுது நான் கண்ணீர் விடுவதுண்டு, எதனால் இந்த வித்தியாசம்? என்று நான் கேட்ட கேள்விக்கு "கல்வியாலே" என்று பதில் கிடைத்தது. கல்வியால் தன்னம்பிக்கையும், அந்தத் தன்னம்பிக்கையால், உள்ளே இருக்கும் பிரம்மம் அவர்களிடம் மேற் சென்று கொண்டிருக்கின்றது. ஆனால் நம்மவர்களிடமிருக்கும் பிரம்மமோ கொஞ்சங் கொஞ்சமாகத் துயில்கின்றது.

நியூயார்க்கில் நானிருந்தபொழுது—அவமதிக்கப்பட்டு, கண்வாடி, மெய் சோர்ந்து, சொத்தென்பது கொஞ்சமேனுமில்லாமல், காசின்றி களிமண் மூளையுடன், கையில் ஒரு கழியும், அக் கழியின் மூலையில் கந்தை வஸ்திரங்களின் மூட்டையொன்றையும் எடுத்துக்கொண்டு அடி வைக்கப் பயந்து; பயந்த பார்வையுடன் வரும் அயர்லாந்து தேசத்திய குடியேற்ற ஜனங்களை நான் பார்ப்பதுண்டு. ஆறு மாதத்தில் முற்றிலும் வேறான காட்சி நமக்குத் தோன்றும். அங்கு வந்த அயர்லாந்து தேச ஜனங்களில் ஒவ்வொருவனும் நிமிர்ந்து நடக்கிறான்; அவன் உடை மாறியிருக்கின்றது. அவன் பார்வையிலும், நடையிலும் பயக்குறியேயில்லை. காரணமென்ன? தன்தேசத்தில் அவமதிப்பே அவனைச் சுற்றியிருந்தது என்று நம் வேதாந்தம் கூறுகின்றது. பிரகிருதி முழுதும் ஒரே குரலில் "அடே, உனக்கு மேற் செல்வதற்கு இடமேயில்லை; நீ ஓர் அடிமையாய் பிறந்தாய்; அங்நிலையில் தானிருப்பாய்" என்று கூறிற்று. பிறந்ததுமுதல் இம்மாதிரி தனக்குச் சொல்லப்படவே, அயர்லாந்து தேசத்தான் அதை நம்பி, தான் மிகவுந் தாழ்ந்தவன் என்று பூரண நம்பிக்கை கொண்டான்; அவனுக்குள்ளிருக்கும் பிரம்மமும் சுருங்கி மறைந்துவிட்டது. ஆனால் அவன் அமெரிக்காவில் வந்திறங்கினானோ இல்லையோ உடனே பிரகிருதி "அப்பா! எங்களைப் போலவே நீயும் ஒரு மனிதன்; உலகத்திலுள்ள எல்லாவற்றையுஞ் செய்தது மனிதன்தான்; உன்னைப்போலவும் என்னைப்போலவுமுள்ள மனிதனால் எல்லாவற்றையுஞ் செய்ய முடியும்; தைரியங் கொள்" என்ற வார்த்தைகள் எல்லாப் பக்கங்களிலுமிருந்து சொல்லப்பட்டன. அவன் தலைநிமிர்ந்து பார்க்க எல்லாம் தான் கேட்டபடியே இருக்கிறதென்று அறிந்தான்; அவனுள்ளிருக்கும் பிரம்மம் விழித்துக்கொண்டது. பிரகிருதியும் "எழுந்திரு! விழித்துக்கொள்" என்று சொல்வதுபோலிருந்தது.

இதைப்போலவே நம் சிறுவர்கள் அடையும் கல்வி சூனியமானது. பள்ளிக்கூடச் சிறுவன் ஒன்றுங் கற்பதில்லை; அவனுடைய இயல்பாயுள்ள ஆற்றல்கள் எல்லாம் நசுக்கப்படுகின்றன. இதற்குப் பலன் சிரத்தையில்லாமையே. வேதத்திற்கும் வேதாந்தத்திற்கும் நடுப் பொருளாயிருக்கும் சிரத்தை—நாசிகேதாஸ் எமனை நோக்கிக் கேள்வி கேட்கத் தைரியங் கொடுத்த சிரத்தை—இவ்வுலக முழுவதின் சலனத்திற்கும் காரணமாயிருக்கும் சிரத்தை—இந்தச் சிரத்தையின் அழிவுதான் இக் காலக் கல்வியின் பயன். "அக்ஞஸ்ச அசிரத்த தானஸ்ச ஸம்சயாத்மா விநச்யதி." அறிவிலியும், சிரத்தையில்லாத மனிதனும், சந்தேகப்படும் ஆத்மனும் அழிவையடையவே செல்கின்றன." இதனாற்றான நாம் அழிவிற்கு இவ்வளவு நெருங்கியிருக்கிறோம். இதற்குச் சிகிச்சை யென்னவெனில் கல்விதான்."

கடைசியாக தம் நாட்டினர் கடமையென்னவென்பதைச் சுவாமி விவேகானந்தர் கூறுவது குறிப்பிடத் தகுந்தது. "வாயை மூடிக்கொண்டு உங்கள் இருதயங்களைத் திறந்து விடுங்கள். உங்கள் நாட்டு விமோசனமும், உலக விமோசனமும் உங்கள் ஒவ்வொருவ

ருடைய பொறுப்பெனக்கருதி அதை ஏற்படுத்துவதற்கு உழையுங்கள்" இவ்வார்த்தைகள் சுவாமிகளின் தேசாபிமானத்தின் பரந்த நோக்கை விளக்கிக் காட்டுகின்றன. தனது தாய் நாடு உலகம் முழுதுக்கும் அளிக்க வேண்டிய ஆத்மஞானச் செல்வத்துக்குப் பாதுகாவலனு யிருந்தபடியால், அதைத் தாயினுஞ் சாலப்பரிந்து அன்பு பாராட்டினுர். உலகிலுள்ள எல்லா ஏழைகள், பலவீனர், தாழ்ந்தோர் என்பவர்களுடைய துன்பங்களை வேதாந்தக் கொள்கைகளாகிய, மனிதனின் தெய்வத் தன்மை, சராசரங்களின் ஒருமைப்பாடு என்பனவற்றுல் மாற்றலா மென்பது அவருடைய துணிபு. இதன் மூலம் ஜன சமூகத்தின் பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் மக்கள் சுதந்திரம், சமத்வம், சகோதரத்வம் என்பவற்றைப் பெறுவர். வேதாந்தக் கொள்கைகளே பல தேசத்தவர்களிடையே சமரசத்தை உண்டாக்கி அதன் மூலம் உலக சகோதரத்துவத்தை ஏற்படுத்தும். ஆனுல் இந்தக் கொள்கைகள் இந்தியாவில் பிரத்தியக்ஷமான பலனைக் கொடுத்தால்தான் மேனுட்டார் அதைப்பின் பற்றி நடப்பார்கள். ஆதலினுலே தான், இந்தியா வேதாந்தக்கொள்கையால் விமோசனமடைந்தால் உலகமே உய்யும் எனச் சுவாமிகள் கூறினுர். இது காரணம் பற்றியே தம் நாட்டினரைத் தட்டி யெழுப்பி புராதன கொள்கைகளுக்குப் புத்துயிரளிக்கும்படி அவர்களை ஊக்கப்படுத்தினுர். புதிய இந்து மதமும், அதன் மூலம் புத்துயிர் பெற்ற புதிய பாரத நாடுமே உலக மக்களின் துயரத்தைத் தீர்க்கக்கூடிய சாதனங்களாகும். இந்தப் புதிய ஏற்பாட்டைச் செய்து முடிப்பதற்காகவே இந்தியா பல்லாண்டுகளாக சகல நிர்ப்பந்தங்களையுஞ் சகித்து இன்னும் அழியாதிருக்கின்றது.

இந்து மதம் புத்துயிர் பெற்றதின் பயனுக இந்துக்களின் கலைகளும் மறுமலர்ச்சியடைந்தன. சுவாமி விவேகானந்தர் சமரச தர்மமாகிய வேதாந்தக் கொள்கைகளை மேனுட்டில் போதித்து அதற்கு நன்மதிப்பை ஏற்படுத்தினுர். இந்தக்களும் தங்கள் மதத்தைப் பற்றி பெருமை யடைந்தனர். மேனுட்டுப் பேரறிஞரும் வேத, உபநிடத ஆராய்ச்சியில் சிரத்தை காட்ட ஆரம்பித்தார்கள். அந்நாட்டுச் சர்வ கலாசாலைகளும் இந்துக்களின் வாழ்க்கையின் நோக்கம் என்னும் விஷயம் பற்றி ஆராய்ச்சி செய்யத் தொடங்கின.

இந்திய தேசீய மகா சபை 19ம் நூற்றுண்டில் (1885) தொடங்கிய போதும், அதற்கு உற்சாகம் பிறந்தது 20ம் நூற்றுண்டுத் தொடக்கத்திலேயாம். அப்பொழுதுதான் இந்தியா முழுதும் சமுதாய, ராஜீக, பொருளாதாரத் துறைகளில் உழைப்பதற்குப பல சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இராமகிருஷ்ண சங்கம் மட்டுமின்றி, தேசபந்து சங்கம், பாரத சேவா சங்கம், சேவா சமிதி, இந்து வாலிப சங்கம் என்னும் பல ஸ்தாபனங்கள் மக்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட முன் வந்தன. கவீந்திரனுகிய ரவீந்திரநாத் தாகூர், பண்டித மதன் மோஹன மாளவியா என்னும் இரு தேச பக்தர்களும், மேனுட்டுக் கலைகளும் கீழ் நாட்டுக் கலைகளும் ஒருங்கு சேர்த்

துப் போதிக்கப்படும் கல்வி ஸ்தாபனங்களை நிறுவினர், இந்தியரின் தேசாபிமானமும், குறுகிய நோக்கத்தை ஒழித்து, அகண்ட சகோதரத்துவத்தை இலட்சியமாகக் கொண்டது. மஹாத்மா காந்தியடிகளின் அஹிம்ஸா தர்மக் கொள்கையும், ரவீந்திரநாத் தாகூரின் அகண்ட சமத்வக் கொள்கையும், ஸ்ரீராமகிருஷ்ண விவேகாநந்தருடைய சர்வமத சமரசக் கொள்கையும் இந்தியரின் தேசாபிமானத்தின் உயர்ந்த இலட்சியத்தையும் அதன் சிறப்பையும் விளக்குகின்றன.

கீழ்த்திசைக்கலைப் பாடசாலை இந்தக் காலத்திலேதான் ஏற்பட்டது. இந்தியக் கலைகளின் புணருத்தாரணத்திற்குக் காரணமாயிருந்தவர்களுள் திரு. ஹவல், அவனீந்திரநாத் தாகூர், சகோதரி நிவேதிதை அம்மாள் என்பவர்கள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர். மேனாட்டுச் சித்திரங்களைப் பின்பற்றுவதை யொழித்து, இந்தியா தனது பழைய சித்திர முறைகளுடன், மேனாட்டுச் சித்திரக் கலையின் சிறந்த அம்சங்களையுஞ் சேர்த்து, ஒரு புதிய சித்திரக் கலையை ஏற்படுத்தியது.

விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சித் துறையிலும் இந்தியா முன்னேற்றமடைந்து வருகின்றது. உலகப் பிரசித்திபெற்ற ஜெகதீஸ் சந்திரவசு, பி. சி. ரே, பேராசிரியர் மேகநாத் ஸாஹா, பேராசிரியர் சி. வி. ராமன் என்பவர்கள் பல மேல்நாட்டு விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சி நிலையங்களின் நன்மதிப்பைப் பெற்றிருக்கின்றனர். தாவரங்களின் உணருஞ் சக்தியைப்பற்றி மேனாட்டில் ஜெகதீஸ் சந்திரவசு சொற்பொழிவாற்றி, அதைப் பிரத்தியக்ஷமாகக் காட்டிய போது, தனது கொள்கையானது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் வேத ரிஷிகளால் கண்டுபிடிக்கப்பட்டதென்றும், அதைத் தான் நவீன கருவிகளின்மூலம் அவர்களுக்குப் பிரத்தியக்ஷமாகக் காண்பித்தாரென்றும் கூறியிருக்கின்றார். திரு. பி. சி. ரே என்னும் பெரியார் இயற்றிய "இந்து ரசாயன சாத்திர வரலாறு" என்னும் நூலும், திரு. பிரஜேந்திரநாத் சீல் என்பவர் இயற்றிய 'இந்துக்களின் ஆதார சாத்திரங்கள்" (Positive Sciences) என்னும் நூலும் இத்துறையில் பண்டைக்கால இந்திய மக்களின் எண்ணங்களை வெளிப்படுத்தியிருக்கின்றன.

சமுதாய ஒப்பந்தம்

ரூஸ்ஸோ எழுதியது

புத்தக வடிவமாக வெளிவரும்

—எஸ். குஞ்சிதபாதம் B. A. L. T.

நாட்டிற்குப் புகழ் தந்த நாவலன்

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து இறைநிலை எய்தும் வழியைத் துலக்கும் நூல்கள் எம்மொழியில் இருப்பினும், அவை எல்லா மக்களுக்கும் உரியனவேயாகும். சீரிய குறிக்கோள், உயரிய வாழ்க்கை நெறி, அழகிய கலை, இனிமை தரும் இசை இவை எல்லோருக்கும் வேண்டிய பொருள்கள். ஆனால் இக்காலத்தில் சமயச் சண்டை, சாதிப்பூசல், வகுப்புவாதம் முதலிய பேய்கள் சமுதாயத்தினிடையே புகுந்து போரும் சாவும் விளைவிக்கின்றன. எத்துறையில் இருப்பவனும் அத்துறைக்கேற்பக் கடனாற்றி நோம்படுதல் முறை. அவரவர் கடனை அவரவர் அழகு பெற ஆற்றல் வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆகும். ஆகவே மக்களின் கடமைகளை எடுத்துரைத்து அவர்களை நன்னெறியிற் புகுத்தும் நூல்கள் பொன்னே போல் போற்றற்குரியன. அத்தகைய அரிய நூல்களுள் நம் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் இயற்றி அருளிய குறள் தலைசிறந்து விளங்குகின்றது

"வள்ளுவரின் குறள் வெண்பா,
அகிலத்தோர்
உள்ளிருள் நீக்கு மொளி"

என்றபடி குறள் உலகெல்லாம் ஓதியுணர்தற்குரிய பொதுமறை. வேதங்கள் ஹிந்துக்களால் மட்டும் மறையெனப் போற்றப் படுகின்றன. குரானை முகம்மதியர்களும், விவிலியத்தைக் கிருஸ்தவர்களும் தெய்வீகம் ததும்பும் நூல்களெனப் புகழ்ந்து பேசுகின்றனர். ஆனால் எம்மதத்தினரும் விரும்பி ஏற்றுத் தம்மதத்தது எனத் தருக்கிக் கூறும் தகுதியுடையது திருக்குறள் ஒன்றே. இது பற்றியே போலும் வள்ளுவரையும், அவர் அருளிய குறளையும் தமிழ் மக்கள் 'திரு' என அடைகொடுத்து ஓதியது. பேராசிரியர் கருத்துப்படி 'திரு' என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை; பிறமொழியாளர்கள் திருக்குறளைப் போற்றியதுடன் அமையாது, தத்தம் மொழிகளில் பெயர்த்தெழுதிய , இவ்வுரையின் பொருத்தத்தையும். குறளுக்கும் வள்ளுவர்க்கும் இவ்வடையைக் கொடுத்த தமிழ் மக்களின் தெள்ளிய அறிவையும் புலப்படுத்துகின்றது.

இப்பொதுமறையை உலகத்துக்கு உவந்தளித்த உத்தமர் திருவள்ளுவர். கன்னபரம்பரைச் செய்திகள் அப் பெரியாரை வள்ளுவர் குலத்தில் உதித்தவரென்றும், ஆதிக்கும் பகவனுக்கும் பிறந்தவரென்றும் அதிகமான், உப்பை, ஔவை, கபிலர், முதலியோருக்கு உடன் தோன்றல் என்றும் பலதிறப்படப் பேசும். ஆராய்ச்சியாளர்கள், 'வள்ளுவர்' என்பது அரசாங்கத்தார் அளித்த பட்டப் பெயரென்றும், இவர் இயற் பெயர் கெடுமாறன் என்றும், இவர் பாண்டியன் பெரும் பெயர் வழுதியிடம் உள்

நாட்டு மந்திரியாய் உழைத்தவரென்றும் கூறும் கூற்றுகள் அறிஞரால் ஒப்புக்கொள்ளற்பாலன.

இனி இவர் கடைச்சங்க காலத்தில் இருந்தவர் என்றும், இவருக்குச் சங்கப் பலகை தானே வளர்ந்து இடந் தந்தது என்றும், பழங்கதைகள் கூறுகின்றன. கடைச்சங்கம் மதுரையில் கி. பி. முதலிரண்டாம் நூற்றாண்டுகளில் இருந்தது என ஆராய்ச்சியாளர்கள் எல்லோரும் ஒப்புக் கொள்கின்றனர். கடைச்சங்க நூல்களில் குறளின் கருத்துக்கள் பல எடுத்தாளப்படுகின்றன. கி. பி இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற பெரும் காப்பியங்களில் சில குறள்கள் அப்படியே எடுத்தெழுதப் பட்டிருக்கின்றன. ஆகவே குறள் கடைச்சங்க நூல்களில் முந்தியது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இடைச்சங்க இலக்கணமாகிய தொல் காப்பியத்தின்படி தமிழ் மொழிகள் சகரத்தில் ஆரம்பிக்கக் கூடாது. கடைச் சங்கத்துத் தொகை நூல்களில் சகரத்தில் ஆரம்பிக்கும் பல பதங்களைப் பார்க்கிறோம். ஆனால், குறளிலோ 'சமன்', 'சவம்' என எங்கோ ஒன்றிரண்டு இடங்களில் தான் சகரம் மொழிக்கு முதலாக வருகிறது. அப்படி வந்த பதங்களும் வடமொழிப் பதங்கள். ஆசிரியர் தொல் காப்பியரும் தமிழ் ஒழிந்த பிற மொழிப் பதங்கள் தமிழில் வந்து வழங்கும் போது சகரத்தில் ஆரம்பிக்கலாம் எனக் கூறுகிறார். அவ்வாசிரியரின் விதி குறளில் போற்றப்படுகின்றது. ஆனால் இந்த விதி சங்கத் தொகை நூல்கள் காலத்தில் தகர்த்தெறியப்பட்டது. ஆகவே குறள் தொகை நூல்களுக்கெல்லாம் மிகவும் முந்தியதாயிருத்தல் வேண்டுமென ஊகிக்க வேண்டியிருக்கிறது. பேராசிரியர் பாரதியார் கி. மு. மூன்று நூற்றாண்டு என்பர்.

இவரது சமயம் இன்றும் வாதத்திற்கு இடமாய் இருக்கிறது ஒவ்வொரு சமயத்தவரும் அவரைத் தத்தம் சமயத்தைச் சேர்ந்தவர் என்றே துணிகின்றனர். மேனாட்டுப் பாதிரிமார்கள் அவர், தோமஸ் என்ற முனிவரிடத்துப் 'பெற்ற உபதேசங்களையே திருக்குறளாக எழுதிப் போந்தார் என்றும், ஆகவே குறள் விவிலியத்தின் வழிநூல் என்றுங் கூறுகின்றனர். ஆனால் இவர் கடவுளைக் குறிக்கும் போதெல்லாம், ஒரு பெயருங் கூறாமல், "எண் குணத்தான்", "வாலறிவன்", "அறவாழி அந்தணன்" என்று பரம்பொருளின் குண விசேஷங்களைக் கொண்டே அவனைக் குறிப்பிடுவதாலும், அக் குணங்கள் எல்லாச் சமயத்துத் தெய்வங்களுக்கும் 'பொதுவாகலானும், வள்ளுவர் சமயங்களின் பேய்ப்பிடிப்பினின்றும் விடுபட்டு அவற்றைக் கடந்து நின்ற 'ஞானி' என்றே கூறல் வேண்டும்

திருக்குறளின் இலக்கியச் சுவையையும், பொருட் செறிவையும் எடுத்துக் கூறுவதற்கு இச்சிறு கட்டுரை இடந் தராது. "மக்களின் உள்ளக் கிடக்கையின் ஒப்புயர்வற்ற, தூய்மை திகழும் விளக்கமே குறள்" எனப் புகழும் பிரஞ்சு அறிஞராம் ஏரியலாரின் மொழிகளை குறளின் மேன்மையை

—வ. பார்த்தசாரதி

இரக்கங்கொள்

மகனே! வாழ்க்கையிலே வெற்றியடைய வேண்டுமென்று விரும்புகிறாயா? அப்படியானால் உனக்கு ஒரு ரகசியம் சொல்லித் தரட்டுமா? அதாவது, எல்லோரிடத்திலும் அன்பு செலுத்து. மற்றவர்களுடைய துயரத்தைப் பார்த்து நீ சும்மாயிராதே. உன் மனத்தில் இரக்கம் உண்டாகட்டும். அப்பொழுதுதான் உன் விஷயத்தில் எல்லோரும் இரக்கங் காட்டுவர். உன் சுகதுக்கங்களில் பங்கெடுத்துக் கொள்வர். நீ, பிறருக்கு அநுதாபங் காட்டுவாயானால், பிறரிடத்தில் அன்பு செலுத்துவாயானால், உன்னிடத்திலுள்ள மன அழுக்குகளைக் களைந்தவனாவாய். உன் மீது யாராவது துவேஷங் காட்டுவார்களானால், அதனையும் நீ களைந்தவனாவாய். உன்னிடத்திலே உண்மையான அன்பு குடி கொண்டிருக்குமானால், அது, எப்படிப்பட்ட கடின சித்தத்தையும் கரைத்து விடும். அதனால் உன்னுடைய மனித குணத்தையும், பிறருடைய மனித குணத்தையும் வளர்த்தவனாவாய். அஃது, ஒரு பெரிய விஷயமல்லவா?

யேசு நாதருடைய பன்னிரண்டு முக்கிய சிஷ்யர்களில் ஜான் என்ற ஒருவர் இருந்தார். அவர் வயோதிகராகி விட்டார். அதிகமாக நடக்கவோ பேசவோகூட அவரால் முடியவில்லை. ஒரு சமயம் குழந்தைகளடங்கிய ஒரு கூட்டத்திற்கு, ஒரு சில நண்பர்கள் அவரைத் தூக்கிக்கொண்டு போனார்கள். அப்பொழுது, அவர் குழந்தைகளைப் பார்த்து, என்ன உபதேசம் செய்தார் தெரியுமா? "குழந்தைகளே! ஒருவரையொருவர் நேசியுங்கள்" என்றார். மீண்டும் இதனை ஒரு தரம் வற்புறுத்திச் சொன்னார். "வேறு ஒன்றும் எங்களுக்குச் சொல்லக்கூடியது இல்லையா?" என்று குழந்தைகள் கேட்டார்கள். "வேறு ஒன்றுமில்லை. இதைத்தான் நான் திருப்பித் திருப்பிச் சொல்கிறேன். ஏனென்றால், அன்பு மட்டும் உங்களுக்கிருக்குமானால் வேறு ஒன்றும் உங்களுக்குத் தேவையில்லை" என்றார். இதில் எவ்வளவு ஆழ்ந்த கருத்து இருக்கிறதென்பதை அறிந்து கொண்டாயா? இதில் ஒரு ரகசிய~~த்தை தெரிந்து கொள்~~

சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றன. "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ்கொண்ட தமிழ் நாடு" என்னும் கவி சுப்பிரமணிய பாரதியாரின் வாக்கு, பிற நாட்டாரால் போற்றக்கூடிய தமிழ் நாட்டின் பெருமையையும், பிற மொழியாளர் உள்ளங்களில் நாட்டித் தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் பெருமையைத் தருவது குறளே என்பதையும் சுட்டிக் காட்டுகின்றது.

டிருக்கிறாயா? அதாவது, அன்பானது, அன்பு செலுத்துபவருக்கு மட்டும் நன்மை தருவதில்லை. அன்பு செலுத்தப்படுபவரும் நன்மையடைகின்றார். இதனால்தான், ஜான் முனிவரும் இதனை வலியுறுத்திக் கூறினார்.

நீ செலுத்துகிற அன்பு, உடனே ஏற்றுக் கொள்ளப்படாமலிருக்கலாம். உனக்கு நன்றி செலுத்தப்படாமலிருக்கலாம். அதற்காக உன் அன்பைச் செலுத்துவதில் நீ சிறிது கூடக் குறையக்கூடாது. எந்த விதத்திலும், உன்னைவிடத் தாழ்ந்தவனாயிருக்கிற யாருக்கும் உன் அன்பைச் செலுத்துவதில் நீ பின்வாங்கக்கூடாது. அப்படி நீ அன்பைச் செலுத்த மறுப்பாயாகில், உனக்கு நீயே கெடுதல் செய்து கொண்டவனாவாய். உனக்குத் தீங்கு செய்து கொள்ளாமல், மற்றவர்களுக்கு உன்னால் தீங்கு செய்ய முடியாது.

உன்னிடம் அன்பு மட்டும் பரிபூரணமாக நிரம்பியிருக்குமானால், அது, உனக்கு எல்லாக் காரியங்களையும் சாதித்துக் கொடுக்கும். உன்னிடத்திலே பணமில்லாமலிருக்கலாம்; நீ வசிப்பதற்குப் பெரிய மாளிகை இல்லாமலிருக்கலாம். ஆனாலும், மற்றவர்களை வறுமையினின்று கரையேற்றி விடுவதற்காக உனக்குத் தேவையான பணம் அகப்படும். மற்றவர்கள் வசிப்பதற்காக உன்னால் பெரிய வீடுகள் கட்டிக் கொடுக்க முடியும்.

பிறருக்குச் சேவை செய்ய வேண்டுமானால், பணந்தான் முக்கியமாகத் தேவையென்று நீ கருதாதே. சாதாரணமாக, இந்த உலகத்தில் எதற்கெடுத்தாலும் பணம் என்கிறார்கள். பணத்துக்கு, அளவுக்குமிஞ்சின ஒரு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இது தவறு. ஆதிகாலத்தில், கிறிஸ்துவ தர்மத்தைப் பரப்பிய கிறிஸ்துநாதரின் சிஷ்யர்கள், பணத்தை வைத்துக் கொண்டு பிரசாரம் செய்யவில்லை. எளிய வாழ்க்கையை அனுஷ்டித்துக்கொண்டுதான், உயரிய போதனைகளை அவர்கள் செய்து கொண்டு வந்தார்கள். இந்தியாவிலே கூட, புத்தர் பிரானும், சங்கரர், ராமானுஜர், மத்வர் முதலியோரும் ஆடம்பர வாழ்க்கையை நடத்திக் கொண்டு ஆடம்பரப் பிரசாரம் செய்ய வில்லை. இப்பொழுது காந்தியடிகளைப் பார்க்கிறோமல்லவா? அவருக்கு வேண்டுமானால், எவ்வளவு பொருள் வேண்டுமானாலும் கிடைக்கிறது. ஆனால் தமக்கென்று ஒரு செம்புக் காசையும் அவர் வைத்துக் கொள்ளவில்லை. இதனால்தான் அவருடைய சேவைக்கு ஒரு மகத்துவமும், அவருடைய உபதேசங்களுக்கு ஒரு சக்தியும் இருக்கின்றன.

மனிதன், தன்னிஷ்டப்படி வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியும். மனோ உறுதி மட்டும் அவனுக்கு இருக்க வேண்டும். என்னைப்பற்றியும், மற்றவர்களைப் பற்றியும் நான் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறேனென்பது, என்னுடைய தன்னலமற்ற தொண்டிலே இருக்கிறது. கடவுள் நமக்குக் கொடுத்திருக்கிற சக்திகளையெல்லாம் நாம் துஷ்பிரயோகஞ் செய்யாமல், ஒழுங்கானபடி உபயோகித்துக்கொண்டு வந்தோமானால், நாம், மகான்களாகி விடுவோம், யாராலும் எதிர்க்க முடியாத ஒரு சக்தி நம்மிடத்திலே வந்து சேரும்.

இன்னொரு ரகசியமும் உனக்குச் சொல்கிறேன் கேள்.

பிறருடைய துன்பத்தைத் துடைப்பதிலேதான் நமது இன்பம் இருக்கிறது. கதா காலட்சேபங்களைக் கேட்பது, சினிமா பார்ப்பது முதலியவைகளில் நாம் அடைகிற இன்பத்தைக் காட்டிலும், மேற்சொன்ன இன்பந்தான் சிறந்தது; மனிதத் தன்மை நிரம்பியது. தவிர, மற்றவர்கள், நம்மிடத்தில் அன்பு காட்டுகிறார்களென்று நாம் அடைகிற திருப்தியிலே இருக்கிற இன்பம் வேறெதிலும் இல்லை.

இந்த உலகத்தில், யாரிடத்தில் நாம் அதிகமான அனுதாபம் காட்ட வேண்டும் தெரியுமா? அங்கஹீனர்கள் வியாதியஸ்தர்கள் முதலியோர்களிடத்திலல்ல. அவர்களிடத்திலே காட்டவேண்டிய அனுதாபம் வேறே. ஆனால், யாரொருவர் தங்களைத் தாங்களே அடக்கிக்கொள்ள முடியாதவர்களாயிருக்கிறார்களோ, யார், மற்றவர்கள் விஷயத்தில் தாங்கள் செலுத்தவேண்டிய சில கடமைகள் உண்டென்பதைத் தெரிந்துகொள்ளாமலிருக்கிறார்களோ, யார் தங்களுடைய சுகத்தையே பிரதானமாகக் கருதி வாழ்க்கை முழுவதையும் கழித்துவிடுகிறார்களோ, யார் தங்களுடைய கீழான ஆசைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் பொருட்டு நல்ல காரியத்தைச் செய்கிறார்களோ அவர்களெல்லோரும் நமது இரக்கத்துக் குரியவர்கள். சிலர், தங்களுடைய உணர்ச்சிகளுக்கு மட்டும் மதிப்புக் கொடுக்கிறார்கள்; மற்றவர்களுடைய உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுப்பதேயில்லை. இவர்கள் வெளியுலகத்திற்குப் பரம சாதுக்கள்போலிருக்கிறார்கள். ஆனால் இவர்களைப் பின்தொடர்ந்து சென்று கவனியுங்கள்; தங்கள் குடும்ப விஷயத்தில் எவ்வாறு நடந்துகொள்கிறார்களென்பது நன்கு தெரியும். இப்படிப்பட்டவர்களை நம்பாதே.

இன்னுஞ் சிலர் இருக்கிறார்கள், அவர்கள் யாரிடத்தில் அனுதாபங் காட்டவேண்டுமோ அவர்களிடத்தில் காட்டமாட்டார்கள். யாரிடத்தில் காட்டவேண்டாமோ அவர்களிடத்தில் காட்டுவார்கள். பணக்காரர்கள் நம் வீட்டுக்கு வந்தால் அவர்களுக்கு நாம் ஆசார உபசாரங்கள் செய்வோம். அவர்கள் முன்னர், பல்லிளித்துக் கை கட்டிக்கொண்டு நிற்போம். ஆனால் ஏழைகள்—அவர்கள் நெருங்கிய உறவினர்களாகக்கூட இருக்கலாம்—யாராவது நம் வீட்டிற்கு வந்தால் அவர்களை நாம் பராமுகமாகவே நடத்துகிறோம்; உதாசீனமாகவும் பேசுகிறோம். பணக்காரர்களுக்கு ஓர் அற்ப கஷ்டம் வந்துவிட்டால், அதற்காக நாம் நிரம்ப அனுதாபப்படுகிறோம். ஆனால் ஏழைகளுக்கு ஏதேனும் கஷ்டம் வந்தால் அவர்களைப் பரிகசிக்கிறோம். இவையெல்லாம் பொய் அனுதாபமல்லவா?

—"ஒரு காங்கிரஸ்வாதி"

ராஜேந்திர பிரசாத்

நாற்பத்தெட்டாவது

காங்கிரஸ்தலைவர்

"அண்ணா! நான், தங்களுக்கு முன்னால் நின்று பேசி அறியேன். தங்களை ஒரு தெய்வமாகப் போற்றுபவன் நான். தங்களைக் கஷ்டத்தில் சிக்க வைக்க வேண்டுமென்பது என்னுடைய விருப்பமில்லை. இதை நினைத்தாலே என் மனம் மிகவும் வேதனையடைகிறது. இருந்தாலும் நான் என் செய்வேன்? ஒரு புனிதமானதும், சிரேஷ்டமானதுமான கொள்கையில் என் மனம் பிரவேசித்து விட்டது. அண்ணா! தங்களிடம், ஒரே ஒரு விஷயம் மிகவும் விநய பூர்வமாகச் சமர்ப்பித்துக் கொள்ளுகிறேன்; நம்முடைய தேச மக்கள், வாயில்லாப் பூச்சிகளாயிருக்கிறார்களே அந்த 30 கோடி மக்கள், அவர்களுடைய விமோசனத்திற்காக நீங்கள் கொஞ்சம் தியாகம் செய்யுங்கள். இதைத்தான் நான் உங்களிடம் மண்டியிட்டு வேண்டுகிறேன். கோகலே ஆரம்பித்திருக்கும் சொஸைட்டியில் நான் அங்கத்தினனாவது ஒரு பெரிய தியாகமென்று சொல்ல முடியாது. அது, நல்லதாயிருந்தாலும் சரி, அல்லது கெட்டதாயிருந்தாலும் சரி என்னைப் பொறுத்த வரை எந்தவித நிலைமைகளுக்கும் என்னைத் தயார் செய்து கொள்ள அஃது மிகவும் அனுகூலமாயிருக்கும். என்னுடைய வாழ்க்கையும் மிகவும் சரளமானது. நான் எந்த ஒரு சுகத்தையும் விரும்பவில்லை. அந்தச் சங்கத்திலிருந்து என்ன கிடைக்கிறதோ அதுவே எனக்குப் போதுமானது. ஆனால், என்னைத் துறப்பது உங்களுக்கு மிகவும் கஷ்டமாகவே இருக்கும். என் விஷயமாய் நீங்கள் பெரிய பெரிய கனவுகள் கண்டிருந்தீர்கள். அந்தக் கனவுகளெல்லாம் சிறிது நேரத்தில் தவிடு பொடியாகி விடுமென்பதை நான் அறிவேன். அண்ணா! நீங்கள் கொஞ்சம் இந்த உலகத்தை ஏறெடுத்துப் பாருங்கள்! நிலையற்ற இந்த உலகத்திலே, தனம், பதவிகள், பட்டங்கள், பெருமைகள் யாவும் அழிந்தேதான் போகின்றன. ஒருவன் இத்தனை லட்சம் பொருள் தேடிவிட்டால் போதுமென்று

ஆரம்பத்தில் கருதுகிறான். அப்படியே அவன் அந்தச் செல்வத்தை சம்பாதித்து விடுவதாக வைத்துக் கொள்ளுங்கள். அதோடு அவனுடைய ஆசை பூர்த்தியடைகிறதா? இல்லவே இல்லை. அவன் சம்பாதிக்கும் சொத்து குவிந்து கொண்டே போக, அவனுடைய ஆசையும் வளர்ந்து கொண்டே போகிறது. ஆனால் சந்தோஷமிருக்கிறதே அதுதான் நமக்குள்ளேயிருந்து உற்பத்தியாவது. ஒரு பெரிய கோடீஸ்வரனைப் பார்க்கிலும் ஏழை ஒருவன் எவ்வளவோ சந்தோஷமுடையவனாக வாழ்கிறான். ஏழைகளைப் பார்த்து அநாகரிகர்கள் என்று பலர்கருதி வெறுக்கிறார்கள். அது கூடாது. இந்த உலகத்திலே இதுவரை எத்தனையோ மஹா புருஷர்கள் தோன்றி யிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் யாவரும் பரம ஏழைகளாகவே இருந்தார்கள். அந்த மஹாபுருஷர்கள் ஆரம்பத்தில் மிகவும் கஷ்டப் பட்டார்கள். அநேக துன்பங்களை அனுபவித்தார்கள். அவர்களைத் தெரிவார் யாருமில்லை. கொலையாளிகளை வீரர்களென்றும், பாவிகளை புனிதர்களென்றும் ஜனங்கள் போற்றுவது சகஜம். என்னுடைய இதயத்தை ஒரு பெரிய ஆசையானது, ஆம்—ஆனந்தமயமான ஆசையானது—இழுத்துக் கொண்டு விட்டது. "பாரத மாதாவு"க்கு நான் சேவை செய்ய வேண்டும். இதுவே என்னுடைய ஆசை. இன்று லோகத்திலேக்கு இருக்கும் கௌரவமும், புகழும் வேறு எந்த ஒரு முடிதரித்த மன்னருக்காவது ஏற்பட்டிருக்கிறதா?"

பாபு ராஜேந்திர பிரசாத், தம்முடைய 25—26 வயதுப் பருவத்தில் தமையனாருக்கு எழுதிய கடிதத்தின் சாரம் இது.

இல்லற ஞானியா யிருந்து செங்கோலோச்சிய ஜனக மகாராஜனுக்கும் சக்கரவர்த்தி அசோகனுக்கும் பிறப்பிட யமைந்த பாக்கியத்தைப் பெற்றது பீகார் மாகாணந்தான். கௌதம புத்தர் பிறந்தது பீகார் மாகாணத்திலேதான். இத்தகைய மகா புருஷர்களை ஈன்ற அந்த பீகாருக்கு ஏதோ ஒரு புனிதமான விசேஷமிருக்க வேண்டுமல்லவா? ஆம், உண்டு என்பதற்கு அடையாளமாகவே இன்று பாபு ராஜேந்திர பிரசாத் விளங்குகிறார். அவருடைய புன்முறுவல் பூத்த முகமே அதற்கு அத்தாட்சி.

பீகார் மாகாணத்தின், சாரன் ஜில்லாவைச் சேர்ந்த ஜீராதேயி கிராமத்தில் 1884ம் வருஷம் டிசம்பர் மாதம் 3ந் தேதி பாபு ராஜேந்திரர் பிறந்தார். இவர் தந்தையாரின் திருநாமம் மகாதேவசகாய். நமது ராஜேந்திரர், அவருடைய சிறு பிராயத்தில், வீட்டிலேயே ஒரு மௌல்வியிடம் உர்தும், பாரசீகமும் பயின்றார். ஒன்பது வயதில் பாடசாலையில் சேர்க்கப் பட்டார். இப்பால் 1902-ம் வருஷத்திலிருந்து, கல்கத்தா சர்வ கலாசாலையில் ஒவ்வொரு வகுப்பிலும் முதல் மாணாக்கராயிருந்து இன்டர் மீடியட் பரீட்சையை முடித்தார். அந்தக் காலத்தில் பீகார் என்று தனி மாகாணமாகப் பிரிந்திருக்கவில்லை. பீகார், வங்காளம், அசாம், பர்மா இந்த எல்லா மாகாணங்களுக்கும்

கல்கத்தா சர்வகலாசாலை ஒன்றே தான். ராஜேந்திரர், 1906ம் வருஷத்தில் பி. ஏ. கிளாஸிலும், 1907–ம் வருஷத்தில் எம். ஏ. கிளாஸிலும் தேறினார். ஒவ்வொரு வகுப்பிலும் இவர் முதல் மாணவராயிருந்து தேறியதால் இவருக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்காத வருஷமே இல்லை. 1915-ம் வருஷம் இவர் எம். எல். பரீட்சையில் தேறினார். அந்த வகுப்பிலும் சர்வகலாசாலையில் இவரேதான் முதன் மாணவராயிருந்தார். படிப்பில் மட்டுமில்லை; விளையாட்டிலும் இவர் மிகவும் பிரியமுடையவர். புட்பால் விளையாட்டு மிகவும் பிடித்தம். அதில் இவர் பிரபலராயும் இருந்தார்.

எம். ஏ. தேறியவுடன் நமது ராஜேந்திரர் உபாத்தியாயரா யிருந்தார். ஆனால் இவருக்கு வக்கீல் தொழிலில் பிரவேசிக்க வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. 1909–ம் வருஷம் கல்கத்தா ஐக்கோர்டில், சர். சையத் ஷம்சுல் ஹூதாவிடம் வேலை பயின்றார். பின்னே தனியாக தன்னுடைய வக்கீல் தொழிலை ஆரம்பித்தார். அதில் இவருக்கு நல்ல செல்வாக்கும் புகழும் ஏற்பட்டது. கல்கத்தாவின் பிரபல வக்கீல்களில் இவரும் ஒருவராக, தொழில் ஆரம்பித்த கொஞ்ச காலத்திலேயே பிரசித்தி பெற்றுவிட்டார். பின்னே, பாட்னாவில் ஐக்கோர்ட் ஸ்தாபிக்கப்பட்ட காலத்திலிருந்து பாட்னாவில் தொழில் நடத்தினார். பணத்தைத் திரட்டுவதற்கு, வக்கீல் தொழில நல்லதொரு சாதனமாயிருந்த காலம் அது. பொருளாதார திருஷ்டியோடு பார்த்தால், நமது ராஜேந்திரருக்கும் அது ஒரு நல்ல காலம். வருஷம் ஒன்றுக்கு முப்பதினாயிருந்து நாற்பதினாயிரம் ரூபாய் வரை அவருக்கு வரும்படி கிடைத்துக் கொண்டுவந்தது. ஒரே ஒரு கேஸ் மட்டும் முப்பது—முப்பத்திரண்டாயிர ரூபாய்வரை பீஸ் பேசி நடந்துகொண்டிருந்தது. ஆம், பாக்கியலட்சுமி, தன்னுடைய சிரித்தவதனத்துடன் இவருடைய வீட்டில் வீற்றிருந்தாள். ஆனால் நமது தலைவர் ராஜேந்திரர் இந்த வருவாய்களைத் துச்சமாகக் கருதினார். பாரதமாதா அவரைக் கூவி அழைத்தாள். அவளுடைய சேவையால் ஆகர்ஷிக்கப்பட்ட ராஜேந்திரர், ஏழைகளுக்கு உழைக்க வேண்டுமென்ற எண்ணங்கொண்டு விட்ட ராஜேந்திரர் பணத்தைப் பெரிதென்று கருத முடியுமா?

பிறருடைய துயரத்தில் தன்னை அர்ப்பணம் செய்துவிடுவது சேவை. பிறருடைய துயரத்தை தன்னுடைய நல்வாழ்வுக்கு உபயோகித்துக் கொள்வதால் ஏற்படுவது பணம். இவ்விரண்டும் முரண்பட்ட காரியங்களல்லவா? நமது ராஜேந்திரர் சேவை செய்யத் துணிவு கொண்டார். எந்த ஆசையானது, 1910ம் வருஷத்தில், அதாவது இளம் பிராயத்தில், அவருடைய இதயத்தை ஆகர்ஷித்ததோ, அந்த ஆசையானது இப்போது விகாசமடைந்து விட்டது. இவருடைய சேவை மனப்பான்மையைக் கண்ட கோபால கிருஷ்ண கோகலே, தாம் ஸ்தாபித்திருக்கும், "இந்திய ஊழியர் சங்க"த்தில் நமது ராஜேந்திரரையும் ஒரு அங்கத்தினராக ஆகிவிடுமாறு தூண்டினார். இவரும் அதற்குச் சம்மதித்தார். ஆனால் இவருடைய தாயாரும், தமயனாரும் தடுத்துவிட்டனர். இதுபற்றி தம்முடைய தமயனாருக்கு

ராஜேந்திரர் எழுதிய லெட்டரின் சாரத்தையே நாம் மேலே கொடுத்திருக்கிறோம். அவருடைய தாயாரும் தந்தையாரும் தடுத்திரா விட்டால், நமது ராஜேந்திரர் ஒரு பெரிய அறிவாளியாக மட்டுந்தான் நமக்குக் காட்சியளிப்பார். ஆனால் நம்முடைய தலைவராக வரமுடியாதல்லவா?

கல்வியில் நமது ராஜேந்திரருக்கு எவ்வளவு விருப்பமிருந்ததோ அதே போன்று கல்வியைப் பரப்புவதிலும் இவர் அரும்பாடு பட்டிருக்கிறார். 1915 வருஷம் பாட்னா யூனிவர்சிடியை ஸ்திரப்படுத்துவது சம்பந்தமாய் சர்க்கார் ஒரு சட்டத்தைச் செய்தார்கள். அந்தச் சட்டமானது அப்படியே அங்கீகரிக்கப் பட்டிருக்குமானால் பீகார் மாகாணத்து வாலிபர்களுக்கு படிப்பு விஷயத்தில் ஏற்கனவேயிருந்த உரிமையும் பறிபோயிருக்கும். அந்தச் சர்வகலாசாலையினுடைய சகல அதிகாரங்களும் சர்க்காருடைய கையில் ஒப்படைக்கப் படுவதாயிருந்தது அந்தச் சட்டம். இந்த நேரத்தில் நமது தலைவர் சும்மா இருப்பரோ? கிளர்ச்சியை ஆரம்பித்தார். அந்தச் சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்வித்தார். சர்வகலாசாலையின் செனேட்டிலும், சிண்டிகேட்டிலும் ஜனப்பிரதிநிதிகளுக்கு ஸ்தானம் கிடைக்குமாறு செய்தார். 1920ம் வருஷம் வரை இவரும், மேற்கண்ட செனேட்டிலும் அங்கத்தினராயிருந்தார். பத்தாவது வகுப்பு வரை எல்லாப் பாடங்களும் ஹிந்தி மொழியிலேயே நடத்தப்பெற வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை செனேட்டில் நிறைவேற்றும்படி செய்திருந்தார். ஆனால் இந்தக் காலத்தில் ஒத்துழையா இயக்கம் ஆரம்பிக்கப் பட்டு விட்டதால் சர்வ கலாசாலையிலிருந்த தன்னுடைய பொறுப்புகளிலிருந்து விலகிக் கொண்டு விட்டார். சர்வ கலாசாலையில் ஹிந்தி பாஷைக்கு ஒரு முக்கிய ஸ்தானம் கொடுக்க வேண்டுமென்று மட்டும் இவர் உழைக்கவில்லை; இன்னும் பல வழிகளிலும், ஹிந்தி பாஷை மேன்மையுறுவதற்கு இவர் பாடுபட்டிருக்கிறார். ஒரு பாஷை வளர்ச்சியும், தேச வளர்ச்சியும் பிரிக்க முடியாதவையல்லவா? 1912ம் வருஷம் கல்கத்தாவிலும், 1920ம் வருஷம் பாட்னாவிலும் நடைபெற்ற "ஹிந்தி சாஹித்திய சம்மேளன"த்தின் வரவேற்புத் தலைவராயிருந்து அரிய சேவை செய்தார். பாட்னாவிலிருந்து "தேஷ்" என்று நடைபெறும் ஹிந்தி வாரப் பத்திரிகையின் பிரசுரகர்த்தராய் இவர் பல வருஷங்களிருந்திருக்கிறார். 1923ம் வருஷத்தில், காக்கினாடா காங்கிரசோடு நடைபெற்ற "தட்சிண பாரத ஹிந்தி சாகித்திய மகாநாட்டுத் தலைவராய் இவர் இருந்ததுண்டு. தன்னுடைய தாய் மொழியில் அத்யந்த பிரியம் உடையவர். இவரிடத்திலுள்ள ஒரு பெரிய விசேஷமான குணம் என்னவென்றால் இவர் ஆங்கிலத்தில் ஒரு எல்லையை அடைந்திருந்த போதிலும், ஏனையோரைப்போல் பேசும்போது ஆங்கிலவார்த்தைகளை உபயோகித்துப் பேசமாட்டார். இவருடைய நண்பர்கள் சிலர் சேர்ந்து ஒரு "கிளப்" ஏற்படுத்தியிருந்தனர். அங்கு பேசும் போது ஆங்கில வார்த்தைகளை உபயோகித்துப் பேசினால் அப்படிப் பேசும் அங்கத்தினர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒவ்வொரு பைசா அபராதம் செலுத்தவேண்டு

மென்பது ஏற்பாடு. ஆனால் அந்த களப்பில் யாவரினும் குறைவான அபராதம் செலுத்தியவர் நமது ராஜேந்திரர்தான்.

1917ம் வருஷம் சம்பரான் விவசாயிகள் சுரண்டப்படுவதிலிருந்துவிடுதலையளிப்பதற்காகமகாத்மாகாந்தியடிகள் சம்பரானுக்குச் சென்றிருந்தார். இந்தக் காரியம் வெற்றிபெறுவதற்கு, நமது ராஜேந்திரர் காந்திஜியின் வலக் கையாயிருந்து வேண்டிய சேவை செய்தார். காந்தியடிகளுக்கும் நமது ராஜேந்திரருக்கும் சந்திப்பு ஏற்பட்டது அதுதான் முதல் தடவை. 1930—32ம் வருஷங்களில் நடைபெற்ற சத்தியாக்கிரக காலத்தில் இவர் மூன்று முறை சிறைவாசம் அனுபவித்திருக்கிறார். இதைத் தவிர போலீஸாருடைய குறுந்தடிகளாலும் அடிபட்டார்.

தேசம், அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலையடைய வேண்டுமென்பதோடு ஏழைகள் பால் மிகுந்த இரக்கம் உள்ளவர் இவர். அதுவும் பீஹார் மாகாணம் இருக்கிறதே, அது ஏழைகள் நிறைந்த மாகாணம். இதோடு இயற்கையும் அந்த மாகாணத்தைப் பல தடவை சோதித்துவிட்டது. 1913ம் வருஷத்தில் தாமோதர் நதியும் புன் புன் நதியும் பெருக்கெடுத்து பெரிய கஷ்டத்தை யேற்படுத்தின. 1923ம் வருஷத்தில் கங்கையின் வெள்ளத்தால் அம்மாகாணம் அடைந்த கஷ்டங்கள் பல. 1931ம் வருஷத்தில் ஏற்பட்ட பஞ்சம், சம்பரான் வாசிகளை அநியாயமாக நாசமாக்கியது. ஆனால் இவைகளெல்லாம் சிறிய விஷயங்கள் என்று சொல்லும்படியாக 1934ம் வருஷத்தில் ஏற்பட்ட பூகம்பம், பீகார் மாகாணத்தையே அடியோடு சோதனைக் குள்ளாக்கியது. இந்தப் பூகம்பம் ஏற்பட்டது 1934ம் வருஷம் ஜனவரிமாதம் 15ந்தேதி. இக்காலத்தில் இவர் ஜெயிலிலிருந்தார். இவருடைய சேவையைப்பற்றி சர்க்காருக்கும் நல்ல பரிச்சய முண்டானதால், ஜெயிலிலிருந்து நமது ராஜேந்திரர் விடுதலை செய்யப்பெற்றார். அப்பொழுது இவருடைய சரீர நிலைமை ஆரோக்கியமாயில்லை. ஆனால் சேவையே பிரதான லட்சியமாகக் கொண்ட நமது தலைவர், தன்னுடைய உடல்நிலையையுங்கவனியாது சேவையி லீடுபட்டார். இவருடைய தலைமையின் கீழ் ஏற்படுத்தப்பட்ட பீகார் பூகம்ப நிதிக்கு இந்திய ஜனங்கள் லட்சக் கணக்கில் பொருள்களை வழங்கினர். இது மட்டுமோ? சாமான்கள் ஏராளமாக வந்து குவிந்தன. இவருடைய சேவையால் உள்ளம் பூரித்த நமது தேசத்தார் இவரை 1934-ம் வருஷம் அக்டோபர் மாதம் பம்பாயில் நடைபெற்ற காங்கிரஸ் மகா சபைக்குத் தலைவராகத் தெரிந்தெடுத்துத் தங்களுடைய அன்பையும் நம்பிக்கையையும் தெரிவித்துக் கொண்டனர்.